1/45

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு 68 பரல் 2–4

அக்டோபர் – டிசம்பர். 1993

JL
031 m211, N02
N93
192458
192458

செந்தமிழ்ச் செல்வி

29 அக் 1993

சிலம்பு-சஎ பரல்-உ அக்டோபர் 1993
திருவள்ளுவர் ஆண்டு-உ0உ௪ புரட்டாசி

''செந்தமிழ்ச் செல்வி''

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு

முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வி. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

உள்ளுறை

	பக்கம்
தமிழ்நெறி இயக்கம்	சக
பாவேந்தர் பாட்டுத்திறம்	சரு
''மந்தா கினி தந்த வரோதயன்''	சகூ
சேரர் தலைநகர் வஞ்சியே	ருஉ
நிலக்குப்பொறை	ருஅ
மறைமலையடிகளாரின் மாணவர்	சுஉ
பொருந்தச்சன்	சுஅ
திருமூலர் கூறிய ஆறு சமயங்கள்	சுகூ
பக்தி இலக்கியத்தில் தொல்படிவங்கள் : சில அணுகுமுறைகள்	எச

முருகவேள் பன்னிரு திருமுறை

—டாக்டர் தணிகைமணி
வ. சு. செங்கல்வராயப் பிள்ளை 940 0

அருணகிரிநாதப் பெருமான் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் முழுவதும், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் மற்றும் திருமுருகாற்றுப் படை, சேய்த்தொண்டர் புராணம் முதலியவைகளை பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளது. பாமரரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய முறையில் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை உரை வகுத்துள்ளார்கள்.

திருப்புகழ் மணத்தைப் பரப்புவதற்காக அனைத்துத் தொகுதிகளும் கணிப்பொறி மூலம் தொகுக்கப்பெற்று ஒருங்கே கிடைக்கக் கழகவழி வெளிவந்துள்ளன.

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு உ०உச - புரட்டாசி
அக்டோபர் - 1993
சிலம்பு-கூஅ, பரல்-உ

தமிழ் நெறி இயக்கம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இடையிலும் பொங்கி எழுந்த தமிழுணர்வு இன்று மங்கி மறைந்து வருகிறது. அன்று பொதுமேடையிலோ, இதழ்களிலோ தமிழுக்கு எதிராக யாரேனும் எழுதினால், தமிழறிஞர்களும் ஆர்வலர்களும் சீற்றம்கொண்டு எதிர்க்குரல் எழுப்பினர். இன்று இதழ்கள் எல்லாம் தமிழ்க்கொலை செய்யத் தயங்கவில்லை. தொலைக்காட்சியில் ஒருவர் ''ஆழ்வார்கள் கேவலம் தமிழ்ப் பாஷையில் பாடிப் போய் விட்டார்கள், தெய்வ பாஷையாகிய சமற்கிருத மொழியில் பாடிப் போயிருந்தால் எவ்வளவு உன்னதமாயிருந்திருக்கும்'' எனப் பேசுவதையும் இதுபோல நூற்றுக்கணக்காக எழுதியும் பேசியும் தமிழையும் தமிழரையும் இழிவுபடுத்தி வருவதையும் தமிழர்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்; திருக்குறள் இந்தியத் தேசிய நூலாவதற்குத் தகுதியற்றதென ஒருவரால் எளிதில் கருத்துக்கூற முடிகிறது. இன்று நம்மை இழிவுபடுத்துவது யாராலும் மிக எளிதில் செய்து மகிழக்கூடிய நடைமுறையாகிவிட்டது.

தமிழ்ப் பெயரிடுவது, தமிழில் சடங்குகளைச் செய்வது, தமிழுணர்வுடன் வாழ்வது என்றெல்லாம் வளர்ந்த நடைமுறைகள் முற்றிலும் ஒழிந்து, அனைத்திலும் ஹஷ் டஷ் என வரக்கூடிய சமற்கிருதப் பெயர்களும் சடங்குகளும் ஆகிவிட்டன. மழலையர் பள்ளி முதல், மாநிலத்தின் பல்கலைக்கழகங்கள் வரை தமிழுக்கு மாறான பகை நெருப்பே சுற்றிலும் கொழுந்துவிட்டு எரிகிறது. தமிழப் புலமை, இலக்கணக் கல்வி தமிழ்ப் புலவர்களிடமும் மிகமிக அருகிவிட்டது. தமிழிலும் கற்காலம், தமிழிலும் அருச்சனை செய்யலாம் எனத் தமிழனே தமிழைத் தாழ்த்திக் கேவலப்படுத்தும் முறைகட்கு அளவே இல்லை.

தமிழுக்கென [illegible] அரசுகள் தமது பதவியைக் [illegible] கொள்வதிலே [illegible] காலத்தைச் செலவிட்டுத் [illegible] மறந்தொழிந்தன. [illegible] டயின் வாய்மை

சஅ—[illegible]

192458
031m 21
N93

கூசாமல் தமிழுக்குச் சார்பான உறுதிமொழிகளை அள்ளி வீசுவதும் நடைமுறையில் துரும்பளவுகூட நம்மை நோக்கி நகராமல் பார்த்துக் கொள்வதும் இவ் அரசுகளின் நடைமுறை யானதால், இரு மடங்கு தீதாகிவிட்டது. தமிழுக்கு அனைத்தும் செய்யப்பட்டு வருவதுபோன்ற ஒரு மாயத் தோற்றம் ஏற்பட்டுத் தமிழ் உள்ளதையும் இழந்து வருகிறது; தனக்குப் பிறகும் நிலைத்திருப்பது தமிழும் தமிழினமுமே என்ற எண்ணம், இங்குள்ள எந்த அரசியல்வாதிக்கும் கருத்தி லிருப்பதாகத் தோற்றவில்லை. மேடையில் மட்டுமே தமிழை வளர்ப்பதாகப் பேசுபவர்களால் தமிழுக்கு அரண் செய்ய இயலாமல் போய்விட்டது.

உலகிடை ஏறத்தாழ இருபத்திரண்டு நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் எல்லாம் தமிழும் தமிழ்ப் பண்பாடும் மறக்கப்பட்டு வருவதால், அங்கங்கே மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பெருமுயற்சிகள் எடுப்பவர்கள், இங்குள்ள நம்மை எதிர்நோக்குகின்றனர். இங்குள்ளவர்களோ உலகளாவிய தமிழுக்கு உதவிகள் செய்ய முன்வருவதில்லை;

மீண்டும் தமிழகத்தில்தான் சமற்கிருத மொழிக்கும் வேதாந்தத்திற்கும் பேரரண் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியத் தலைமை அமைச்சர் முதல் குடியரசுத் தலைவர் வரை, ஒவ்வொருவரும் தென்னகம் போந்து, சமற்கிருதமும் வேதாந்தமும் ஓங்கிய பல்கலைக்கழகம் அமைப்பது, பல கோடி உதவுவது என அறிவித்த வண்ணமுள்ளனர். தமிழ் நாட்டு மடங்களோ தமிழையும் வளர்க்கவில்லை. சைவ சித்தாந்தத்தையும் நினைக்கவில்லை.

தமிழ் மிகமிக மதிப்புக் குறைவாகக் கருதப்படும் காலமாகிவிட்டது: தமிழில் படிவத்தை நிரப்பித் தந்த 'பாவ'த்திற்காக, ஒரு மாணவனுக்குப் படிப்பில் இடமில்லை, வகுப்பில் தமிழ் பேசியதால் ஒரு மாணவன் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டான்! தமிழில் கையொப்பமிடுவதை நம் அரசு அதிகாரிகள் மிகக் கேவலமாகக் கருதுகின்றனர். இசைக்கு மொழி தேவையில்லை என்ற பேச்சு மீண்டும் தீவிரமாக்த் தலை தூக்குகிறது: இவ்வாறே எண்ணிப் பார்த்தால் தமிழுக்கு மாறானவை—எதிரானவை ஆயிரமல்ல, அதற்கும் மேற்பட்டவையாகும்.

தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் பெருந்தலைவர் காமராசரும் விதைத்தவை, பயன்தரும் காலம் வந்தற்ற

போது, எப்படியோ எல்லாம் திசை திருப்பப்பட்டுப் போயின. இன்று தமிழுக்குத் தலைமை இல்லை, அரண் இல்லை, தமிழின் சார்பாக அதட்டிக் கேட்க ஆளில்லை, அரசுகட்கும் அஞ்சாமல் இடித்துரைக்கவல்ல நெஞ்சின ரில்லை;

இச் சூழலில் தான் இத் 'தமிழ் நெறி இயக்கம்' தோன்று கிறது: முழுவலிமையுடனும் பெருவீச்சுடனும் அஞ்சாமல் தமிழுக்குச் சார்பாக இவ் வியக்கம் இயங்கும்; அங்ஙனம் இயங்குவோர்க்கு வழிகாட்டும்.

இயக்கத்தின் இயல்புகள் :

தமிழ் மொழி, இனநலம் காக்கும் நோக்கில் அமையும் இவ் வியக்கம் அரசியல், சமயம், அரசு சாராதது; பொதுநலம் கருதி தனிப்பட்டவர்களின் கூட்டு முயற்சியால் உருவானது. தனி நிறுவனங்கட்கும் அரசு கட்கும் நெறிகளை எடுத்துரைப்பது, தமிழார்வலர்களை ஊன்றிய பற்றாளர்களைக் கண்டுகொள்வது. அவர்களைப் போற்றுவது: தமிழார்வமுடைய சிறுமழலையர் முதல் மாணவர்கள், ஆய்வாளர்களை இனங்கண்டு பரிசளித்து ஊக்குவிப்பது. ஊன்றிய தமிழ்ப்பற்றாளர் யாவரேயாயினும் அவர்களைச் சிறுசிறு கருத்து வேறுபாடுகட்காகப் புறக் கணிக்காமல் பகைமை பாராட்டாமல், போற்றி நட்புறவு கொள்ள முயல்வது. தமிழுக்கு அனைத்துத் துறைகளிலும், நிலைகளிலும் உரிய மதிப்பு ஏற்படப் பாடுபடுவது. தமிழும் தமிழரும் வளர, வாழ வழிகாட்டவல்ல கூர்த்தமதியும் திறனும் எங்கிருந்து வரினும் போற்றி ஏற்பது. நாளும் செயற்படுவதையே மூச்சாகக் கொண்டது: எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என ஆட்சி, கல்வி முதலியவற்றின் அனைத்து நிலைகளிலும் தமிழின் எல்லையை விரிவுபடுத்தி மேலும் வலிவுள்ளதாக்குவது. தனது விதிமுறைகளையும் உறுதி மொழியையும் சின்னத்தையும் ஏற்பார் அனைவரையும் ஏற்கும் அனைத்துக் கழகங்கள், நிறுவனங்களையும் தன்னுடன் இணைத்துக்கொள்வது. தமிழுக்கு மாறாகச் செல்பவர்களுக்கும் அங்ஙனம் செயற்படும் நிறுவனங்கட்கும் உடனுக்குடன் இனிய மொழியால் நல்வழியை எடுத் துரைப்பது; வழிகாட்டித் திருத்துவதும், அதற்கும் கட்டுப் படாவிட்டால் எதிர்ப்பது; அறப்போருக்கும் அணியமாவது;

தமிழன் தன்னை வெளிப்படுத்துவதைவிடத் தமிழைப் பெருமைப்படுத்தவே முந்த வேண்டும். இவ்வியக்கம் அடிமுதல் முடிவரை ஒரு கூட்டு முயற்சியாகவே நடைமுறைப்படுத்தப் படும்; "நான் சொன்னேன், இது என் கருத்து" என்றிவ்வாறு எதிலும் அதிக அழுத்தம் வைக்காமல், நாம் கருதினோம், சொன்னோம் எனத் தன்மைப் பன்மை நோக்கிலேயே பெரிதும் செயற்படப் பழக வேண்டும்; தனிப்பட்டவர் திறமையே கருதுதற்குரிய—தாயினும், அவை தமக்குள் அமைதல் வேண்டும்; வெளியுலகிற்கு, இவ்வியக்கம், ஒரு கூட்டு முயற்சியெனத் தோன்றுமாறுதான் இதன் ஒவ்வொரு செயற்பாடும் அமைய வேண்டும்.

மணிவிழாக் கண்ட மணிவிழா நாயகர் மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் முன்னின்று இயக்கும் இந்தத் தமிழ் நெறி இயக்கம் வெற்றி பெற வாழ்த்துகிறோம்;

பூண்: உலக்கைப் பூண், தடிப்பூண் என்பன, உலக்கையின் தலையிலும் தடியின் தலையிலும் செறிந்த வளையங்களை உணர்த்தும்; அவ்வாறே கைகளில் செறிந்த முறையில் அணியப்பட்டது முதலில் பூண் எனப்பட்டது போலும்! காப்பு, கொலுசு, கடகம், கங்கணம், மோதிரம் என்பவை கைவிரல் போன்ற உறுப்புகளில் இறுகிய நிலையில் அணியப் பெறுவன. ஆதலால் 'பூண்கள்' என முதலிற் பெயர் பெற்றிருக்கலாம்; பின்னர்க் காலப்போக்கில் இக்காரணச் சிறப்புப் பெயர் பல அணிகளையும், காரணப் பொதுப்பெயர் நிலையில் நின்று குறிக்கத் தொடங்கின போலும்.

(பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப.86-7)

பாவேந்தர் பாட்டுத்திறம்

டாக்டர் இர. குழந்தைவேலு, தமிழ்ப் பேராசிரியர்,
கோயமுத்தூர்.

(முன்னிதழ் ௧௦ ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியீட்டு வழி

நடந்த நடை

மூன்றாவது கூறு வெளியீட்டு வழி.

பாவேந்தர் தம் பாவோ எளிமையது; இந்த எளிமை என்பது தோற்றத்து எளிமையைக் குறிப்பது; ஆயினும் அது பயன் எளிமை ஆகாது. இப் பாப் படைப்பில் பாநலங்கள் பல காணப் பெறுகின்றன. இவ்வாறு எளிமை இருக்கத் திட்ப நுட்பஞ் செறிந்த சொற்றொடர் சுரக்கும் ஆழ்ந்த கருத்துப் பயனும், அப் படைப்பாற்றலில் உண்டு.

இப் பாட்டுக்கலையின் நிறைநலத்தைப் பாவேந்தர் கண்டு, 'எதிர்பாராத முத்தம்' என்னும் தம் படைப்பில் காட்டும், பெண் ஒருத்தியின் நடைச் சிறப்பை கூறும். இந் நடைச் சிறப்பினைக் காட்டுதற்கு, அவர் கையாண்ட சொல் வெளியீட்டு வழியில் ஆக்கம் வெளிப்பட்டு விளங்குகிறது.

அம் மகள் பெயர் பூங்கோதை. அவளது சிற்றிடையில், இடக்கை தழுவலால், குடம் நிற்கிறது. அவள் அடியெடுத்து வைத்தாள். அது குறுநடை அன்று; சிறுகை நீட்டிக் குறுகக் குறுக அடியிட்டு நடக்கும், குழவி நடை அன்று; குழந்தைப் பருவத்தில் நடை பழக, அந் நடை வேண்டும்; அப் பருவம் அவள் கடந்தாள். ஆண் ஆனை அவளோ அகவிடத்தார் கொண்ட ஆசாரத்தைக் கடந்தாளல்லள்.

பாவேந்தருக்கு நடையிருந்து, பெண்மை வாழ்க என்றவாறு குறிப்பிட்டுப் பாராட்டும் சிறந்ததொரு நடை அது; அவள் எழுந்து அடியிட்டு நடக்கத் தொடங்கும் நடையோ பாவின் பளிக்கத்தக்க நடை. அது காண்பதற் குரியது:

''நீலப் பூவிழி நிலத்தை நோக்கக்
கோலச் சிற்றிடை கொடிபோல் துவளச்
செப்புக் குடத்தில் இடது கை சேர்த்தும்,
அப்படி இப்படி வலது கை யசைத்தும்
புறப்பட்ட மங்கை பூங்கொடி என்பவள்;
நிறப்பட் டாடை நெகிழ்ந்தது காற்றில்''.

முரண் நடை

தலைவன் பார்க்கும்போது, அவளது நீலப் பூவிழி நிலம் பார்த்தது என்று சொல்லுதற்கு இடமில்லை; அப்போது அங்குத் தலைவனைக் காணோம். எனினும் அவளுக்கு நிமிராத நன்னடை அமைந்தது. நிலம் நோக்கும் பார்வை அமைந்தது. ஆதலால் சூழலுக்கு முரண்பட்ட நடை அவளுக்கு அமைந்தது.

மேற்சென்று அதனைக் காணுதல் வேண்டும். அவளது இற்றிடையில், நீர் நிரப்பப் பெற்ற பெருங்குடம் சேர்ந்ததால், சமநிலை பேணுதற்கு அவள் நிலம் நோக்கினாளோ என்றும் நோக்குதல் வேண்டும். அவள் நடையோ தண்ணீர்த் துறை நோக்கிச் செல்லும் நடை. எனவே அவ்வாறு சொல்லுதலும் பொருந்ாது. ஆதலால் அவளது இடையோ குடமும் தாங்குதற்கு இயலாத அளவிற்குச் சிற்றிடை என்று அல்நயம் கூறுதல் கூடுமாயினும், இங்கு இது காணுதற்குரியது; அறிவோடியைந்தவர்க்கு இதனைக் காட்டுதல் சிறந்ததொன்றன்று;

நடையழகு

அவள் நடக்க நடக்க, அந் நடையைத் தொடர்ந்து காண்பதே இங்கு வேண்டும்; அவ்வாறு கண்டால், முறுவல் பூக்கும் விருந்தளித்தலோடு அந் நடை, நெஞ்சம் தொட்டள்ளுதல் காணலாம்.

இங்குக் கருதத்தக்க நடையோ, ''அப்படி இப்படி வலது கை அசைத்து'' அவள் நடந்ததாக மேலே கண்ட நடையாகும்;

பாவேந்தர் ''அப்படி இப்படி'' என்று அவள் நடையைக் குறுகக் குறிப்பிட்டுக் கூறினார்; ஆயினும் அவள் 'எப்படி எப்படி' நடந்தாள் என்று அவர் அந் நடையைச் சொல்லோவியம் செய்து காட்டவில்லையே எனக் கேட்கத் தோன்று

கிறது. எனினும் அவளிடத்தில், அவர் பொருத்திக் காட்டும், துள்ளித் தாவலோடு நடக்கும் நடையில், ஓர் அழகு தோன்றாமல் இல்லை.

இரண்டாட்டம்

இவ்வாறு இங்கு ஓர் இரண்டாட்டத்தில் நிற்கச் செய்தலோடு கேள்வி கேட்குமாறும் இழுத்துவிட்டு, அவர் மயக்குகிறார். ஆதலால் மீண்டும் அவளிடத்தில் அணுகிச் சென்று, அவளது நடையைக் கூர்ந்து நோக்குதல் தகும்.

இத் தொடக்கத்தில் அவளுக்குக் குளிர் வடிக்கும் நிலா முகம் அமைந்தது என்பது கருத்தில் நிறுத்தற்குரியது. அவளுக்கு இம் முகத்தைப் பாவேந்தர் அளித்த குறிப்பே இங்கு நினைவிற்குக் கொண்டுவரத்தக்கது;

இரு சொல் ஆக்கம்

வாழ்க்கை நடப்பில் 'அப்படி இப்படி' என்று இராத அவள் உள்ளத்தில் உவகை துள்ளுகிறது; முகமோ முற்பட்டு அந்த உள்ளத்து உணர்ச்சியைக் காட்டுகிறது; அவளிடத்துக் கட்டவிழ்ந்த ஓர் உணர்ச்சியின் துள்ளலால், 'அப்படி இப்படி' என்று குறிப்பிடுமாறு, அவள் நடந்த நடை இருந்தது என்பது ஏற்படுகிறது. ஆதலால் 'எப்படி எப்படி' என்று சொல்லுதற்கு இயலாதவாறு, அவள் நடை அமைந்தது. இம் முறையில் கருத்து வெளியீட்டிற்கு, 'அப்படி இப்படி' என்னும் வாய் வழக்கு எளிமை கொண்ட இரு சொற்களைப் பொருந்துமாறு அவர் பெய்தார்;

இச் சொற்களின், பெயர்ந்து மாற்ற இயலாத அமைப்பழகே அவள் நடையழகைச் சுட்டிச் சிறக்கிறது. இப் படைப்பாற்றலில், படைப்பார் தம் பா வல்லமை பன்னு பாடுகிறது. இத் திறத்தில் அவர் பா வல்லாளர் என்பது விளங்கும்; அவரது கருத்து வெளியீட்டு முறையில், தேக்கம் உண்டோ என்று கருதும்போது, முடிவாக, இதற்கு மேல் சொல்லுதற்கு இயலாது என்ற ஆக்கமே வெளிப்பட்டுத் தெளிவாகிறது.

மொழி நடை

இப் பாவிடைப்பட்ட கருத்து, அவரது நெஞ்சத்தைச் சுற்றிக் கொண்டது; நெஞ்சில் பட்டது; கரைந்தது; அக்

கருத்தாக அவர் மாறுகிறார்: ஆதலால் இப் பா விருந்து ஆக்கத்தில், அவள் நடையைக் காட்டுதற்குத் தம் மொழி நடையிலும், அவர் இலக்கணத்தைக் கடந்து நின்றார்: இடம், வலம் எல்லாம் எளிமையாகக் கடந்து, இடது, வலது என்றவாறு எங்கெங்கோ நடந்தார்: இலக்கணம் அவருக்குள்ளே கரைந்த வலிமையால், காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றவாறு அவர் ஆண்ட சொற்கள், வாய் வழக்குத் தளத்திலிருந்து, இலக்கியத் தளத்திற்குப் பெயர்ந்து ஆக்கம்பெற்று உயர்ந்தன: அந் நடை கருத்துக்கேற்ற அமைவினைக் கண்டது. இங்கு உள்ளீடு, உருவத்தைத் தொடுகிறது: உள்ளீடு, உருவத்திற்கு இடம் பெயர்கிறது. அவள் நடை, மொழி நடைக்கு மாறுகிறது:

பா நடையில் இத்தகு எளிமை மாற்றமே வளர்ச்சி ஆகும் எனல் வேண்டும்; ஆக்கம் ஆகும் எனல் வேண்டும். இவ் வளர்ச்சியில் வேண்டத்தக்க பா நலத்து ஆக்கமே ஏற்பட்டது, இதனால் அவள் நல்நடையோ பாவில் சுவைக்கத் தக்கதாகச் சிறந்தது: வெளியீட்டு முறையில் பிறந்த ஆக்கம் இது.

முழுமை நோக்கு

இதுகாறும் முப்பாற் பகுதியில் கண்ட விளக்கங்களையெல்லாம் தொகுத்து, முழுமை நோக்கில் முறையாகக் காணவே வெளிப்படும் சில உண்மைகள், இங்கே அறிதற்குரியன ஆகின்றன:

தமிழ் மக்கள் வாழ்க்கை நெறிமுறை, பாவேந்தர் பாப்படைப்பினைக் கருத்தோடு வளர்க்கும் தாப்பாலாக அமைந்தது. அப் பாப் படைப்போ தமிழ் மக்கள் வாழ்வினைத் தகுதியாக வளர்ந்து வழிகாட்ட முனைந்தது என்பது ஒன்று.

மற்றொன்று பாவேந்தர் தம் பாப் படைப்பின் அடிப்படைக் கலைத்திறன் இஃது என்பதாகும்;

இன்னொன்று படைப்பின் சொல், பொருள் அமைப்பில் வேறுபாடு, அதனைத் தெளிவோடும் சுவையோடும் வெளிப்படுத்தும் முறை எல்லாம் அவர்தம் தனித் தன்மையைக் காட்டுதல் மெய்யே ஆகும் என்பதாகும்.

"மந்தா கினி தந்த வரோதயன்"

(கந்தரநுபூதி-33)

[காங்கேய சுப்ரமணியன்]

தமிழகக் கோயிற் கலைச்செல்வர்
கி. இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விசாரத்,
கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (ஓய்வு)
பொள்ளாச்சி.

சூரபன்மன் ஆகியோர் செய்த கொடுமைகளுக்கு ஆற்றாத அமரர்கள் இறைவனை அடைக்கலம் அடைந்தனர். அவன் அவர்களது துன்பத்தைத் துடைக்கத் தன் பழமையான ஆறுமுகங்களின் நெற்றிக் கண்களினின்றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தான்; அத் தீப்பொறிகள் ஆறினையும், இறைவனின் ஆணையின்படி, காற்றுக் கடவுள் மற்றும் தீக்கடவுள் கங்கையில் கொண்டுபோய்விட அவள் அவற்றைச் சரவணப் பொய்கையில் சேர்த்தாள்;

"அரன் அருள் முறையினை அறிந்து கங்கைதன்
சிரமிசை ஏந்தியே சென்றோர் கன்னவிற்
சரவணம் எனுந் தடந்தன்னிற் சேர்த்தனள்"

(1-11-87)

என்பது கந்தபுராணம். ஆறு தீப்பொறிகளும்,

"கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒரு திரு முருகன்" (கந்தபுராணம் 1-11-92)

ஆகத் தோற்றம் உற்றன.

"தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்று உய்ப்பப்—போதொரு சற்று
அன்னவளும் கொண்டைமதற்கு ஆற்றாள் சரவணத்திற்
சென்னியிற் கொண்டு உய்ப்பத் திருவுருவாய்"

(வரிகள் 48-81)

என்பது "கந்தர் கலிவெண்பா".

இவ்வாறு ஆறு தீப்பொறிகளும் கங்கையால் சரவணப் பொய்கையில் விட்டமையால், முருகன் கங்கையின் புதல்வன் எனப் பரவப்பட்டு, காங்கேயன் என்ற திருப் பெயரினைப் பெற்றான்.

> "ஆயிர முகத்து நதிபாலன்"
> (திருவேளைக்காரன் வகுப்பு—திருவகுப்பு)

என்றும்,

> "முகம் ஆயிரம் விளங்கியது தோர்
> ஆறுதர வந்து அருளும் ஆறுமுக புண்டரீகன்"
> (பூத வேதாள வகுப்பு—திருவகுப்பு)

என்றும் போற்றுவர் அருணகிரி வள்ளல். அதாவது பல முகங்களாகப் பரந்து வரும் ஒப்பற்ற கங்கையது தாங்கித் தரத் தோன்றி அருளின தாமரை போன்ற ஆறு திரு முகங்களை உடையவன் என்பதாம்.

சிதம்பர அடிகள் தம் "திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழில்",

> "கருகுஞ் சகருக்கு அருள் புரிந்து
> கடலின் அகடுகிழித்து ஒழுகும்
> கங்கைப் பெருந்தாய் ஆயிரமாம்
> கனிவாய் முத்தமிடும் அமுதும்" (437)

என்பர் சாம்பராகிய சகரருக்கு அருள் புரிந்து, கடலின் வயிற்றைக் கிழித்துச் செல்லும் அருளும் ஆற்றமும் ஒருங்கே பெற்ற கங்கை என்ற பெருமைமிகு தாய் கோவைக் கனி போன்ற தன் ஆயிரம் வாய்களாலும் முத்தம் அளிக்கும் அமுதம் உடைய திருவாயினை உடைய முருகன் எனத் தாய் தன் மகனைக் கொஞ்சி முத்திமிகும் பாங்கினை எடுத்து உரைக்கிறார். கவிராச பண்டாரத்தையா தம் திருமலை முருகன் பிள்ளைத் தமிழில்"

> "குளிருஞ் செழுங்கங்கையிற் பிறந்த
> கோமே தகமே" (24)

என அழகுற அழைக்கிறார்.

கங்கையின் மைந்தனான இவனை "காங்கேய சுப்ர மணியன்" என்ற பெயரில் திருவுருவம் அமைக்க ஸ்ரீதத்வத நிதி என்ற நூலில் விதிகள் கூறப்பட்டுள்ளன: அதன்படி, இவனுக்கு ஒரு தலை, மூன்று கண்கள், நான்கு கைகள் இருக்கும்: கங்கை, யமுனை போன்ற ஆறுகளைப் பெண் களாக உருவாக்குவார்கள். மகர மீன் மீது நிற்கும் அவர்கள் நீலோற்பல மலர்களால் அலங் ரிக்கப்பட்டு, கைகளில் நீர் நிறைந்த குடங்களை ஏந்தியபடி அமைக்கப்படுவார்கள். கங்கையின் புதல்வன் என்ற காரணத்தால் இவனும் நீலோற்பல மலர்களால் அணி செய்யப்பட்டு, ஒரு கையில் நீர் நிறைந்த குடத்துடன் மகர மீன் மீது நின்றபடி உருவாக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது: இவனது தலலயை கரந்த மகுடம் அலங்கரிக்க, முன் வலக் கையில் தன் தாயான கங்கையைப் போல்று நீர் நிறைந்த குடமும், பின் வலக் கையில் தன் தந்தையான சிவபெரு மானைப் போன்று பரசும் இருக்க, முன் இடக் கையில் தீக் கோல் இருக்க வேண்டும். இது முருகனது திருவுருவம் என்பதற்கு ஏற்ப, இந்த வடிவின் பின் இடக்கையில் கோழிக் கொடி அமைக்கப்பட வேண்டும்.

இத்தகைய அரிய வடிவத்தைக் காண பொள்ளாச்சி வர வேண்டும். இங்குள்ள ஐயப்பன் திருக்கோயிலில் இந்தத் திருவுருவம் கருவறையின் சுற்றுப்பாதையில் கருவறைக்குப் பின்னால் உள்ள சுவரில் ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது: ஆகம விதிகளின்படி மகர மீன் மீது நின்றுள்ள இவனது நான்கு கைகளில் வலக் கைகளில் பரசும், நீர் நிறைந்த குடமும் காணப்பட, இடக் கைகளில் தீக் கோலும், கோழிக் கொடியும் உள்ளன.

இந்த வடிவம் தமிழகத்திலோ அல்லது இந்திய நாட்டின் வேறு பகுதியிலோ இருப்பதாகத் தெரியவில்லை. ஆகம விதிகளின்படி இது இருப்பினும், இது ஒரு அரிய படைப் பாகும்.

சேரர் தலைநகர் வஞ்சியே

பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)

பேராசிரியர் பசவலிங்கம் எழுதிய சேரர் தலைநகர் வஞ்சி என்ற நூற்பிரதியை முதலில் சேகர் பதிப்பகம் சுந்தரம் எனக்குக் கொடுத்து முகவுரை கேட்டார். அப்போது நான் டாக்டர் கே. வி. ராமன் வஞ்சி என்றழைக்கும் இற்றைக் கொடுங்களூரில் சேரமான் பறம்பை அகழ்வாராய்ச்சி செய்து கி. பி. 9 ஆம் நூற்றாண்டு முற்பட்ட எந்தத் தொல் பொருள்களும் கிடைக்கப் பெறாததால் இது வஞ்சி என்ற சேரர் தலைநகரில்லை என்று திட்டவட்டாகக் கூறியுள்ளார். இதை எந்தக் கேரள வரலாற்றாசிரியர்களும் இதுவரை மறுத்தாரில்லை. சங்க முசிறியே கொடுங்களூர் என்று கருதப்படுகின்றது. முசிறித் துறைமுகத்தைக் கூறும் எந்தச் சங்க நூலும் முசிறியும் வஞ்சியும் ஒன்று என்று கூறவில்லை. திருவாங்கூர் மன்னரும் கொச்சி மன்னரும் வஞ்சிபாலர் என்றே கூறிக்கொண்டனர், கொடுங்களூரில் வாழ்ந்த பிற்காலத்திய மன்னர் மகோதயர் என்றே கூறிக்கொண்டனர். வஞ்சிபாலர் என்று கூட கூறிக்கொள்ளவில்லை. இந்த ஆசிரியர் நான் கூறிய தாவர நூற் சான்றுகளை முற்றிலும் மறந்துவிட்டார். டாக்டர் நாகசாமி கே. வி. ராமனின் கொடுங்களூர் அகழ்வாராய்ச்சியும் தான் செய்த கரூர் அகழ்வாராய்ச்சியும் இராவதம் மகாதேவன் கருருக்கு அருகில் கண்ட புகலூர் குகைக் கல்வெட்டில் பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட மூன்று பரம்பரை சேர அரசர்கள் பெயர்க்கும் ஐயம் திரிபற கொங்கு நாட்டுக் கருரே சேரர் தலைநகர் என்று எண்பித்துவிட்டது என்று கூறினார்.

அத்துடன் பி. எல். சாமி அவர்களின் கட்டுரை முற்றிலும் புதிய சான்றுகள் கொண்டு தாவர நூற்செய்திகளைக் கொண்டு எண்பித்துள்ளார். அவர் ஆங்கிலத்தில் Biological Sciences are valuable than literary evidences as they exact sciences என்று கூறினார். இந்தியாவிலேயே தலையாய அகழ்வாராய்ச்சியாளரும் பேராசிரியருமான டாக்டர் சங்காலி கீழ்வாலை ஓவியத்தைப் படத்தில் பார்த்து எழுதிய சில செய்திகளைக் கூற விரும்புகின்றேன்; இலக்கியங்களிலோ இதிகாசங்களிலோ புராணங்களிலோ கூறப்

படும் செய்திகள் அகழ்வாராய்ச்சி வழியோ, கல்வெட்டு வழியிலே, நாணயவியல் வழியிலே, விலங்கியல் தாவரவியல் வழியிலே எண்பிக்கபட வேண்டும். அப்படிப் பார்க்கும் போது கொங்கு நாட்டுக் கருரே சேரர் தலைநகரம் என்பதற்கு சங்காலியா கூறிய அத்தனைச் சான்றுகளும் நன்கு எண்பித்து விட்டன.

கோயம்புத்தூர் மாவட்டத்தைத் தவிர்த்து அதற்கடுத்த படியாக உரோமை அரசர் படம் பொறித்த பொன் நாணயங்கள் கரூரிலேதான் நிறையக் கிடைத்தன. அமராவதி ஆற்றுப் படுகையிலும் கிடைக்கின்றன. சேரமன்னன் புறநானூற்றில் கூறப்பட்ட மாக்கோதையின் உருவம் பொறித்த சங்ககால நாணயம் கரூரில் தான் கிடைத்தது. மாக்கோதைபுரம் என்றிருக்க வேண்டிய கொடுங்களூரை மக உதயபுரம் என்று கேரளர் வடமொழிப்பற்றால் மாற்றியுள்ளனர். கரூரில் உரோமானிய நாணயங்கள், கிரேக்க நாணயங்கள், இவர்களுக் கெல்லா முந்திய பொனீசிரியர் நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. மற்றும் ரோமானிய கடவுளர் பொறித்த தங்க மோதிரங்களும் சில கிடைத்துள்ளன. இத்தகைய பொருள்கள் கொடுங்களூரிலோ பிற சேர ஊர்களிலோ கிடைக்கவில்லை. உறையூரில் வாழ்ந்த தித்தன் என்ற வேளிர் தலைவனைப் பற்றி பெயர் குறித்த முத்திரை நாகசாமியால் கண்டுபிடிக்கப் பட்டு தினமணி சுடரில் படத்துடன் வெளிவந்துள்ளது. உறையூருக்கு அருகில் கரூர் இருந்ததற்கு இதற்குமேல் சான்று தேவையில்லை.

அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சி எப்படி சங்க காலத்தை உறுதியிட்டு நிலைநிறுத்தியதோ, அதே அரிக்க மேட்டு ரோமன் மதுச்சாடிகள், அரைட்டன் உரோம மட்பாண்டங்கள் கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டுக்குரிய தமிழ்—பிராமி எழுத்துகள் பொறித்த மட்பாண்டங்கள் எல்லாம் கேரளத்தில் எங்குமே கிடைக்கவில்லை. கழுமலத்தில் யாத்த களிறு கரிகாலனுக்கு மாலை சாற்றித் தூக்கிச் சென்றபோது தடுமாறி உறையூருக்குச் செல்வதற்குப் பதிலாக கரூருக்கு சென்ற செய்தி பழமொழியில் வந்துள்ளது. கழுமலம் கரூர் அருகில்தான். அங்கிருந்து களிறு கொடுங்களூர் போயிருக்க முடியும்; மற்றும் கருரைச் சுற்றித்தான் சிலப்பதிகாரம் கூறும் குணவாயிலும் பதிற்றுப்பத்து கூறும் பைஞ்ஞீலியும் உள்ளது. வஞ்சி என்ற ஊர்கள் பல கொங்கு நாட்டில்தான் உள்ளன;

கேரளத்தில் இல்லை. நான் சுள்ளியம் பேராறு எப்படி சூர்ணி என்று மொழி பெயர்க்கப்பட்டது அந்த ஆற்றருகே சுள்ளிச் செடி விளைந்துப் பார்த்துக் கூறினேன். அங்கு வஞ்சி மரம் சதுப்பு நிலத்தில் வளர முடியாது. இந்த ஆராய்ச்சிக்கெல்லாம் நாற்காலியில் உட்கார்ந்து செய்யும் புத்தகம் படிப்பாராய்ச்சி போதாது. களப்பணி ஆராய்ச்சி இன்றியமையாதது.

ரா. இராகவய்யார் திருவனந்தபுரத்தில் தமிழ்ப் பண்டிதராயிருந்தவர்; வடமொழியும் மலையாளமும் படித்தவர் அவரது ஆராய்ச்சி நம்பலாம். தேக்கடியில் கலக்கும் ஆறே சங்க நூலில் அடையில்லாமல் பேராறு எனப்பட்டது. ஏனென்றால் இந்த ஆறுதான் சேர நாடு உட்பட்ட தமிழகத்தில் நீண்ட தூரம் ஓடும் பெரிய ஆறாகும். ஆறுகளுக்குப் பெண்ணையம் பேராறு, காவிரிப் பேராறு என அடைமொழியிட்டு அழைப்பது வழக்கம். அதே வழக்கம் தெலுங்கில் இன்றும் உள்ளது. கிண்ணப் பேரேறு (கிருஷ்ணா) போல பேரேறு என்று அடைமொழியிட்டு அழைப்பர். ஒரிசாவில் கூட மஹாநதி என்ற ஆற்றுப் பெயர் பேராறு என்பதின் வடமொழி மொழிபெயர்ப்பு ஆகும். பெரியாறு என்பதை பூர்ணவாணி என்று ஓரளவு பொருள் தெரிய மொழி பெயர்த்து நன்கு புலனாகிறது. பொருனை பூர்ணா ஆனது ஏற்றுக் கொள்ளக்கூடியது அன்று. வடமொழி அறிந்தவர்களிடம் நான் கேட்டபோது அவ்வாறு மாற முடியாது என்று கூறினார்கள். இந்த ஆசிரியர் எந்த அளவு குழப்பம் செய்துள்ளார் என்றால் காலடி வழியாகச் செல்லும் இந்த ஆறு கொடுங்களூரில் கடற்கரையில் கலக்கவில்லை. அதுபோல பூர்ணா நதி கடலில் கலக்குமிடத்தில் சங்க காலத்திய வஞ்சியுமில்லை. வஞ்சி என்பது கொடுங்களூரே என்று கூறும் இவ்வாறு பல மைல்களுக்கு அப்பாற் பாயும் பூர்ணா நதியைக் கூறி பூகோளத்தையே குழப்பி விட்டுள்ளார். சுள்ளிய பேராறு என்று தெளிவாக தேக்கடி செல்லும் ஆற்றிலிருந்து பிரித்துக் காட்டவே தெளிவாக சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். ஊரின் பெயர்களையும் ஆற்றின் பெயர்களையும் அதன் கரையில் இயற்கையாக வளர்ந்த மரம் செடி கொடிகளின் பெயருடன் அழைப்பது சங்க மரபாகும்.

பனை என்ற பெண்ணைப் பெயரால் பெண்ணையாறும், காஞ்சி என்ற மரத்தின் பெயரால் காஞ்சியாறும் உள்ளது.

இது கவனிக்கத்தக்கது. சுள்ளியம் பேரியாறு கலந்ததால் வடமொழியில் சூர்ண என்று மொழி பெயர்த்தும் அதனருகே கடலில் கிடைத்த முத்தை சௌர்ணெயம் (சூர்ணாயம்) என்று அர்த்தசாத்திரமும் குறித்தது கவனிக்கத்தக்கது. பொருநையாறு கரூரின் அருகில் பாயும் ஆன்பொருநை மற்றுமின்று. தாமிரபர்ணியும் தண்பொருனை என்று அழைக்கப்பட்டு தாமிரபர்ணி என்று மாற்றப்பட்ட அது கடலில் பாயும் கொற்கை அருகில் இருந்த இலங்கையை 'தம்பபன்னி' என்ற பௌத்த பாலி நூல்கள் அழைத்தன. கோவூர்கிழார் எழுதிய பாடலின் பொருளைச் சரிவரப் புரிந்து கொள்ளாததால் வஞ்சி முற்றம் வயக்களனாக என்பதால் வஞ்சியென்ற கொங்கு நாட்டுக் கரூரை வலிமை மிக்க களமாகக் கொண்டு (Case) குடபுலத்ததரி அதாவது மேற்குப் புலத்துக்கு வழியாக சென்று தான் பொருள் கொள்ள வேண்டும். களன் என்பதற்கு போர் செய்த களம் என்று கொள்ள வேண்டுவதில்லை. சங்க இலக்கியத்திலேயே களம், களன் என்பதற்கு வேறுவேறு பொருள்கள் உண்டு. இவ்வாசிரியர் புறம் 373ஆம் பாட்டில் கொளுவை சரிவரப் படிக்கவில்லை. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன் கருவூர் எறிந்தான் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. உறையூரில் வாழ்ந்த கிள்ளிவளவன் முதலில் கரூரை எறிந்து அதை பவஞ்சி என்ற சேரர் தலைநகரை வயக்களனாகக் கொண்டு (Strong face) சேரருடைய குடபுலத்தை நோக்கி அதவினான் அதாவது வழிச் சென்றான் என்பதே இயற்கையான பொருள்.

சேரர் தலைநகர் குடபுலத்துக் கொடுங்களூரானால் சோழன் அதை வென்று கொண்டு குடபுலம் அதரிச் செல்வது எப்படி? இந்தக் கருத்து Illogical அல்லவா இருக்கிறது. மரந்தை முற்றம் என்பது ஆறு கலப்பதால் கூறப்பட்டதே ஒழியவே வேறன்று. மற்றும் அந்த ஊர் ஈழ நாட்டில் உள்ள மாதோட்டம் என்று அறிஞர்களிடைய கருத்து வேறுபாடு உண்டு. முட்டம் என்பதே முற்றத்திலிருந்து திரிந்தது என்பதும் தவறு. இரணிய முட்டத்து கௌசிகனார் என்ற சங்க புலவர் பெயர் உள்ளது. முட்டம் என்பது முடுக்கு என்ற பொருள் பெற்ற ஸ்ரீமுஷ்ணம் என்ற பெயரில் முட்டம் வடமொழியில் தவறாக முஷ்ணம் என மாற்றப்பட்டது. பூர்ணா என்ற பெரியாறு கலக்குமிடத்தில் வஞ்சி என்ற ஊரே இல்லை; கேரள அறிஞர் குஞ்சன்பிள்ளை கரூர்

படன்னா என்ற ஊரையே சேரர் தலைநகரமான கரூர் என்றார் அதை கேரள அறிஞர்கள் கூட ஏற்றுக் கொள்வதில்லை. சேக்கிழார் கூறிய அஞ்சைக் களம் பிற்காலத்தில் கொடுங்களூருக்கு கொங்கு நாட்டு கரூரிற்கு வஞ்சி என்று வழங்கி அதை அஞ்சைக்களம் ஆக்கிவிட்டார்கள். கொடுங்களூருக்கு வஞ்சி என்ற பெயர் மலையாள இலக்கியங்களிலோ கல்வெட்டுகளிலோ இல்லை. கொடுங்களூரில் இருந்து யூதர்க்குக் கொடுத்த செப்புப் பட்டயத்தில் (கி. பி. 9) வஞ்சி என்ற பெயரோ கரூர் என்ற பெயரோ காணப்படவில்லை.

சிறுபாண்ணாப் படையும் தவறு. நல்லியக்கோடன் சிலங்காவில் இருந்து வந்து கூடியேறியவன். ஓவியர் குடியில் வந்தவன் அந்தக் குடி இன்றும் ஈழநாட்டில் உள்ளது அவன் இலங்கையில் வந்ததால் இலங்கை என்ற பெயரைக் காரப் பெயராகக் கொண்டு கருவொடு பெயரிய ஊரை அமைத்ததையே தெரிவிக்கின்றது. இராவணன் என்ற பெயர் சிறுபாணாற்றுப் படையிலோ எந்தச் சங்க நூல்களிலேயோ வழங்கவில்லை; புறநானூற்றில் அரக்கன் என்ற குறிப்பு ஒன்றுதான் உள்ளது. கிடங்கில் அருகே சிறுமாவிலங்கை, பெருமாவிலங்கை என்ற ஊர்கள் இன்றும் உள்ளன.

இணைப்பாகுபாட்டில் கருப்பொருள் என்ற சொல்லில் கரு என்பது உள் என்ற பொருளிலேயே வழங்குகின்றது. கோயில்களில் கருவறை என்பதிலும் அதே பொருளில் தான் வழங்குகின்றது. மற்றொன்று அடிப்படைச் சான்று தாலமி எழுதிய பூகோளக் குறிப்பில் கருவூரை உள்ளூர் என்று தெளிவாக எழுதியுள்ளார்: சேரமான் கருவூரறிய ஒள்வாட் கோப் பெருஞ் சேரலரும் பொறை என்ற கொளுவில் உள்ள ஏறிய என்ற சொல்லை எறிந்த என்று பொருள் கொண்டு இந்த ஆசிரியர் இடர்ப் படுகிறார். கட்டிலேறிய என்று சங்க நூல்களில் வந்த வழக்காகும். சேரமன்னன் கட்டிலேறிய நாளில் அவனைக் கண்டு நரிவெரூஉத்தலையார் இயற்கை உருவம் எய்தினார் என்றே கொள்ள வேண்டும்: கருவூர் கண்ணம்பாலனார் பாடிய அகப்பாட்டில் வஞ்சியும் கருரும் ஒன்றே என்று கருதுவதை வைத்துக்கொண்டு அது கொடுங்களூர் என்று கருதுவதற்கு என்ன சான்று கண்டு பிடித்துவிட்டார்? சங்கப் புலவர்கள் பெரும்பாலும் மதுரை நகரிலும் கரூர் நகரிலும்தான் வாழ்ந்ததாகத்தான் கூறப் பட்டுள்ளது. முசிரியில் ஒரு புலவர் பெயரே கூறப்படவில்லை, உள்ளி விழாவை கொலகர் நடத்தியது வஞ்சியில்

நடத்தியதால் கரூர் கொலகர் வாழ்ந்த வஞ்சியே என்பதாகும் என்று நன்கு தெரிகின்றது: கொலகர் ஒரு தனிக் குடியினர்? சேர மக்களைத் தனிக் குடியாகக் கூறுவதில்லை. கொங்கர் இப்போதுள்ள சேரர் தலைநக்ராக இவர் கூறும் கொடுங்களூரில் அன்றும் வாழ்ந்ததேயில்லை. இன்றும் வாழவில்லை.

இதுகாறும் கூறிய அனைத்துச் சான்றுகளிலிருந்தும் (Multi discriplinary and Inter discriplinary) கொங்கு நாட்டுக் கருவூரே சேரர் தலைநகர் என்பதில் துளியும் ஐயமில்லை.

செந்தமிழ்ச் செல்வியே வாழ்க!

செ. ப. இளவாணன் வேலு, கோலாலம்பூர்.

செந்தமிழ்ச் செல்வியே எங்கள்
சிந்தையில் நிறைந்தாய் வாழ்க! வாழ்கவே!!
எந்தையர் புகழெல்லாம் ஏற்ற முறப்பெற்றே நீ
எழிலாக என்றும் வாழ்க! வாழ்கவே!!

உந்தன் பெருமையை உணராதவர்களுக்கு—இந்த
உலகத்திலே எந்த உயர்வும் கிட்டுவதேது?
மந்த நிலையகல மாத்தமிழர்களே இன்னம்
மன மிரங்க வில்லை என்றால் உனக்கு மதிப்பேது?

அயலார்க்கு அடிபணிவதே அழகென்று
அனுதினமும் அக மகிழ்வதிலே அர்த்தமே இல்லை!
இயலாது என்று தமிழன் எண்ணுவதே—பெரும்
இழுக் கென்றே எவரும் கருதுவதே இல்லையா?

தடுங்கியே நமதுயிரை வளர்த்தால் நம்மை—பிறர்
நாட்டார்கள் நகைக்கவும் மாட்டார்களா?
பிடுங்கி தின்பவர்களுக்கு பெருமை படுத்துவதிலே—நீ
பேரின்பம் கண்டு பெருமதிப்பு பெறுகிறாயா?

தாயைப் போற்ற வேண்டாமா—உன்
தமிழை நினைக்கவும் வேண்டாமா?
சேயாய் இருந்தே நீசெயல் படுத்தவில்லை என்றால்
செகமே உன்னைத் தூற்றாதா?

நிலக்குப்பொறை

ஆய்வுச் செல்வர் பி. கோ. கோவிந்தராசன், க.மு., கல.மு.
சென்னை.

ஆய்வு 3 :

பாவ யாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பினால் விளையுள் குறைந்து குறைந்து இறுதியில் இல்லாமல் போய் விடும். விளையுள் இல்லை என்றால் நிலம் இருந்தும் பயனில்லை. நிலம் இருக்க வேண்டுமானால்—வளம் இருக்க வேண்டும்; வளம் இருக்க வேண்டுமானால் புகழுடையவன் இருக்க வேண்டும் என்பது வெள்ளிடை மலை;

சான்றாகப் புறநானூற்றின் 182ஆம் பாடலைக் காணலாம்.

''உண்டா லம்ப இவ்வுலகம்............
... ...
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்''

—என்னும் அடிகள், உடலில் உயிரிருந்தால் மட்டும் போதாது. புகழ் சேர்ந்த உடம்பாக இருத்தல் வேண்டும். அப்படி புகழ் சேர்க்க உயிரையும் கொடுப்பார்கள்; இத்தகையோர் இருப்பதால் தான் உலகம் நிலைப் பெற்றிருக்கிறது'' என்று கூறுகிறது. புகழ் இல்லாதவர்களைச் சுமந்தால் இவ்வுலகம் நிலைப் பெற்றிருக்காது அழியும் என்பது புலனாகின்றதன்றோ?

ஆகவே புகழ் இல்லாதவனுடைய உடலும் இந்நிலத்திற்குப் பாரமாகும் என்பது தெளிவாகிறது;

''கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை'' —570

பரிமே :-

''கடுங்கோலனாகிய அரசன் நீதி நூல் முதலிய கல்லாதவரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டா நிற்கும்; அக்

கூட்டமல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிதில்லை'' என்கிறார்.

ஆய்வு 4 :-

நீதி நூல் முதலிய கல்லாதவர்கள் நிலத்திற்குப் பாரம்; அவர்களைத் தவிர மிகையான பாரம் பிறிதில்லை என்கிறார் பரிமேலழகர். ஆனால் மணக்குடவர்,

''அறிவில்லாதாரை அமைச்சராகக் கூட்டிக் கொள்ளும் அவ்வரசனல்லது நிலத்திற்குப் பாரம் வேறொன்றுமில்லை என்கிறார்.

இதிலிருந்து கொடுங்கோல் அரசன் தான் நிலத்திற்குப் பாரம் என்பது வெளிப்படுகிறது;

அவ்வாறென்றால் நிலத்திற்குப் பாரம் அரசனா? கல்லாதவர்களா? என்ற ஐயம் ஏற்படுகிறது;

பரிமேலழகர் கல்லாதவர்கள் நிலத்திற்குப் பாரம் என்று வெளிப்படையாகக் கூறி, அரசனும் நிலத்திற்குப் பாரம் என்று உய்த்துணர வைக்கிறார் எனக் கொண்டால் இழுக்கொன்றுமில்லை.

ஆகவே கொடுங்கோலனும் அவன் கூட்டிக் கொள்ளும் கல்லாதவர்களும் நிலத்திற்குப் பாரமாவார்கள் என்பது கண்கூடு.

''கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை'' —572

பரிமே :-

''உலக நடை கண்ணோட்டத்தின் கண்ணே நிகழ்வது. ஆகலான் அக் கண்ணோட்டம் இல்லாதார் உளராதல் இந் நிலத்திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கு அன்று'' என்று கூறுகின்றார்.

ஆய்வு 5 :-

கண்ணோட்டம் இல்லை என்றால் ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் முதலியன நிகழ்

வில்லை. அதனால் கண்ணோட்டம் இல்லாதவர் நமக்கும் பிறர்க்கும் பயன்பட மாட்டார்;

ஆகவே கண்ணோட்டம் இல்லாதவர் நிலத்திற்குப் பாரமாவார் என்பது தெளிவாகிறது.

"சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை" —990

பரிமே :-

"பல குணங்களானும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவராயின் மற்றை இரு நிலந்தானும் தன் பொறையைத் தாங்காதாய் முடியும் என்றவாறு" என்று கூறுகின்றார்.

ஆய்வு 6 :-

தோண்டுபவரை நிலம் தாங்கிக் கொள்ளுகிறது; இகழ்பவரைச் சான்றோர் பொறுத்துக் கொள்ளுகின்றனர்; ஆதலால் நிலமும் சான்றோரும் சமம் என்று முன்பு கண்டோம்;

இதை வைத்துப் பார்க்குங்கால் சான்றோர் தம் தன்மை குன்றுவராயின் நிலமும் தன் இயல்பில் குன்றும் என்பதாகின்றது; மற்றும் சான்றவர் தம் தன்மை குன்றுவராயின் நிலம் தானும் தம் பொறையைத்—தாங்கும் சக்தியை இழந்துவிடும் என்கிறார். எல்லாவற்றையும் தாங்கும் நிலங்கூடச் சான்றோர் தம் தன்மை குன்றுவராயின் எதனையும் தாங்காது ஏன்?

"அவர்களும் தானுமாய்ப் பொறுக்கின்றதனைத் தனிப் பொறுத்தல் (சுமத்தல்) ஆகாது" என்று பரிப்பெருமாள் கூறுகின்றார்; மேலும் அவர், "மேல் ஊழி பெயரினும் சான்றோர் நிலை குலையார் என்றார். இது சான்றோர் நிலை குலையின் ஊழி பெயரும் என்றது" என்கிறார்.

ஆகவே சான்றோர் தம் தன்மை குன்றுவராயின் அச் சான்றோரையும் சுமத்தல் ஆற்றாது நிலம் அழியும். பாரம் சுமத்தல் ஆற்றாது அழியும்.

தோண்டுபவர்களை, இறந்து கூறுபவனை, புகழ் அற்றவனை, கடுங்கோலனை, கண்ணோட்டம் இல்லாத-

-வனைச் சுமத்தல் அறம் எனக் கருதி நிலம் அவர்களுடைய உடற்பாரத்தைச் சுமக்கிறது;

ஆனால் சான்றோர் தம் தன்மை குன்றுவராயின் அவர்களுடைய உடற்பாரத்தைச் சுமக்கும் சக்தியை நிலம் இழக்கும்;

ஆகவே இவ்வுலகத்திற்குச் சுமக்க முடியாத பாரம் தன்மைக் குன்றிய சான்றோரே எனலாம்; அத்தகைய— தன்மைக் குன்றிய சான்றோரை அழிக்க ஆண்டவன் அவதாரம் எடுக்கும் முன்பே நிலம் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும்; இதனை ஊழி பெயரும் எனலாம்;

கந்தன் பிள்ளைத்தமிழ் - சிறுதேர்ப்பருவம்

"கார் பெற்ற செந்நெல்லும் கதிர் பெற்று நிறைந்திடக்
கரை பெற்ற கழனிசூழ்ந்த
கலைபெற்ற மக்களும் நிலைபெற்று வாழ்ந்திடக்
கவின் பெற்ற கொங்கு நாட்டின்

பாரி பெற்ற பொருளெல்லாம் மிகப்பெற்றுக் கொணர்ந்திடும்
திறம் பெற்ற பெருவணிகர்
பலர் பெற்றுத் திகழ்ந்திடும் பொலம் பெற்றுச்
பண்பெற்ற பழம் பதியாம்

பேர் பெற்ற 'பொருளாட்சி' ஏர்பெற்ற 'புள்ளாட்சி'
புகழ்பெற்ற 'பொழில்வாய்ச்சி' என
பீடுற்ற பற்பல பெயர் பெற்று விளங்கிடும்
பொருள் பெற்ற நகரமான

சீர்பெற்ற 'பொள்ளாச்சி' ஸ்ரீசுப்ரமணியா
சிறுதேர் உருட்டியருளே
சிங்காரவேலா! சங்கார நாயகா!
சிறுதேர் உருட்டியருளே!

மறைமலையடிகளாரின் மாணவர் துரையனார் அடிகள்

மூ. இளங்கோவன், ஆய்வாளர், தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

தமிழர்கள் பொருள் தேடும் நோக்கில் உலகெங்கும் சென்றுள்ளமையை வரலாற்று நூல்கள் வழி அறிய முடிகின்றது. அவ்வகையில் கரும்புத் தோட்ட வேலையின் பொருட்டும், வணிகத்தின் பொருட்டும் தென்னாப்பிரிக்க நாட்டிற்குத் தமிழகக் குடும்பங்கள் பல சென்றுள்ளன. திருவேங்கடம்பிள்ளை, செல்லத்தாச்சி என்னும் பெயரிய முன்னோர்கள் தமிழகத்தில் திருவேரகம் எனப்படும் சுவாமி மலையிலிருந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் தென்னாப்பிரிக்க நாட்டில் குடியேறினர். இவர்களுக்குத் 'துரைசாமி' என்னும் ஆண்மகன் பிறந்தார். துரைசாமி இளம் அகவையிலிருந்து தென்னாப்பிரிக்காவில் வைப்பகத்தில் பணியாற்றியும், வணிகம் செய்தும் வாழ்ந்து வந்தவர். காந்தியடிகளின் அமைதிவழி சட்ட மறுப்பு இயக்கத்தில் தம் பதினேழாம் அகவையில் கலந்துகொண்டு சிறை சென்றதுடன், பிற்காலத்தில் மிகப் பெரும் தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். தமிழ் கற்பதற்கென்றே தென்னாப்பிரிக்காவிலிருந்து தமிழகம் வந்து, மறைமலையடிகளாரிடம் தமிழ் பயின்று, பின்னர் இந்திய விடுதலைப் போருக்கென நாற்பதாண்டுகள் உழைத்து அரும்பெரும் பணிகள் ஆற்றியுள்ளார். மறைமலையடிகளாரின் மாணவரான இவர்தம் வாழ்க்கையை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

துரைசாமியின் இளமைப் பருவம்:

தென்னாப்பிரிக்காவில் ரூடிபோர்டு (Roodeford) என்னும் இடத்தில் 1[illegible]-05-1891-இல் பிறந்தவர் துரைசாமி. இவர்தம் பெற்றோர் வெங்கடாசலம்பிள்ளை, செல்லத்தாச்சி ஆவர். துரைசாமி இளமையில் (1903) 'இசுடாண்டர்டு பாங்கில்' (The Standard Bank of South Africa Limited) மூன்று ஆண்டுகள் வேலை செய்தார். 1905இல் ரூடிபோர்டில் கிரிகெட் (Cricket) ஆட்டம், மிதிவண்டி பயிற்சி பெற்றார். பின்னர் 'சோகன்சுபர்க்' நகரில் குடியேறி, பொறையாற்றைச் சார்ந்த சபாபதி செட்டியார் என்பவரிடம் 'மல்சமரும்'' மயிலாடுதுறை ஊரினரான செயராம நாயுடு என்பவரிடம் "சிலம்பும்", முருகேசன் என்பவரிடம் 'குத்துச்சமரும்" பயின்றார். இக்கலைகள் யாவும் தற்காப்பிற்கு ஆகும்.

துரைசாமி 'சோகன்சுபர்க்கில்' வாழ்ந்தபோது ஐரோப்பிய தினிசு புகையிலைச் சிகார் (Cigar) இயற்றும் வினை தெரிந்திருந்ததால் யூத முதலாளியின் தொழிற்சாலையில் சில ஆண்டுகள் தொழில் புரிந்தார். (சிகார் என்பது புகையிலையைச் சுருட்டிய வடிவத்தில் மெருகு செய்வது). பின்னர் இதை விடுத்து, சந்தையில் பொருள்களை மொத்தமாக வாங்கிச் சில்லரை விலைக்கு விற்கும் தொழிலையும் மேற்கொண்டிருந்தார்.

துரைசாமி தென்னாப்பிரிக்காவில் தமிழ் கற்றமை:

துரைசாமியார் ஆங்கிலமொழி கைவரப் பெற்றிருந்தார். தமிழ் மொழியையும், இலக்கியங்களையும் கற்பதில் ஆர்வமுடன் இருந்தார். ஒருநாள் சுப்பராய முதலியார் (மயிலாடுதுறை ஊரினர்) என்பவரிடம் தாம் தமிழ் யாரிடம் கற்பது என வினவினார். அதற்குச் சுப்பராய முதலியார் டர்பனிலுள்ள (Durban) விருத்தாசலம் பிள்ளையிடத்திலேனும், சர்மிசுடனிலுள்ள (Germiston) அப்பாசாமி நாயகரிடத்திலேனும் கற்பது நன்றென நவின்றார். அவ்வகையில் துரைசாமியின் இல்லத்திலிருந்து இருபது கல் தொலைவிலுள்ள அப்பாசாமி நாயகரின் இல்லத்திற்குத் தொடர் வண்டியில் ஞாயிற்றுக்கிழமைகளில் சென்று தமிழ் இலக்கண, இலக்கியங்கள் கற்றார். அப்பாசாமி நாயகர் திருவாவடுதுறை பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவவழி சேர்ந்த மாணவராவார்.

துரைசாமி அரசியல் அறிவு பெற்றமை:

துரைசாமியார் உலக அரசியல் வரலாற்றினைப் புனா நகரின்கண் பிறந்து வளர்ந்த தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழரான இரகுநாத முதலியார் என்பவர் மூலம் பெற்றார். இரகுநாத முதலியார் ஆங்கிலம், மராட்டி, இந்தி, குசராத்தி, தமிழ் அறிந்த தமிழர். துரைசாமியின் இல்லத்திற்கு வந்து ஒவ்வொரு நாளும் வரலாற்றுப்பாடம் நடத்துவார். சப்பான், உருசியா சண்டை, இந்தியாவின் அரசியல் நிலை முதலியவற்றைத் துரைசாமி அறியலுற்றார்.

துரைசாமி காந்தியடிகள் தொடர்பு :

துரைசாமி தம் பதினேழாம் அகவையில் (1908) இல் காந்தியடிகளின் கட்டளைப்படி தென்னாப்பிரிக்க அரசின் கொடிய சட்டத்தை எதிர்த்து (The Asiatic Emigration Act) சட்ட மறுப்பு இயக்கம் (The Passive Resistant Movement) செய்து, அந்நாட்டு முறைமன்ற நடுவர் வெர்னோன் (Vernon) என்பவரால் ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

தென்னாப்பிரிக்கச் சிறையில் துரைசாமியுடன் மணிலால் காந்தி (காந்தியடிகளின் மகன்), சோசப் ரோயப்பன், கிருட்டிணசுவாமி நாயுடு, முகமது பயாத் முதலானவர் இருந்தனர். அரசியல் கைதியான துரைசாமி ஆப்பிரிக்கக் கொலையாளிக் கைதிகளுடன் பிணைக்கப்பட்டு டீப்குளூப் (Dipcloof) சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சிறையில் எட்டு மணி நேரம் தோட்ட வேலை செய்தும், கிழமைக்கு இருநாள் கழிப்பறைத் தொட்டியை எடுத்துப் போய் மலத்தைக் கொட்டியும் தண்டனைக் காலம் முழுவதும் வாழ்ந்திருந்தார். காந்தியடிகளின் கொள்கையில் ஈர்ப்புண்ட துரைசாமி தம் வணிகத்தை விடுத்து இந்திய மக்களின் உரிமைக்குப் பாடுபட்டார்; பின்னர் 1913இல் செக்லா (Jekla) என்னும் பாய்மரக் கப்பலில் தம் தாயுடன் சென்னைக்கு வந்தார்.

சென்னையில் மறைமலையடிகளைக் காணல் :

தென்னாப்பிரிக்காவிலிருந்து இலங்கை வழியே தூத்துக்குடி துறைமுகத்தைத் துரைசாமியார் வந்தடைந்தார். அங்கிருந்து தொடர்வண்டி மூலம் நேரே சென்னைக்கு மறைமலையடிகளைக் காணச் சென்றார். மறைமலையடிகள் அப்போது காசிக்குச் சென்றுள்ளதை அடிகளாரின் துணைவியார் அறிவிக்க,[1] அடிகளார் வரும்வரை தமிழகத்தில் சுற்றுச் செலவு மேற்கொண்டார்.

சில திங்கள் கழிந்த பின்னர் துரைசாமியார் மறைமலையடிகளைக் கண்டு, வணங்கித் தாம் தமிழ் கற்க வந்தமையைக் கூற, அடிகளாரும் இசைந்தார்கள்: அடிகளாரின் அன்பிற்கு உரிய மாணவராக துரைசாமியார் விளங்கினார். அடிகளாரிடம் பாடம் கேட்டதுடன் குடும்பவேலைகள், அலுவலக வேலைகளிலும் துரைசாமியார் உதவியாக இருந்தார். இதனைக் கீழ்வரும் சான்றால் உணரலாம்.

''... (மறைமலையடிகளிடம்) நன்னூல் முதலியன கற்குங்காலை பகலில் அவர்பால் பாடம் கேட்பேன்; இரவிலே அவர்களின் குழந்தைகள் நீலாம்பிகை, திருஞானசம்பந்தன், மாணிக்கவாசகன், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி ஆகியவர்களுக்குப் பாடங் கற்பிப்பேன்; நாளடைவில் எங்கட்குள்ளே அன்பு வளர்வதாயிற்று—அப்போது மறைமலையடிகளின் அன்னையார் அவர்கள் திருமதி நீலாம்பிகையை எனக்குத் திருமணம் செய்விக்க விரும்பினர். அவ்விருப்பத்தை என் அன்னையாரிடமும் தெரிவித்தனர். திருமணம் பற்றிய பேச்சு அவர்களின் குடும்பத்தில் நிலைக்கலாயிற்று''[2].

மறைமலையடிகளின் அன்னையார் இறந்தபோது, நெருப்புச் சட்டி ஏந்தும் வாய்ப்பினைத் துரைசாமியார் பெற்றமைக்குப் பெரிதும் பெருமை அடைந்தார்; ''சமரச சன்மார்க்க நிலையம்'' கட்டிடம் கட்டும் பணி தொடங்கிய போது, துரைசாமி கட்டிடப் பொறுப்புகளைக் கவனித்து வந்தார். ஒருநாள் தேவைக்கு மிகையாக வேலையாள் ஒருவனை வைத்துக்கொண்டு துரைசாமியார் கட்டட வேலைகளை கவனித்தபோது அடிகளார் சினமுற்றார். ''உம்முடைய கட்டட வேலையாக இருந்திருந்தால் அவ்வாறு செய்திருக்க மாட்டீர். என்னிடம் பாடம் கேட்பதால் மேற்போக்காய்ப் பழகுகிறீர் போலும்'' என்று சினமொழி கூற, துரைசாமி மனம் வருந்தியதுடன் பாடம் கேட்பதையும் நிறுத்திக் கொண்டார்.

துரைசாமியார் அடிகளாரைப் பிரிந்து வந்தார் எனினும், அடிகளார் மீது உயர்ந்த மதிப்பினை வைத்திருந்தார். ''பல்லாவரத்தில் பேராசிரியர் மறைமலையடிகளாரிடத்தில் தமிழ்க்கலை கற்கத் தொடங்கினேன்... பிறகு அடிகளாரால் திராவிடத் தமிழர்களின் வரலாற்றின் பெருமையைச் சிறிது அறியலுற்றேன்.[3] என நன்றி மறவாது குறிப்பது எண்ணத் தக்கது.

மேலும், தாம் இயற்றிய திராவிடத் தமிழர்களின் பண்டைக்கால வரலாறு (1967) என்னும் நூலினை ''என் ஆசிரியர்: பேரறிஞர் சொ. மறைமலையடிகளார்க்கு இந் நூல் நினைவு சின்னமாகும்'' என்று குறித்துப் படையல் செய்துள்ளார். அடிகளாரின் தனித்தமிழ் நடையும், சமயப் பற்று, மெய்யுணர்வு, நுண்ணுணர்வு, பாடலியற்றும் திறம் முதலியனவும் துரைசாமியாரிடம் படிந்துள்ளன; பிற

காலத்தில் அறிவு நூல்களைக் கற்ற துரைசாமியார் திருவியன்மதியம் (1961) என்னும் அற இலக்கியம் படைத்ததுடன் தம்மைத் 'துரையனார் அடிகள்' எனவும் குறித்துக் கொண்டார்.

தமிழ் அறிஞர்களுடன் தொடர்பு :

துரைசாமியார் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்ப் பேராசிரியர்களிடமும், தமிழ்ப் பற்றாளர்களிடமும் அன்புடன் பழகினார். சென்னைக்கு வந்ததும் மறைமலையடிகளிடம் பாடம் கேட்டதுடன், மாகறல் கார்த்திகேயனார், தமிழ்த்தென்றல் திரு. வி. க. முதலானவர்களுடன் நல்ல தொடர்பினை வைத்திருந்தார். ''அடிகளாரின் அலுவலாகச் சைதாப்பேட்டையிலிருந்த பேராசிரியர் மாகறல் கார்த்திகேய முதலியாரின் வீட்டிற்குப் போனேன். அவர் நான் போன அலுவலை முடித்துவிட்டு அவரியற்றிய 'தமிழ் மொழி நூல்' (Philology) ஒன்றை அன்பளித்தார்'' என்னும் குறிப்பு வழியில் துரைசாமி மாகறல் கார்த்திகேயனார் தொடர்பு புலப்படும்.[4]

திரு. வி. க. விற்கும் துரைசாமியார்க்கும் நல்ல தொடர்பு இருந்துள்ளது. துரைசாமியாரின் ''திருவியம் மதியம்' என்னும் அறநூலுக்குத் திரு. வி. க. சிறப்புப் பாயிரம் நல்கியுள்ளார். இப்பாயிரத்தில் திரு. வி. க. தம்மை, ''திருமண வழகியன்'' எனக் குறிப்பிடுவது சுட்டத்தக்கது.[5]

தேசிய தலைவர்களுடன் துரைசாமியாரின் தொடர்பு :

துரைசாமி இந்தியாவின் விடுதலைக்குத் தன்னலம் கருதாது உழைத்த ஈகியாவார்; பல ஆண்டுகள் சிறையில் வாடிய தூய உணர்வாளர். பார்ப்பனர்கள் இவரின் தொண்டினைக் கலங்கப்படுத்திப் பேசியபோதும் அயராமல் பணி புரிந்தவர். காந்திய நெறியில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். இராசாசி, சத்தியமூர்த்தி, காமராசர், சர்தார் வேதரத்னம் பிள்ளை, ஓமந்தூர் இராமசாமி (இரெட்டியார்), முதலியவர்களிடம் நெருங்கிப் பழகியவர். நன்றாகச் சிறையில் இருந்தவர். வ. உ. சி. யைச் சுவாமி மலைக்கு அழைத்துக் கூட்டம் நடத்திய பெருமை துரைசாமியார்க்கு உண்டு. ஊர் மக்கள் அனைவரும் தற்காப்புக் கலையைப் பயின்றிருக்க வேண்டும் என வ. உ. சி. விரும்பியமை துரைசாமியின் சுயசரிதத்தில் விளக்கப்

பட்டுள்ளது. மேலும், சுவாமி மலையில் நடந்த கூட்டத்தில் கோயில் பிரகாரத்தில் ''நாடார்களும் பரியாரிகளும், வண்ணார்களும் அந்தச் சுவாமிமலை கோயிலுக்குள் போகக் கூடாது'' என்னும் பலகையைத் துரைசாமியார் சுட்டிக் காட்ட, வ. உ. சி. சினம் கொண்டு, ''எதிர்காலத்தில் வகுப்பு வேற்றுமையை ஒழித்தே தீரவேண்டும் எனவும், வகுப்பு வேற்றுமை உள்ளவிடத்தில் தெய்வம் இராது எனவும் கூறினார். இந்திய நாட்டின் ஏழ்மை, அடிமை, வேற்றுமை, மடமை முதலியவற்றைப் பற்றியும், இந்திய மக்கள் படுந் துன்பத்தைப் பற்றியும் பேசும்போது, தாரையாய்க் கண்ணீர் சொரிந்த வண்ணமாய்ப் பேசினார். ஏறக்குறைய இரண்டு மணி நேரம் பேசினார்கள்''[6] என்னும் வரலாற்றுக் குறிப்பு துரைசாமியாரின் தன் வரலாற்றில் (சுயசரிதம்) புதைந்துள்ளது.

தமிழ்ப்பணி, நாட்டுப்பணி செய்த துரைசாமியார் 05-01-1973 இல் மறைந்தார். திருவுருவப்படம் முன்னாள் முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களால் திறந்து சிறப்பு செய்யப்பட்டது.

அடிக்குறிப்புகள் :

1. 21-03-1913 இல் கல்கத்தா மெயிலில் அடிகள் வடநாடு புறப்பட்டார் 'மறைமலையடிகளார் நாட்குறிப்பு', ப. 37.
2. வெ. துரையனார் அடிகளின் வரலாறு (பதிப்பிக்கப் படாத படி) பக். 58, 59.
3. திராவிடத் தமிழர்களின் பண்டைக்கால வரலாறு, (1967), ப. 2.
4. திராவிடத் தமிழர்களின் பண்டைக்கால வரலாறு, ப. 2.
5. திருவியன்மதியம், ப. 1.
6. வெ. துரையனார் அடிகள் வரலாறு (பதிப்பிக்கப் படாத படி) பக். 96, 97.

பெருந்தச்சன்

க. குழந்தைவேலன், க. மு.

தமிழ்நாட்டுக் கோயில்களும், சிற்பங்களும் உலகப் புகழ் பெற்றவை. கட்டப்பட்டுப் பற்பல நூற்றாண்டுகளாயினும் கால வெள்ளத்தால் அழியாது, நமது கலைச் சிறப்பைப் பறைசாற்றி நிற்கும் பேறு பெற்றவை. பன்னாட்டாரையும் கடல் கடந்து வந்து எம்மைக் காண்மின் எனத் தம்பால் ஈர்க்கும் காந்தங்கள்.

இவற்றையெல்லாம் படைத்தவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள்? இத்தகு திறம் படைத்தோர் யார்? அவர்கள் தமிழ்க் கலைஞர்கள். பட்டறிவுப் பல்கலைக் கழகத்தில் புடமிடப்பட்டுத் தம்மை மறந்து இறைவனையும், இறைமையையும் படைக்கும் சிற்பிகள்.

இவர்கள் பேரென்ன? அங்கேதான் உதைக்கிறது! இன்று "ஸ்தபதிகள்"—தமிழா? இல்லை. வையகம் போற்றும் தமிழ்க் கலையை வளர்த்தவர்களுக்குக் கூடத் தமிழில் பெயரில்லையா? உண்டு! உண்டு!

மன்னரும் போற்றும் பெருமரபினராகிய அக் கலை மன்னர்கள் "பெருந்தச்சன்" எனப் பெயர் பெற்றிருந்தனர்.

மாமல்லபுரத்துக் கலைப் படைப்புகளைப் படைத்தவனைக் "கேவாத பெருந்தச்சன்" என்று பூஞ்சேரிக் கல்வெட்டு புகழ்கிறது. பனிமலையை ஒத்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டியவன் இராச இராசப் பெருந்தச்சன் என்று பாராட்டப்பட்டான். ஏன் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனின் "பட்டத்தான்" மங்கலச் செப்பேட்டை எழுதியவன் கூட ஒரு பெருங் கலைஞனே. அவன் "கச்சிப்பேட்டு ஐயப்பன் சேரி பல்லவப் பெருந்தச்சன்" ஆனான்.

இவ்வளவு ஏன்! நம்மிலிருந்து இன்று தனித்து வழங்கும் மலையாள மொழியில் அக்கலைஞன் இன்றும் பெருந்தச்சன் என்றே அழைக்கப்படுகின்றான். அத்தகைய கலைஞன் ஒருவனைப் பற்றி அண்மையில் "பெருந்தச்சன்" என்ற ஒரு திரைப்படம் வெளிவந்து சிறந்த பாராட்டைப் பெற்றது.

பெருந்தச்சன் எனும் பெயர் வடமொழி பெற்ற வாழ்வாலும், அம் வடமொழியில் தமக்குப் பெயர் சூட்டிப் பெருமைப்படும் நம் மக்களது ஆராக்காதலுமே மறைந்து விட்டது. என்று தணியும் இந்த பிறமொழி வேட்கை?

திருமூலர் கூறிய ஆறு சமயங்கள்?

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், மயிலம்.

திருமூலர் காலத்தில் மிகப்பல சமயங்கள் இருந்துள்ளன. அவற்றை, "நூறு சமயங்கள் உளவாம்" என்றார். அந்நூறு சமயங்களுள் சிறப்பாக ஆறு சமயங்கள் உள்ளன. அவ்வாறு சமயங்களின் நெறிகள் பரம் பொருளையறிய நிற்பனவல்ல; தனித்த சிவ நெறியே பரம்பொருளையடைதற்கு இறுதியான நெறியாம்; அதுவே வீடுபேற்றுக்குரிய நெறியாம். இப்படிக் கூறிய திருமந்திரப்பாடல்.

நூறு சமயம் உளவாம்; நுவலுங்கால்
ஆறு சமயம் அவ்வாறுட் படுவன;
கூறு சமயங்கள் கொண்டநெறி நில்லா;
ஈறு பரநெறி; இல்ஆம் நெறி அன்றே (1587)

என்பதாம். அளவு கடந்த நிலையில் சமயங்கள் கிளைகள் விட்டு மலிந்திருந்தன என்பதை 'நூறு சமயம் உளவாம்' என்பதால் தெரிவித்தார் திருமூலர். அவற்றுள் ஆறு சமயங்கள் அடங்கும். அவை யாவை எனத் திருமூலர் கூறவில்லை.

திருமந்திரப் பாடல்களுக்குக் குறிப்புரை எழுதிய துடிசைக்கிழார் அ. சிதம்பரனார், ஆறு சமயமாவன: பைரவம், சயனம், பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம், உலகாயதம், குளியவாதம் என்று எழுதி, வேறுவிதமாகக் கூறுவாரும் உளர் என்றும் எழுதினார். கழகப்புலவர் ப. இராமநாத பிள்ளையும் அவற்றையே எழுதினர்.[1]

மாணிக்கவாசகர் திருவண்டப் பகுதியில் (17) கூறிய அறுவகைச் சமயம் என்பதற்கு அருணை வடிவேல் முதலியார் அவர்கள் ஆருகதம், இரணிய கருப்பம், வைணவம், சௌரம், சௌமியம், வாமம் என்னும் சமயங்களைக் கூறுவர். அவற்றின் கடவுளர் அருகன், இரணிய கருப்பன், (பிரமன்) திருமால், சூரியன், சந்திரன், சக்தி என்போராவர் (சக்தி என்றது தேவமாதரையுணர்த்தும்; சிவபரம் பொருளின் அருட்சக்தியாகிய பராசக்தியை உணர்த்தாது) அவரே

காணாபத்தியம், கௌமாரம், சாத்தேயம், வைரவம், பாசுபதம், மாவிரதம் என்னும் ஆறும் குறிப்பிடுவர்.[2] கணபதி, குமரன், சக்தி, வயிரவர், பாசுபதர், மாவிரதி என்போர் அவற்றின் கடவுளர்.

சைவம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம் சௌரம். என்னும் ஆறும் கூறுவாரும் உண்டு. ''சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்'' என்று சைவம் பற்றித் திருமூலர் கூறினார் (1512). சிவமே பரம்பொருள் என்று கூறும் திருமூலர், பரம்பொருளல்லாத் தேவர் சமயங்களுள் ஒன்றாகச் சைவத்தைச் சேர்த்து ஆறுசமயம் என்று கூறார். ஆதலின் பின்னவர் கருத்து ஏற்புடையதாகாது. அன்றியும், திருமூலருக்குப் பிற்பட்டவரான சங்கரர் கூறியன அவை.

ஆறு சமயங்களுமே கடவுளை நாடியன என்றார் திருமூலர். ''அண்ணலை நாடிய ஆறு சமயமும்'' (1535) என்பது அவர் வாக்கு. அதனால் கடவுள் இல்லையென்னும் உலகாயதரையும், சூனியவாதியையும், சமணரையும் திருமூலர் அறுவகைச் சமயத்தில் சேர்த்திரார் எனக் கொள்ளலாம். சைனர் அருகனைக் கடவுள் என்பரேனும், 'உயிரே கடவுள் நிலையடையும்; கடவுள் எனத் தனிப் பொருள் இல்லை' என்பவர்.

எனவே இன்றைய அறிஞர் கூறும் ஆறு சமயங்கள் சரிவர அமையவில்லை என்னலாம்.

ஆறு சமயங்களும் சிவன் தாள் இணையை நாடுமாறு உழல்கின்றன (1557) என்றும், ஒரு பேரூர்க்கு ஆறு வழிகள் உள்ளனபோலச் சிவபரம் பொருளையடைதற்கு ஆறு சமயங்கள் உள (1558) என்றும் திருமூலர் கூறுவதால், ஆறு சமயங்களும் சிவபரம் பொருளையடைதற்கு வழிகளாக அமையும் என்பதும், அச் சமயத் தெய்வங்கள் பரம் பொருளாகா என்பதும் பெறப்படும். அவ்வாறு சமய நெறிகளும் முடிவில் சைவநெறியையே சாரும் ஆதலின், அந்நெறியானது ''சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறி'' —(1560) அதாவது சைவநெறி என்றும், அதன் முடிந்த முடிவுப் பொருளாவான் 'சைவப் பெருமைத் தனிநாயகன்.... நந்தி'யாவான் என்றும் கூறி, அவனையே வந்தடைத்துய் புமின்கள் (1559) என்றும் கூறினார் திருமூலர். சைவநெறியைக்

குருநெறி என்றும் தெய்வச் சிவநெறி என்றும் கூறினார் (1567).

பேரூர்க்கு ஆறு வழிகள் உள்ளனபோலச் சிவநெறியை யடைதற்கு ஆறு சமயங்கள் உள்ளன என்று கூறிய மந்திரப் பாடல் 'உட்சமயம்' என்ற தலைப்பில் காணப்படுகின்றது. தலைப்பு அமைத்து மந்திரப் பாடல்களைத் திருமூலர் பாடினார் என்று கொண்டால், ஆறு சமயங்களும் சைவ சமயத்தின் உட்சமயங்கள் எனக் கொள்ளல் வேண்டும். அதனால் அச்சமயம் ஆறும் குறைத்து ஒதுக்கப்படற்குரியன வல்ல என்பதும் புலப்படும்.

அச் சமயங்கள் ஆறும் யாவை?

அறுவகைச் சமயமும் உட்சமயம் எனக் கொண்டால், அவ்வறுவகைச் சமயமும் சைவசமயத்தின் அகச் சமயம் எனப்படும். அகச் சமயம் ஆறாவன: பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவ சங்கிராந்தவாத சைவம், ஈசுவரவவிகாரவாத சைவம், சிவாத்துவிதசைவம் என்பனவாம். இவ்வாறும் சித்தாந்த சைவத்தின் அடங்கும் எனவும், சித்தாந்தசைவம் சுத்த சைவம் எனவும்படும் எனவும் கூறுவர், சிவஞான முனிவர்.[3]

பாடாணவாத சைவம் முதலிய ஆறு சமயங்களையே திருமூலர் அறுவகைச் சமயம் என்றார் என்று கொள்ளலாமா? கொள்ளவழியில்லை. ஏன்எனின், பாடாணவாத சைவம் முதலிய ஆறு சமயங்களின் முடிந்த பொருள் சிவபரம் பொருளேயாம். ஆனால் திருமூலர், 'ஆறு சமயங்களின் முடிந்த பொருள் சிவனல்லன்' என்றார். அதனால் அச் சமயங் கண்டவர் சிவனைக் காணார்.

''ஆறு சமயமும் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவன் அலன்'' (1533)

என்பது அவர் வாக்கு. எனவே, சிவஞான முனிவர் குறிப்பிட்ட அகச் சமயம் ஆறும் திருமூலரால் குறிக்கப்பட்டன அல்ல என்னலாம்.

இனி, அகப்புறச் சமயங்கள் எனச் சிவஞான முனிவரால் குறிக்கப்பட்ட பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதம் என்னும் ஆறுமே திருமூலராக்

குறிக்கப்பட்டன எனலாமா? அவைகளும் சிவபரம் பொருளே முடிபாகக் கொண்டமையின் கூடாது; வாமம் என்பது சக்தியைப் பற்றியதாதலின் திருமூலர் சிவனையே சக்தியாகக் கூறுவராதலின் வாம சமயமும் சிவ சம்பந்தப் பட்டதேயாம்;

அப்படியானால் திருமூலர் கருத்துப்படி ஆறு சமயங்கள் என்பன, கடவுளை முடிபாகவுடையன என்பதும், அக் கடவுளர் சிவபரம் பொருள் அல்ல என்பதும், அவை முத்திக்கு வழிகளே என்பதும் பெறப்படும். அப்படிப்பட்ட சமயங்கள் ஆறு யாவை?

1 உருத்திரனை முதற்பொருளாகக் கொள்ளும் சைவம்
2 திருமாலைக் கொள்ளும் வைணவம்
3 பிரமனைக் கொள்ளும் இரணிய கருப்பம்
4 வயிரவனைக் கொள்ளும் வயிரவம்
5 சக்தியைக் கொள்ளும் சாக்தம்
6 சூரியனைக் கொள்ளும் சௌரம்

என்பனவற்றைக் கொள்ளலாம்; உருத்திரன், திருமால், அயன் என்னும் மூவர் பற்றிய சமயங்களும் அவற்றின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளும் நாட்டில் நிலவிய காரணத்தால், திருமூலர், மூவரும் சிவபிரானின் தொடர்பாளரே என்றும், அதனை உணராமல் உலகினர் வேறுபடுகிறார்கள் என்றும் கூறினார்;

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றே
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே (104)

என்பது அவர் வாக்கு. இதனால் மூவர்க்கும் மூன்று சமயங்கள் இருந்தன என்பது விளங்கும்;

வயிரவச் சக்கரம் கூறி வயிரவக் கடவுள் உண்டென்பதும், அக் கடவுள் வழிபாடும் சிவ வழிபாடே எனக் கொள்ள வைப்பதும் கொண்டு, வயிரவச் சமயமாகிய வைரவம் உண்டென்பது பெறப்படும்;

சக்தி என்பது உலகினர் கொண்ட சிறு தெய்வத்தை யன்று, ஆதிபராசக்தியே எனக் கொண்டு புவனாபதிச் சக்கரம் வயிரவிச் சக்கரம் முதலியன கூறுமுகத்தால் வாம சமயம் உண்டென்பது புலப்படும்.

சூரியன் பற்றி அண்டாதித்தன், பிண்டாதித்தன், மனவாதித்தன், ஞானாதித்தன், சிவாதித்தன் என்னுந் தலைப்புகளில் கூறிக், காணப்படும் சூரியனின் வேறாகச் சிவ சூரியன் இயல்பு கூறலின் சூரிய சமயம் (சௌரம்) உண்டென்பது புலப்படும்.

எனவே, திருமூலரால் குறிக்கப்பட்ட ஆறு சமயம் என்பன உருத்திரசைவம், வைணவம், இரணிய கருப்பம், வயிரவம், வாமம், சௌரம் என்பனவாகலாம் எனக் கொள்ளலாம். அவற்றையே திருமூலர் ஏற்கத்தக்கன என்றும், எனினும் சிவபரம் பொருளுக்குக் கீழ்ப்பட்டன என்றும், எனினும் அவைகளாகச் சிவனே விளங்குபவன் என்றும் பேதப்படுத்தியும் ஒன்றுபடுத்தியும் கூறினார் எனக் கொள்ளலாம்.

அறிஞர் இதனை முடிந்த முடிபாகக் கொள்ளாமல் மேலும் ஆய்ந்து வெளிப்படுப்பின் நன்று.

எண்ணுக்குறிப்பு :

1. திருமந்திரம் மூவாயிரம் முதற்பகுதி புறசமய தூடணம் 6 உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை 1957.
2. எட்டாந் திருமுறை, தருமையாதீனப் பதிப்பு பக். 71, தருமபுர ஆதீனம் மயிலாடுதுறை 1960
3. சிவஞான மாபாடியம் பக்கம் 89.

உலகத் தமிழ்க் கல்வியியக்கம், திருமலை நகர் இணைப்பு, பெருங்குடி, சென்னை-96, 1986;

திருமந்திரப் பாடல்களுக்குக் குறிக்கப்பட்ட எண்கள் யாவும் ஸ்ரீவைகுண்டம், குமரகுருபரன் சங்கம் 28-2-1976இல் வெளியிட்ட திருமந்திர மாலை எனப் பெயர் பெற்ற திருமந்திரம் என்னும் நூலில் உள்ளவாறு குறிக்கப்பட்டன;

பக்தி இலக்கியத்தில் தொல்படிவங்கள் : சில அணுகுமுறைகள்

முனைவர் சிவ. மங்கையர்க்கரசி,
தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை.

தொல்படிவத் திறனாய்வு அணுகுமுறையின் வழி (Archetypal Approach) தமிழில் பக்தி இலக்கியத்தை ஆராய முனைந்துள்ளது இக் கட்டுரை. பக்தி இலக்கியம் என்ற தொகுப்பைப் பெற்றுள்ள சிறப்பு தமிழுக்கு மட்டுமே உண்டு. தமிழ் மொழியில் முகிழ்த்துள்ள பக்திப் பாடல்களின் அளவு வேறெந்த உலக மொழியிலும் இல்லை. கி. பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 12ஆம் நூற்றாண்டு வரை உள்ள இடைப்பட்ட 5 நூற்றாண்டுகளையுமே பக்தி இயக்கக் காலம் எனக் கூறலாம். இக்காலக் கட்டத்தில் சைவ, வைணவ சமய இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. சம்பந்தர் தேவாரம் பாடத் தொடங்கிய காலம் முதல், சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் இயற்றிய காலம் வரை எழுந்த இலக்கியம் அனைத்தையும் பக்தி இலக்கியம் என்ற பொதுத் தலைப்பினுள் அடக்கிப் பேசலாம்.

புதிய புதிய திறனாய்வுக் கொள்கைகளும், இலக்கிய இயக்கங்களும் மேலை நாட்டில் அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றன. இலக்கியத்தின் ஓர் உட்பிரிவாக இதுவரை இருந்துவந்த திறனாய்வு, இதிலிருந்து பிரிந்து ஒரு துறையாக, திறனாய்வியலாக வளர்ந்து வருகிறது.

திறனாய்வியலில், மேலைநாட்டில், சமீப காலமாகப் பெரிய அளவில் நடக்கும் ஓர் இயக்கமாகவே தொல்படிவத் திறனாய்வு இயங்குகிறது. தமிழ் இலக்கியத்தில் தொன்மம் (Myth) பற்றிய ஆய்வை மேற்கொள்ள மேலைநாட்டில் தொன்மவியல் திறனாய்வு பற்றி வந்துள்ள படைப்புகளைப் படித்தறிய வேண்டியது அவசியமாகிறது; தொன்மத் திறனாய்வு ஏனைய திறனாய்வுகளுக்கு எதிரானது அன்று. மானுடவியல் (Arthropology), உளவியல் (Phychology) மெய்யியல் (Philosophy), இலக்கியக் கருத்தியல் (Literary theory) ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஆற்றல் பெற்றது தொன்மவியல் ஆய்வு.

தொன்மம் (Myth) என்பது என்ன? தொன்மங்களின் தோற்றம், முக்கியத்துவம், தொன்மக் கூறுகள், தொன்மத்திற்கும் கவிதைக்குமுள்ள தொடர்பு ஆகியவை பற்றியக் கருத்துக்கள் யாவை? தொல் படிவமும் சமயச் சடங்கும் நெருங்கிய தொடர்பு உடையவையா? இந்த இரண்டிற்கும் இடையில் நிலவும் உறவு எத்தகையது? தொன்மம், கனவு, கவிதை ஆகியவற்றுக்குள்ள உறவு எத்தகையது? தொல் படிவத் திறனாய்வில் பழம்பெரும் பண்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது ஏன்? தொன்மம் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது? தொல்படிவத் திறனாய்வாளன் இந்த வினாக்களுக்கு அளிக்கும் விடைகளைக் காணலாம்.

தொன்மம் அற்ற ஒரு நடைமுறை வாழ்வில் இக்கால மனிதன் ஆர்வம் கொள்வதானது, சமாளிக்க முடியாத அளவிற்குக் குறிக்கோள் அற்ற குழப்பமான வாழ்விற்கு இட்டுச் செல்லும் என்று தொல்படிவத் திறனாய்வாளன் கருதுகிறான். கிரேக்கத் தொன்மங்களில் மக்களுக்கிருந்த நம்பிக்கை தகர்க்கப்பட்டதால் கிரேக்கக் கலாசாரமே அழிந்துபட்டது. தொன்மச் சூழலே ஒரு நாகரித்தைப் பாதுகாக்கவல்லது; தொல்படிவங்களின் ஆற்றலை இலக்கியவாதிகள் எளிதாகப் புறக்கணித்துவிட இயலாது; தொல்படிவக் கல்வியைத் திறனாய்வாளனுக்கு தொடர்ந்து பயில வேண்டியக் கட்டாயம் இருக்கிறது;

தொன்மங்கள் என்பவை சடங்குச் செயல்களில் பேசப்படும் பொருள்கள் என்று ஹாரிசன் (Harrison) விளக்குகிறார். அவர் கருத்துப்படி தொன்மங்களும் சடங்குகளும் ஒன்றாகத் தோன்றியவையே. தொன்ம அறிஞர்கள், சடங்கு காரணமற்றதாகத் தோன்றும் பொழுது, அதன் விளக்கத்தைத் தொன்மத்தில் தேடினர். சடங்கும் மனிதனின் கனவும் ஒன்றாகச் சேர்ந்த கூட்டின் வார்த்தை வெளிப்பாடே தொன்மம் என்று கூறுவார் நார்த்ராப்பிரை (Northrop Frye).

தொன்மம், 'மித்' (Myth) என்ற சொல் 'தத்துவ ரீதியானது' என்பதற்கு எதிராக 'அடிமனத்தது', 'பகுத்

தறிவுக்கு அப்பாற்பட்டது என்ற பொருளில் பெரும்பாலும் வழங்கப்படுகிறது.

மீதாக (Mythos) என்ற சொல்லுக்கு 'உண்மையான பேச்சு' என்பது பொருளென்றும், கவிதைக்கு இதுவே அடிப்படையென்றும், தொன்மங்கள் என்பவை உண்மையான நிகழ்ச்சிகள் அல்லது வரலாற்று நிகழ்ச்சிகளின் கற்பனை வடிவங்களாகும் என்றும் பிளேடோ சுட்டிக்காட்டினார்.

மொழியென்பது தொன்மப் படிவங்களின் வழியேதான் வளருகின்றதென்றும், கவிதையின் அடிநாதமாகத் தொன்மம் விளங்குகிறதென்றும் ஹெர்டர் குறிப்பிட்டார். தொன்மத்திற்கும் கவிதைக்குமுள்ள தொடர்பைத் தொட்டுக் காட்டி, மொழியும் தொன்மமும் ஒரே மரத்தின் இரண்டு கிளைகள் போன்றவை என்று காசிரேர் (Cassirer) கருது கிறார்.

பிளேக், நீட்சே ஆகியோர் தொன்மத்தில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். தொன்மத்தில் நம்பிக்கையிழந்த எந்த நாகரிகமும் அதன் இயற்கையான. வளமுடைய படைப் பாற்றலை இழந்துவிடும் என்று நீட்சே (Nietzsche) கூறினார்; பகுத்தறிவுப் பாதையைப் பின்பற்றித் தொன் மங்களை அழிக்க முயல்வதால்தான் மனிதன் தனது நிலை யழிந்து தனது மரபின் அடிவேர்களைத் தேடி அலையும் அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றான் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஃபிராய்டு தொன்ம ஆராய்ச்சியில் பெரிதும் ஈடு பட்டவர்; தொன்மங்கள் மனித இனத்தின் கனவுகள் என்றும், கற்பனையின் மறுபிறவியே தொன்மம் என்றும், அது அடிமனத்தின் விளைபொருள் என்றும் தொன்மம் பற்றி ஃபிராய்டு சிந்தித்தார்;

கனவுகளிலும், கற்பனை விளைவுகளிலும், பழங்கதை களிலும் தொன்மங்கள் காணக் கிடப்பன. யுங் (Jung) என்பார் தொன்மங்கள் மனித இனத்துக்கும் முந்திய வையாக இருக்கலாம் என்றார். அவை மனோவாழ்க்கையின் பழம் கட்டமைப்புகள் என்றும், மனித இனத்தின் கூட்டு (பொதுவான) அடிமனத்திலிருந்து வெளிவந்தவை என்றும் அவர் வாதிட்டார். ஒரு கவிஞன் தனது அனுபவத்தைத்

திறம்பட வெளிப்படுத்த வேண்டுமானால் தொன்மத்தின் ஆணையை நாட வேண்டும். கனவுக்கும் கவிதைக்குமுள்ள தொடர்பை யுங் ஆராய்கிறார். கனவானது முழுக்க முழுக்க அடிமனத்தால் உருப்பெறுகிறது. ஆனால் கவிதை யானது கவிஞனின் அறிமனத்தால் செப்பனிடப்படுகிறது. கனவுகளும் தொன்மங்களும் மனித மனக்கோளாறுகளைப் போக்குவனவாகவும் அறிவு கொளுத்துவனவாகவும் அமையலாமென்றார் யுங்; ஓரிலக்கியத்தில் கலைத்தன்மை குறைவுடையதாக இருப்பினும் அதில் தொன்மக் கூறுகள் சிறப்பாக அமைந்துவிடின் அது கற்போரை ஈர்க்கக்கூடிய ஆற்றல் பெறும் என்று யுங் கருதுகிறார். தொன்மம் என்பது இலக்கியப் படைப்புக்கு உறுதுணை செய்யும் மூலப் பொருளாகும்.

படைப்பாளன் பழங்கதைகளையே மீண்டும் மீண்டும் வெறுமனே சொல்லிக் கொண்டிருப்பதற்குப் பதிலாகப் புதிய புதிய படிவங்களைத் தேடிப் படைப்பது அவசியம். அப்படி உருவாக்கும் படைப்புகளில், அந்தக் கதைகளில், அதைச் சொல்லும் ஆற்றலில் ஒரு தொல்படிவத் தன்மை தோய்ந்து கிடப்பதை அனுமானிக்க இயலும். மக்கள் பொது வாழ்வில் கூட சமய நம்பிக்கைகள் கொண்ட சில தொன்மக் கூறுகள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். குறிப்பாக, தேசியக் கொடியை வணங்குதல், தாய்நாட்டை நேசித்தல், நாட்டுப் பற்றுடையோரின் (பக்தர்களைப் போன்ற) செயல்கள், அரசியலமைப்புச் சட்டத்தை மதித்தல், தலைவர்களுக்காகத் தியாகம் செய்தல் போன்ற அனைத்தும் சமய வாழ்வின் சாயல்களே என்பர் மானிடவியலார்.

'ஆர்க்கிடைப்' (Archetype) எனும் சொல் முதலில் பிளேட்டோவினால் கையாளப்பட்டுப் பின்னர் பல பெயர் களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. 'ஆர்க்கிடைப்' எனும் சொல்லுக்கு மூலப்படிவம் என்றும் மூலக்கூறு என்றும் தொல்படிவம் என்றும் தமிழில் சொல்லாக்கங்கள் உருவாகி யுள்ளன. மூலப் படிவங்கள் அப்படியே நூற்றுக்கு நூறு அதன் முழுத்தன்மையோடு வெளிப்படுவதில்லை. ஆனாலும் அதன் வெளிப்பாட்டை மனிதனின் படைப்பாக்கங்களில் காலந்தோறும் காண முடிகிறது. ஆர்க்கிடைப்ஸ் எனப்படும் கருத்துப் படிவங்களை கார்ல் குஷ்தவ் யூங் (Carl Gustuv Jung) தமது கட்டுரைகளில் ("Archetypes of Collective

Unconscious'') மற்றும் (''The Concept of the Collective Unconscious'') விரிவாக விளக்குகிறார். ஆர்க்கிடைப் எப்போதும் எங்கும் தனக்குரியதொரு தன்மையோடு தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் ஆற்றலுடையது என்று யூங் கூறுகிறார்.

தொல்படிமவியல் :

தொல்படிமங்கள் (Archetype) அல்லது தொன்மைக்கால வடிவவகைகள் (Primordial types) உள்ளத்தின் அடிப்படையிலான நடவடிக்கைகளில் பிரதிபலிக்கின்றன. இவை மனிதனின் தொன்மைக் கதைகள் அல்லது தொன்மங்கள் (Myths). கனவுகள் மற்றும் கலைவடிவங்கள் ஆகிய மூன்று வழிமுறைகளிலும் வெளிப்படக்கூடியன என்று ஃப்ராய்டின் மாணவரும், மதபோதகரின் மகனுமாகிய குஸ்தவ் யுங் கூறுகிறார். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இனம், மரபு முதலியவற்றின் நினைவுகள், தடம்பதித்த உணர்வுகள், நனவிலி மனத்தில் (Unconsious mind) படிந்து கிடக்கின்றன. இவையே குறிப்பிட்ட படிமங்களாகவும், உருத் தோற்றங்களாகவும், கதைக் கருக்களாகவும் புதுப் பிறப்பு பெறுகின்றன என்பது யுங் கொள்கையின் நிலைப்பாடு. இத்தொல்படிமங்கள் மனித நடத்தைகளின், மனித வாழ்க்கை யனுபவங்களின் வெளிப்பாடுகள். யுங்கின் இத்தகைய கருத்து நிலைகளிலமைந்த திறனாய்வு, தொல்படிமவியல் திறனாய்வு (Archetypal Criticism) என்றும் தொன்மவியல் திறனாய்வு (Myth Criticism) என்றும் அழைக்கப்படுகிறது.

இருபதுகளில் ஃப்ராய்டிசம் செல்வாக்குப் பெறத் தொடங்கியதென்றால், யுங்கின் உளவியல் முப்பதுகளில் பிரசித்தம் பெறத் தொடங்கியது. மாட்பாட்கின் (Miss. Maud Bodkin), நார்த்ரோப் ஃப்ரை (Nortnrop Fry) ஆகிய இருவரும் தொல்படிமவியல் திறனாய்வில் மிகவும் குறிப்பிடப் படுபவர்கள்: ஃப்ரை தனது 'திறனாய்வின் பகுப்பமைவு' (Anatomy of Criticism) எனும் நூல் இலக்கிய கட்டமைப்பிற்கும் தொல்படிமத்திற்கும் உள்ள தொடர்பை சித்தரிக்கின்றார். திறனாய்வு முறைகளிலுள்ள இடைவெளிகளைத் தகர்க்கிற வழிமுறைகளில், தொல்படிமவியல் திறனாய்வுக்குச் சிறப்பான பங்கு உண்டு என்று ஃப்ரை கூறுகின்றார். குமாரி பாட்கின், யுங்கின் வழியைப் பெரிதும் பின்பற்றுகிற அதே நேரத்தில், ஃப்ராய்டையும் ஓரளவு ஏற்றுக்கொள்

கிறார்; இவர் சமய உண்மையின் ஊற்றுக் கண்ணாகக் கவிதையைக் கொள்ளமுடியும் என்பதில் தொல்படிமக் கருத்து நிலையை வரவேற்கிறார். பாட்கினின் 'கவிதையில் தொல்படிம வார்ப்புக்கள்' (Archetypal Patterns in Poetry) எனும் நூல் தொல்படிமத் திறனாய்வில் ஒரு முன்னோடியாகும்: சாவின் இறுதியை நோக்கிய சரிவில், வாழ்க்கை புதுப்பிக்கப்படுகிறது என்று கூறும் பாட்கின், 'மீள் பிறப்பு' (rebirth) என்பதை முக்கியமான தொல்படிமமாகக் கொள்கிறார்.

'புதுப்பிறப்பு'ப் பெறுவதைப் போன்று, ஆன்மீக இலச்சினையை அல்லது சுய அடையாளத்தைத் தேடுதல் என்பதையும் தொல்படிமமாகக் கருதலாம். சமுதாய அங்கீகாரமற்ற ஒழுக்கமுறையில் பலியாகி, சுய அடையாளத்தைத் தேடுகிற தொல்படிமத்தை இளங்கோவடிகளின் மாதவியும், ஜானகிராமனின் அலங்காரத்தம்மாளும், ஜெயகாந்தனின் கங்காவும் உணர்த்துகிறார்கள்:

(தொடரும்)

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்	வாழ்நாள் கையொப்பம்
உள்நாடு ரூ. 25.00	உள்நாடு ரூ. 250-00
வெளிநாடு ரூ. 125-00	வெளிநாடு ரூ. 750-00

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. வி. குமாரசாமி அவர்கள், சிங்கப்பூர்/ரியூனியன் தீவு.	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00

திரு. A. T. A. ஈஸ்வர அடிகளார்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
குரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00
பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
திரு. K. வேணுகோபால், சென்னை-14	25 00
திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கிள்ளான், மலேசியா.	25 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள் 51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79.	5 00
திருமதி. இராதாபாய் 302, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1	25 00
Sri K. E. Manavalan 332/29, Pillanna Garden, 1 St, Stage 6th Cross, Bangalore-84.	10 00

மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

திரு. சந்தான வடிவேல், 15, சிவசங்கரன் தெரு, ராஜாஜி நகர், பல்லாவரம், சென்னை-43.	25 00
திரு P. பாலசுந்தரம், RT போர்மன், கார்டன் உட்ராப், 67, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை-43.	51 00
திரு. ம. வெண்ணிலா, 4, 48வது தெரு, நங்கநல்லூர், சென்னை-61.	50 00
D. வரலட்சுமி, 22, வேம்புலி அம்மன் கோயில் 2வது தெரு, பல்லாவரம், சென்னை-43.	20 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது. ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி எம்.ஏ., பி.லிப்.

கழகப் புதிய வெளியீடுகள்

திலகவதியார் நாடகம் - டாக்டர் அ. கலியபெருமாள்	25 00
சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம் —டாக்டர் எஸ். பி. சபாரத்தினம்	15 00
பாவேந்தர் பாட்டுக் கதைகள் - டாக்டர் பூவண்ணன்	15 00
பாட்டுத் தோட்டம் ,, ,,	20 00
தமிழனே இது கேளாய்—டாக்டர் முத்துக்குமரன்	30 00
அரசியல் மேதை அம்பேத்கார்—மோ. பாலசுப்பிரமணியம்	16 00
ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு — புலவர் கா. கோவிந்தன்	30 00
In the Kingdom of Nataraja —Chantral Boulanger Tom Dawber	100 00
நாளிதழ் ஆசிரியர்—கருப்பையா, பி.ஏ.	85 00

தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும்

கோயிற் கலைச்செல்வர் தி. இராசமாணிக்கம் 25 00

சிவனும், முருகனும், தேவியும் மட்டுமன்று; ஐயப்பனும், சித்திரகுப்தரும், சகலகலாவல்லியும், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரும் இவர் கண்களிலிருந்து தப்பவில்லை. போசளர் (கோசலர்), சாளுக்கியர் கட்டிய கோயிற் கலைச் செல்வங்களும், தூங்கானை மாடம், கரக்கோயில்களின் அமைப்புகளும், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் போன்ற பகுதிகளும் படிக்கத்தகுந்தவை. பின்பகுதி சிறப்பாக எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்கின்றது. தமிழகக் கோயில்கள், பின்னிணைப்பு போன்ற பகுதிகள் கோயிற்கலையை அறிய உதவுகின்றன. கோயிற்கலையை யும், தெய்வங்களின் பெருமைகளையும் இதைவிடச் சிறந்த நூல் விளக்கமாக வெளிவரவில்லை என்பதைப் பெருமை யுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் 40 00

ஆரியம் கலவாத தமிழ்ப் பண்பாடு இருக்கின்றதா? என்று தமிழ் மக்களே வினவத் தொடங்கிய காலத்தில், அத்தகைய தொரு சிறந்த பண்பாடு சிறந்தோங்கி வளர்ந்துள்ளது என்பதைச் சான்றுகளுடன் நாகரிகம், சமயம், கலைகள், பொழுதுபோக்கு என்ற தலைப்புகளில் எழுதியுள்ள மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூலை வரவேற்றுத் தம் பெருமையை பெருமிதத்துடன் படித்துப் பயனடைய உதவு கின்ற இந்நூலை எல்லோரும் வரவேற்க வேண்டும். சிறந்த தூயதமிழ் நடையையும் பாராட்டிப் பயன்பெறுவார்கள் என்பதும் எங்கள் எண்ணமாகும்.

பதிவு எண் : M / 4899 OCT. 1993

Asian Educational Services
(C-2-15, SDA, New Delhi-110016.)
Branch : No. 5, Sripuram First Street,
Royapettah, Madras-600 014
Phone No. 8265040

A Comprehensive Tamil and English Dictionary —WINSLOW M.		165	00
English Tamil Dictionary —WINSLOW		165	00
Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature —SINGARAVELU MUDALIAR		185	80
Thirukkural Original Tamil with English Translation —DREW & LAZARUS	GB	50	60
	HB	35	00
	PB	20	00
Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly —KATHIRAIVER PILLAI		165	00
A Grammar of the Common Dialect of the Tamil language —JOSEPH BESCHI		145	80
Dictionary of Tamil Proverbs —LAZARUS JOHN		195	00

Books can be had of :

The South India Saiva Siddhantha Works Publishing Society Tinnevelly, Ltd
154, T. T. K. Road, Madras-18

Branches :

79, Prakasam Saalai (Broadway), Madras-108
Tirunelvelli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam-1 Trichirappalli-2 Salem-1

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-௬௮ பரல்-௬ நவம்பர் 1993
திருவள்ளுவர் ஆண்டு-௨௦௨௪ ஐப்பசி



"செந்தமிழ்ச் செல்வி"
(செந்தமிழ்த் திங்கள் இதழ்)
நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு
முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் செ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்
ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிட்.,

உள்ளுறை

	பக்கம்
அலை ஓய்ந்தது	௮௧
புண்ணியத்தின் தவச்செல்வர்!	௮௩
பக்தி இலக்கியத்தில் தொல்படிவங்கள் : சில அணுகுமுறைகள்	௮௬
தமிழ்மொழி இலக்கியமும் இலக்கியத் திறன் ஆய்வும்	௯௪
சங்ககால துறைமுக நகரங்களும் பெயர்களும்	௧0௨
கருத்து அறிவிக்கும் கருவியா மொழி?	௧௧0
பலகுடையும் தங்குடையும்	௧௩௪
செய்திகள்	௧௧௮

முருகவேள் பன்னிரு திருமுறை

—டாக்டர் தணிகைமணி
வ. சு. செங்கல்வராயப் பிள்ளை 940 00

அருணகிரிநாதப் பெருமான் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் முழுவதும், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் மற்றும் திருமுருகாற்றுப் படை, சேய்த்தொண்டர் புராணம் முதலியவைகளை பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளது. பாமரரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய முறையில் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை உரை வகுத்துள்ளார்கள்.

திருப்புகழ் மணத்தைப் பரப்புவதற்காக அனைத்துத் தொகுதிகளும் கணிப்பொறி மூலம் தொகுக்கப்பெற்று ஒருங்கே கிடைக்கக் கழகவழி வெளிவந்துள்ளன.

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு ௨0௨௪ - ஐப்பசி
நவம்பர் - 1993
சிலம்பு-௬௮, பரல்-௩

அலை ஓய்ந்தது

அலை ஓய்ந்தது. ஆலந்தக்கடல் அடங்கியது; கருணைக் கடல் பொங்கி அவிந்தது; வாரி வற்றியது. ஆனந்தவாரி அமைதியானது. கிருபானந்தவாரி மறைந்தார். அலைகடலோடியும் தெய்வத் தமிழ் பரப்பிய திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 7-11-93 இல் முருகனடி உற்றார்.

அருள்மொழியரசு, திருப்புகழ் சோதி, அமுதமொழிக் கொண்டல், சொற்பொழிவு வள்ளல், இசைப் பேரறிஞர், கலைமாமணி, திருப்பணி சக்கரவர்த்தி, திருப்பணி சரபம் போன்ற பல பட்டங்களைப் பெற்ற வாரியார் சுவாமிகள் தம் 87 ஆம் அகவையில் இறையடியுற்றது தமிழ் உலகிற்கும் சைவ உலகிற்கும் தமிழர்கட்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இசைக் கலையும் சொற்பொழிவுக் கலையும் தமக்கு மட்டுமே உரியது என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கையில் அவ்விரண்டு துறைகளிலும் சிறந்து விளங்கிய நற்றமிழர் வாரியார் சுவாமிகள். தமிழகத்துப் பட்டிதொட்டிகள் அனைத்துக்கும் சென்று தம் இசைப் பேருரையால் இளஞ்சிறார் முதல் முதியோர் வரை அனைவரையும் காந்தம்போல் கவர்ந்தவர் அவர். பேருரைக்கு நடுநடுவே சிறுவர் சிறுமியர்க்கு ஏற்ற சிறுசிறு கேள்விகளைக் கேட்டு அவர்களைச் சிந்திக்க வைப்பார். வயதான முதியவர்கட்குக் குட்டிக் கதைகளைச் சொல்லிச் சிரிக்கவைப்பார். அவருடைய பேருரையில் இசையுடன் கலந்த பாடல் இருக்கும்; நகைச்சுவை இருக்கும். சிந்தனை செறிந்த கருத்துக்கோவை இருக்கும். இராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், திருப்புகழ் என்று பல்வேறு இலக்கியங்கள் பற்றித் தொடர் சொற்பொழிவுகள்

க—7

192458

நிகழ்த்துவார். ஏறத்தாழ எழுபது ஆண்டுகளாக இந்த இறைபணியை அவர் ஆற்றிவந்தார்.

இறைவனுக்குச் சொற்கோயில் அமைத்ததுடன் கற்கோயிலையும் அமைக்கலானார். தம் சொந்த ஊரான காங்கேய நல்லூரில் தாம் வழிபடு கடவுளான முருகப்பெருமானுக்குத் தனிக்கோயில் எழுப்பியுள்ளார். வயலூர் முருகப் பெருமானுக்குக் கோபுரம் சமைத்தார். வடலூர் வள்ளற் பெருமானின்மேலிருந்த ஈடுபாட்டால் வடலூர் சத்திய ஞான சபை திருப்பணி செய்தார், பல்வேறு கோயில்களின் திருப்பணிக்குத் தமக்குக் கிடைத்த பொருளை வாரிவழங்கினார்.

தம் வயதையும் உடல்நிலையையும் பொருட்படுத்தாது நாள்தோறும் பேருரை நிகழ்த்துவார். ஓர் ஊரில் பேருரை நிகழ்த்தும்போதே சுற்றி 40 மைல் தொலைவிலுள்ள ஊர்களுக்குக் காலையும் பிற்பகலும் சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மீண்டும் இரவு 7 மணிக்கு வழக்கமான தொடருரை நிகழ்த்த வந்துவிடுவார். ஓய்வைவிடப் பணி செய்வதையே தமக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதினார். உள்ளூரா, வெளியூரா, உள்நாடா, வெளிநாடா எதைப்பற்றியும் சிந்திக்கமாட்டார். நேரம் இருப்பின் நிகழ்ச்சிக்கு ஒத்துக்கொள்ளத் தயங்கமாட்டார்; ஒருமுறை சுவிட்சர்லாந்தில் ஒரு நிகழ்ச்சி. முதல்நாள் இரவு 12 மணிக்குச் சென்னையைவிட்டுப் புறப்பட்டு மறுநாள் சுவிட்சர்லாந்து சென்று பகலில் நிகழ்ச்சியை முடித்துவிட்டு மீண்டும் இரவு 12 மணிக்குச் சென்னை திரும்பினார். மற்றவர்களை மகிழ்விக்க வேண்டுமென்ற பெருமனம் பெற்றிருந்த காரணத்தினாலேயே அவரால் இது முடிந்தது.

இசைப் பேருரை நிகழ்த்துவதற்குத் தொடங்கிய காலகட்டம், 1930-40 ஆண்டுகள். திருநெல்வேலியில் ஆயிரத்தம்மன் கோயிலில் அடியவர்கள் உயிர்ப்பலி கொடுத்துக்கொண்டிருந்த நேரம், அதை நிறுத்தவேண்டுமென சைவ சித்தாந்தக்கழக நிறுவனர்களுள் ஒருவரான திரு. வ. திருவரங்கனார் வாரியார் சுவாமிகளை அழைத்து நாள்தோறும் சமயப்பொழிவு நிகழ்த்தச் செய்தார். அத்துடன் தொடர்ந்து அறப்போராட்டம் நடத்திப் பலியை நிறுத்தினார்.

திருச்சி நகராட்சி மேலாளர் உலகநாதபிள்ளை வாரியார் சுவாமிகளிடம் ஈடுபட்டு திருச்சி நகரில் சுற்று

வட்டாரங்களிலும் வாரியார் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்ந்து ஏற்பாடு செய்து ஊக்கப்படுத்தினார். அவர் அக்காலத்தில் செய்த உதவியை வாரியார் சுவாமிகள் என்றென்றும் மறக்கவில்லை. அவர் குடும்பம் பின்னாளில் நலிவுற்றது. வாரியார் சுவாமிகள் அக் குடும்பத்திற்குப் பல வழிகளிலும் உதவினார். திருமணம், வேலைவாங்கித் தருதல் என்று அக்குடும்பத்தார்க்கு இறுதிவரை உதவினார். இறப்பதற்கு ஒரு மாதத்திற்குமுன் உலகநாத பிள்ளையின் மகளை அழைத்துத் தம்மாலான பொருளுதவியைச் செய்தார். செய்நன்றி மறவாப் பண்பு வாரியார் சுவாமிகள் உடனுறைந்த பண்பாகும்.

‘ஞானப்பழம்’ என்றும் ‘வாரியார் சுவாமிகள்’ என்றும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்த வாரியாரின் சொந்த ஊர் வேலூர் அருகே உள்ள காங்கேயநல்லூர். இவரது தந்தையின் பெயர் மல்லையதாஸ் பாகவதர்; தாயார் பெயர் கனகவல்லி அம்மாள். இவர்களுக்கு 11 பேர். 7 பேர் ஆண்கள், 4 பேர் பெண்கள். 4-ஆவதாக பிறந்தவர் வாரியார். 1906 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் தேதி பிறந்தார். வாரியார் 3 வயது குழந்தையாக இருந்தபொழுதே அவரது தந்தை எழுதப்படிக்கக் கற்றுக்கொடுத்தார். இதனால் தனது 5 வயதிலேயே தானே புத்தகங்களைப் படிக்கத் தொடங்கிவிட்டார்.

பள்ளிக்கூடம் அனுப்பினால் கெட்டுவிடக்கூடும் எனக் கருதிய அவரது பெற்றோர்கள் அவரைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லை. அவரது தந்தையே வீட்டிலிருந்து படிப்பு சொல்லிக்கொடுத்தார். தந்தையின் கடுமையான பயிற்சியினால் வாரியார் தமது 12 வயதிற்குள்ளேயே பதினாராயிரம் பாடல்களை மனப்பாடம் செய்து பாராட்டுப் பெற்றார். 8 வயதில் வெண்பா முழுக்க தெரிந்தவர் வாரியார்.

வாரியாரைப்போல அவரது தந்தை மல்லையதாசரும் சொற்பொழிவு செய்வதில் வல்லவர். எனவே மகன் வாரியாரையும் இளம்வயதிலேயே சிறியசிறிய கூட்டங்களில் பிரசங்கம் செய்ய வைத்தார். வாரியார் தமது 19 ஆவது வயதில் திருமணம் செய்துகொண்டார். தாய்மாமன் மகள் அமிர்தலட்சுமியை அவர் மணந்தார். கணவனுக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்த அமிர்தலட்சுமி அம்மாள் 6 ஆண்டுகளுக்கு முன்பு மரணம் அடைந்தார். வாரியார்—அமிர்தலட்சுமி தம்பதிகளுக்குக் குழந்தைகள் இல்லை. வாரியார் தீவிர முருக பக்தர். அதற்குக் காரணம் அவரது தந்தை மல்லையா

தாசர் முருக பக்தராக இருந்ததுதான். உலகில் எங்கெங்கு முருகன் கோவில் இருக்கிறதோ, அங்கெல்லாம் சென்று முருகனை வழிபட்டவர் வாரியார். ஏராளமான கோவில்களுக்குத் திருப்பணி செய்து கொடுத்த பெருமையும் இவருக்கு உண்டு.

காங்கேயநல்லூர் முருகன் கோவில் திருப்பணி, வள்ளி மலை வள்ளியம்மை கோவில் திருப்பணி, காஞ்சிபுரம் திருமதில் திருப்பணி, வயலூர் முருகன் கோவில் திருப்பணி, மதுரை கூடலழகர் திருப்பணி, நெல்லையப்பர் கோவில் திருப் பணி, கோவை ஐயப்ப சுவாமி திருப்பணி என்று 30 க்கும் அதிகமான கோவில்களில் திருப்பணி செய்து இருக்கிறார்.

கடந்த மாதம் 19 ஆம் தேதி சொற்பொழிவு நடத்த லண்டன் சென்றிருந்தார். அங்கு உடல்நலம் பாதிப்புக்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உடல் நலம் தேறி விமானம் மூலம் சென்னை திரும்பினார். பம்பாய் வரை விமானத்தில் நன்றாகப் பேசிக்கொண்டே இருந்தவரின் உயிர் சென்னை வந்தடைந்தபோது இல்லை. தமது தமிழ் மண்ணில்தான் தமது உயிர் போகவேண்டும் என உயிரைக் கையில் பிடித்துவைத்திருந்த அவர், தமிழர்களின் நெஞ்சங் களில் இருந்து எளிதில் மறக்க முடியாதவர்.

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 25.00	உள்நாடு	ரூ. 250-00
வெளிநாடு	ரூ. 125-00	வெளிநாடு	ரூ. 750-00

புண்ணியத்தின் தவச்செல்வர்!

கவிஞர் சொ. ச. செந்திலாண்டவன்

நடமாடிய திருப்புகழே! நாட்டில் நல்ல
திருப்பணிகள் தலந்தோறும் செய்த நல்லோய்!
மடைதிறந்த வெள்ளம்போல் சொல்லும் சொல்லில்
மக்களையே கட்டிவைத்த சொல்லின் செல்வ!
உடல்நிறைய நீறணிந்து உண்மை ஓங்க,
உலகமெலாம் சொற்பொழிவு செய்த மேலோய்!
விடையேறிய பெம்மானின் தாளில் இன்றே
வான்வழியில் விடைபெற்றாய்! கதறுகின்றோம்!

சிவம்பழுத்த செம்மேனி எங்கே? எங்கே?
செம்மாந்த சொற்பொழிவும் எங்கே? எங்கே?
சிவகுமரன் திருப்புகழைச் சொல்லும் எங்கள்
திருமுருக வாரியார்தான் எங்கே? எங்கே?
தவநெறியில் வாழ்ந்தபெரும் சீலம் மிக்கத்
தண்ணளியார் முகம்பார்ப்ப தெங்கே? எங்கே?
புவனமெலாம் புகழ்போற்றும் வெற்றி கொண்ட
புண்ணியத்தின் தவச்செல்வர் எங்கே? எங்கே?

பக்திமலை சாய்ந்ததுவே! பாழும் கூற்றுப்
பறித்துயிரை மாய்த்ததுவே! பல்லோர் போற்றும்
முக்திநெறி அடைந்தாரே! வாழ்வின் மூச்சு
முடியும்வரை பணிசெய்த வல்லான் தாளில்
சித்திநிலை மேம்பட்டு வயலூர் வேலோன்
சீரடியைச் சார்ந்தாரே! சிந்தை எல்லாம்
ஒத்திருக்கும் மனமுடையார் நெஞ்சை விட்டு
ஓடாத புகழுடம்பைப் பெற்றார் இன்றே!

காடுதிருத்தி நாடாக்கும் மன்னன் போலே
மனக்காட்டில் சமயப்பயிர் தளிர்க்கச் செய்தே
நாடுபோற்ற வாழ்ந்தநல் முருக அன்பர்!
நல்லோரின் இதயத்தில் வாழும் அன்பர்!
வாடினார் எனும் செய்தி கேட்டபோதே
வாயொன்று போதாமல் அரற்றினோமே!
தேடிநிதம் அவர்கொள்கை நெஞ்சில் கொண்டே
நேயமுடன் மனத்தினிலே தேறுதல் கொள்வோம்!

பக்தி இலக்கியத்தில் தொல்படிவங்கள் : சில அணுகுமுறைகள்

முனைவர் சிவ. மங்கையர்க்கரசி,
தமிழ்த் துறைத் தலைவர், அரசினர் மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை.

(முன்னிதழ் எகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உளவியல் அறிஞர் யுங், தொல்படிமங்களுக்குச் சமயங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றின் அடிப்படையிலிருந்து சான்றுகளைத் தருகின்றார். அம்முறையில், பூமித்தாய், சூரியன், அக்கினி முதலியனவும், கிறித்து, கிருஷ்ணன், சாத்தான், ராமன், சீதை, அகலிகை, மண்டோதரி, ராவணன், கோவலன், கண்ணகி, மாதவி முதலியோரும் தொல்படிமங்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இவர்கள் குறியீடுகளாகக் கொள்ளப்பட்டு, மனித நடத்தைகளுக்குப் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றனர். மனித வாழ்க்கையனுபவங்களில் அடிப்படைகளாக அமைந்து, பண்பு நிலைகளின் தோற்ற வடிவங்களாக விளங்கும் காதல், தியாகம், கற்பு, வீரம், சோரம், துரோகம், கோழைத்தனம், வஞ்சகம், அழிவு முதலியன தொல்படிமங்களின் வெளிப்பாடுகளாகும்.

ஃபிராய்டினாலும் யுங்கினாலும் வளர்த்தெடுக்கப்பட்ட அறிவியல் நோக்குடைய நவீன உளவியல் இலக்கியவாதிகளை கவர்ந்தது. இலக்கியக் கொள்கை நெறிகளில் உளவியல் கொள்கை என்ற ஒன்று அமைந்ததோடு மட்டுமல்லாமல், அது அமைப்பியல் (Structuralism) மற்றும் மிகை யதார்த்தவியல் (Surrealism) திறனாய்வாளர்களையும் கவர்ந்துள்ளது. இலக்கியத்தின் புரியாத இடங்களைப் புரிந்துகொள்ளவும், முக்கியமாக உட்பொருள்களை விளங்கிக் கொள்ளவும் உளவியல் திறனாய்வுக் கொள்கை பெரிதும் உதவுகின்றது. மனங்களும் மனவுணர்வுகளும் தூலமற்ற நுண்பொருள்களே என்றாலும், அவற்றை அறிவியல் நிலையில் ஆராய்ந்து பார்க்கிறது நவீன உளவியல், இவ்வாறான உளவியல் திறனாய்வில், தொன்மவியலின் தாக்கம் பிரதானமாக உள்ளது என்பதையும் கவனிக்கவேண்டும்.

இலக்கியத்தில் உளவியலின் அக்கறையும் பங்கும் மிகவும் குறிப்பிடத்தக்கது. மனத்தின் பிரதிபலிப்பைச் சொற்கள் பிரதிபலிக்கும் என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டது உளவியல் திறனாய்வு. ஃபிராய்டு, யுங் இருவருமே தம்தம் கோணத்திலிருந்து உளவியல் திறனாய்விற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். யுங்கின் கொள்கைக்கு இலக்கியத் திறனாய்வாளர்களிடம் வரவேற்பு இருந்தாலும், அதனைவிட ஃபிராய்டின் கொள்கையே அதிகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. தொல்படிமவியல் கொள்கை, ஃபிராய்டின் காலத்திலேயே செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டது. ஆனால், இதில் அறிவியல்முறை காணப்படவில்லையென்றும், மறைஞானப் பண்பு (Mysticism) அதிகம் காணப்படுகிறதென்றும் ஃபிராய்டினால் கண்டிக்கப்படுகிறது.

தமிழ் இலக்கிய உலகில் நுழைந்து பார்க்கும்போது காலத்திற்கேற்ப, சூழலுக்கேற்பச் சிற்சில வேற்றுமைகளோடு மூலப்படிவங்கள் தம்மை வெளிப்படுத்திக்கொண்ட தன்மைப் புலப்படுகின்றது. கடவுள் மூலப்படிவம் (God Archetype), தாய் மூலப்படிவம் (Mother Arehetype), கற்பு மூலப்படிவம் (Virginity Archetype) போன்றவை உலகப் பொதுமை வாய்ந்த மூலப்படிவங்களாகக் (Universal Archetypes) கருதப்படுகின்றன. சி. ஜி. யூங் மூலப் படிவங்கள் உலகப் பொதுமை வாய்ந்தவை என்ற கருத்தை வெளியிட்டார். இந்த ஆழ்மன மூலப்படிவ ஒப்புமையாக்கம், மனிதனின் படைப்பாழ் மனதில் கிடக்கின்ற மூலப்படிவங்கள் அடிப்படையில் மாறாப் பொதுத்தன்மை கொண்டவை எனும் கருத்தினை உணர்த்துகிறது. மூலப்படிவங்கள் கால வர்த்தமானச் சூழல்கட்கேற்ப மேல்தளத்தில் சில புதுப் புதுச் சாயங்களைப் பூசிக்கொண்டு வெளிப்பட்டாலும் அவை அடிப்படை அமைப்பில் (Structure) ஒன்றுதான். இதற்கு இந்தியத் தொன்மங்களை குறிப்பாகத் தமிழ்த்தொன்மங்களை—சான்று காட்டலாம்.

கற்பு மூலப்படிவம் (Virginity Archetype) என்பது காலங்காலமாக மனிதனின் படைப்பாழ் மனக்கடலில் கிடந்து வந்துள்ளதை தமிழ் படைப்புலகு புலப்படுத்துகிறது. கற்பு (Virginity) என்பது ஓர் எண்ணம் (Idea) அல்லது ஒரு சூக்குமச் சிந்தனை (Abstract idea) என்று கருதப்படுகிறது. இந்தக் கற்பு மூலப்படிவம் காலந்தோறும் தன்னைப்

பல்வேறு தன்மைகளோடு, வடிவங்களோடு வெளிப்படுத்திக் கொண்டு வந்துள்ளதை தமிழ்ப் படைப்பிலக்கியங்கள் காட்டுகின்றன. படைப்பாக்கங்கள் வெவ்வேறாகத் தோன்றினாலும் படைப்பாழ்மனதில் கிடக்கின்ற மூலப்படிவங்கள் மாறா அமைப்பொருமை கொண்டவை; கற்பு மூலப்படிவம் மேலைப் படைப்பிலக்கியங்களில் வெண்பனியாகவும், புனித ஹெலனாகவும், கீழைப் படைப்பிலக்கியங்களில் வெண் முல்லையாகவும், குற்றமற்ற அகலிகையாகவும், தன்னை வெளிப்படுத்திக்கொள்ள முயன்றுள்ளது. இந்த ஒப்புமைத் தன்மையைத்தான் சி. ஜி. யூங் கண்டுபிடித்து வெளிவுலகிற்கு உணர்த்தினார். கற்பின் மூலப்படிவமாக சங்ககாலப் படைப்பில் வெளிப்பட்ட முல்லை மலரும், சேக்ஸ்பியரின் மூலப்படிவமான வெண்ணிறப் பனியும் ஒரே நிறத்தைக் கொண்டவை என்பது கவனிக்கத்தக்கது. இந்த வெளிப்பாடு ஓர் அமைப்பை (Structure) அடிப்படையாகக் கொண்டது என்பது எண்ணத்தக்கது. தமிழ் இலக்கிய உலகம் காட்டும் அகலிகை முதலாகக் கற்புடை மகளிர் ஐவர் எனும் கருத்து (Concept) போல் மேலை இலக்கிய உலகிலும் ஹெலன், வீனஸ் போன்ற கற்புடை மகளிர் பேசப்படுகின்றனர். தாய் மூலப்படிவம் (Mother Archetype) பற்றி விரிவாக விளக்கிய யூங், கருணைத்தாய் மூலப் படிவத்திற்கு (Benevelent Mother Archetype) தமிழ்த் தொன்மத்திலுள்ள மீனாட்சியையும், வீரத்தாய் மூலப்படிவத்திற்கு (Terible Mother Archetype) காளியையும் சுட்டிக் காட்டுகிறார்.

தமிழரிடத்தே காணப்பெறும் இறைவுணர்விற்கு என்றும் குறைவேயில்லை. காலங்காலமாக மக்களிடத்தே கோயில் அமைப்புகள், இறைநெறிகள் மற்றும் வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. தொடக்ககால மனித சமுதாயத்தின் முதல் படைப்பாக்கம் கடவுளைப் பற்றியும், அடுத்து கடவுளையும் மனிதனையும் இணைத்துச் செய்த புராணப் படைப்பாகவும் அமைந்தது. இந்து மதத்தில் காணப்படும் பல கடவுள் வழிபாட்டில் (Polytheism) இறைத்தன்மைக்கு மனித உருவமும், மனித உணர்வுகளும் சார்த்தப்பட்டன.

சமய நம்பிக்கைகள் :

மனித ஆற்றலுக்கப்பாற்பட்ட ஆற்றல் ஒன்றுள்ளது என்ற தொன்மை மக்களின் நம்பிக்கையே சமயம் தோன்றுவதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது. தொன்மை

மக்களின் அந்நம்பிக்கை பல நிலைகளில் மலர்ச்சி பெற்று வளர்ச்சியுற்று பல சமயப் பிரிவுகளைத் தோற்றுவித்தது. ஒவ்வொரு சமயப் பிரிவின் நிலைபேறுடைமைக்கு அந்நம்பிக்கை வழி வகுத்தது. நீண்டு நிலைபெற்ற ஒவ்வொரு சமயமும் மக்களிடம் வேரூன்றியுள்ள அச் சமய நம்பிக்கைகளால் நிலைபெறுகிறது. சமய வாழ்வில் இடம்பெறும் சடங்குமுறை புனிதத் தன்மையோடு (Sacred) தொடர்பு கொள்வதற்காக செய்யப்படுகிறது. (எ. டு.: கோயிலுக்குச் செல்லும்போது குளித்துவிட்டுச் செல்லுதல்: உடல் தூய்மை உள்ளத் தூய்மையின் குறியீடாக (Symbol) அமைகிறது. உடலளவிலும் உள்ளத்தளவிலும் தூய்மையாக கடவுளை அணுகினால்தான் பிரார்த்தனையின் பலன் கிட்டும் என்பதை இந்நம்பிக்கை சுட்டிக் காட்டுகிறது.) சமயத்தைக் கட்டிக்காப்பது சமய நம்பிக்கை. அச் சமய நம்பிக்கைக்கு வலுவூட்டுவது சடங்குகள் நிகழ்த்துதல். இவ்வனைத்தும் ஒருங்கிணைந்து செயல்படும் முறையில்தான் சமயத்தின் ஆற்றல் அமைகிறது.

சமயம் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் ஓர் உயிரோட்டமுள்ள சமுதாய நிறுவனமாகச் செயலாற்றுகிறது. சமுதாய அமைப்பின் கட்டுக்கோப்பு சிதறாமலிருக்க (Social disorganisation) சமயம் துணை நிற்கிறது. சமயம் கற்பிக்கும் எண்ணற்ற கருத்தாக்கங்கள் மக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றைக் கண்டிப்புடன் ஏற்றுச் செயல்பட வைக்கின்றன. சமுதாயத்தின் கட்டுக்கோப்பை நிலைப்படுத்தும் நெறிமுறைகளும் (Norms) விழுமியங்களும் (Valne) சமயக்கூறுகளோடு தொடர்பு பெறுவதால் அவை வலிமையையும் ஆற்றலையும் பெற்றுச் செயல்படுகின்றன. சமுதாயத்தில் நடத்தை முறைகளைச் சுட்டிக்காட்டுவதும் அதனைப் பின்பற்ற அறிவுறுத்துவதும் சமயத்தின் பெரும்பணியாக விளங்குகிறது.

சடங்குமுறைகள் (Rituals):

சமயம் என்னும் நிறுவனத்தின் மிகப் பெரும் ஆற்றல்களாக சடங்குகளும் வழிபாட்டு மரபுகளும் திகழ்கின்றன. சமயச் சார்புடைய சடங்குகள் தவிர வாழ்வியல் சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன. சடங்குகள் சமயத்தின் கருப்பொருளாகக் கருதப்படும் புனிதத் தன்மையின்பால் மக்கள்

மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகும்; சடங்குகள் புனிதத் தன்மையைப் பாதுகாக்கவும், அதற்குக் களங்கம் ஏற்படாமலிருக்கவும் தீயவற்றிலிருந்து தனிமைப் படுத்தித் தூய்மையாக வைக்கவும் மேற்கொள்ளப்படுகின்றன. புனிதத் தன்மையோடு தொடர்புகொண்டு அதன் ஆற்றலைப் பெற்றுப் பயனடைய முறையாக மேற்கொள்ளப்பட்ட செயல்கள் சடங்குகளாயின; இறைவனுக்கும் மனமுண்டு என எண்ணி இறைவனின் மனத்தை நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட செயல்களும் சடங்குகளாயின.

'ஒன்றுபட்ட நடத்தைமுறை' (Collective behaviour) மூலம் சமுதாய வாழ்வில் சடங்குகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சமய நிகழ்ச்சிகளின்போது மேற்கொள்ளப்படும் சடங்குகள் மக்களை இணக்கமுறச் செய்கின்றன; ஒன்றுபட வைக்கின்றன; கருத்து வேறுபாடுகளை மறக்கச் செய்கின்றன. ஒன்றுபட்ட நடத்தைமுறை சமுதாயக் கட்டமைப்பை வலுப்படுத்தி நிலைப்படுத்துகிறது. தமிழர்களிடம் பல்வேறு சடங்குகள் காலம் காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளன. அனைத்துச் சடங்குகளும் வாழ்வைப் பல தொடர் நிலைகளாகப் பிரித்து ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மக்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன (எ-டு: பெயர் சூட்டுச் சடங்கு, காது குத்தல், மஞ்சள் நீராட்டு விழா, திருமணம், வளைகாப்பு); தமிழர் சடங்குகளில் பல தகுதிப் பெயர்ச்சி நிலைகள் (Rites of passage) குறிப்பிடத்தக்கவை (எ-டு: குழந்தைப் பருவத்தைக் காப்பு, செங்கீரை, தாலப்பருவம், சப்பாணி, முத்தப்பருவம், வருகை, அம்மானை, சிறுவரை, சிற்றில், சிறுதேர் எனப் பகுத்துள்ளமையைக் காணலாம்).

பழங்கதை :

பழங்கதை ஒரு புனைநிலை; அறிவியல் நிலையிலும், வரலாற்று நிலையிலும் உண்மையானதன்று. ஜெர்மானியப் புதுமையாளர்கள் கால்ரிட்ஜ், எமர்சன், நிட்ஷி ஆகியோரின் முதன்மைக்குப் பின்னர் இது ஒரு வகையான உண்மை அல்லது உண்மைக்குச் சமமானது எனக் கருதப்பட்டது. இது வரலாறு மற்றும் அறிவியல் உண்மையோடு போட்டியிடுவதன்று; அவற்றின் பின்னிணைவு என உணரப்பட்டது. வரலாற்று நிலையில் பழங்கதை சடங்கைத் தொடர்ந்து

அதனோடு இணைந்து செல்கிறது; அது சடங்கின் பேசும் பகுதியாகவும், சடங்கு நிகழ்ந்ததும் கதையாகவும் அமைகிறது. அது காலம் கடந்த கருதுகோள்களுக்கு காலத்திற்கு உட்பட்ட நிகழ்ச்சிகளால் அளிக்கப்படும் சமிக்ஞை வெளியீடு. மனிதர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்று கருதுகிறார்களோ அவற்றின் ஓவியமே பழங்கதையாக அமைகிறது; சமுதாயத்தோடு தொடர்புகொள்ள ஒரு குறியீடாக நிலவியது; பழங்கதை சமயத்திற்கும், கவிதைக்கும் உரிய பொதுவான அடிப்படை அளவுகோல். சமயம் ஒரு பெரும் மர்மம் என்றால், கவிதை அதனின்று குறைந்த மர்மமாகும்.

மரபை உடைத்துப் பிழைக்கிறது மானுடம்; காட்சி செத்து கனவு பிறக்கிறது; கனவு செத்து கவிதை பிறக்கிறது; கவிதை செத்து திறனாய்வு பிறக்கிறது. ஒன்று செத்துதான் மற்றொன்று பிறக்கிறது. நனவை கனவின் வழியாகப் புரிந்து கொள்கிறது மானுடம்; இலக்கியக் கனவு பொய்யல்ல. கனவிற்கு கலை வடிவம் தருகிறபோது அது உண்மையாகிறது; தொன்மங்கள் சமுதாயத்தின் கனவுகள்; இலக்கியங்கள் பண்பட்ட தொன்மங்கள்; அவை மூலப் படிவங்களைக் கையாளுகின்றன. அவை பொதுமன உணர்வுகள். உலகத்தில் காணப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மூலப்பொருள் உண்டு. உலகமே ஒரு நிழல். நிழலுக்கு ஒரு மூலப்படிவம் உண்டு. நிழலுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு எண்ணத்திற்கும் மூலப்பொருள் உண்டு.

பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் :

கடவுள் நம்பிக்கை, சகுனம் பார்த்தல், திருமணச் சடங்கு, மந்திரம் ஓதுதல், நாள்கோள் பார்த்தல், பேய் நம்பிக்கை, ஊழின் வலிமை—முன் வினைப் பயன் பற்றிய நம்பிக்கை போன்றவை தமிழர் வாழ்வோடு கலந்து விட்டவை. இத்தகைய பண்பாட்டு நிகழ்வுப் போக்குகள் இறை நம்பிக்கையோடு ஒட்டி மக்களின் வாழ்வோடு ஆழமாக வேரூன்றியவை.

பண்பாட்டுக் கூறுகளான பழக்க வழக்கங்கள் ஒரு சமுதாயத்தினை வெளிப்படுத்தும் தொன்மைச் சின்னங்களாகும். மனிதனின் நடத்தை மற்றும் ஒழுகலாறுகள் ஆகிய பண்பாட்டுக் கூறுகளைப் படம்பிடித்துக் காட்டுவன பழக்க வழக்கங்களாகும். இப் பழக்க வழக்கங்களோடு

நம்பிக்கைகள் நெருக்கமான உறவு கொண்டிருப்பவை. பழக்க வழக்கத்தின் அடிப்படையில் ஏற்பட்ட நம்பிக்கைகள் பலவற்றை பக்தி இலக்கியம் பதிவு செய்துள்ளது. நம்பிக்கைகள் மனிதர்களின் வாழ்வில் பிரிக்க முடியாத அங்கங்களாகும். அவை சமூகத் தேவைகளின் அடிப்படையில் எழுகின்றன. இந் நம்பிக்கைகள் ஒரு சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியை, கலாச்சாரத்தைப் புலப்படுத்தும் சாளரங்களாகும்.

சமூகம் நலமாகச் செயல்படப் பழக்க வழக்க நிறுவனங்கள் உதவுகின்றன. பழக்கம் சமூகத்தை இயங்கச் செய்யும் சக்கரம் என்றும், சமூகப் பாதுகாப்புச் செயல் என்றும், மனிதனின் இரண்டாம் இயல்பு என்றும் சமூகவியலார் கூறுவர். பழக்கம் என்பது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தைச் செயலைக் குறிப்பதாகும். இது ஒரு கற்கும் செயலாகும். பழக்கத்தில் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். சமூகத்தை நடத்திச் செல்லும் சிறந்த நெறியாளனாக வழக்கம் திகழ்கின்றது. மனித சமூகத்தைக் கட்டுப்படுத்தும் மாபெரும் சக்தியாகத் திகழும் மதம் வழக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. மனிதனால் உருவாக்கப்பட்ட மதம் நாளடைவில் மனிதனை ஆளும் கருத்துப் பொருளானது.

மனித மனத்தில் கடவுள் (God) என்ற தொல்படிவம் (Archetype) காலங்காலமாகக் கிடந்து வந்துள்ளது. இம் மூலப் படிவம் ஐரோப்பாவில் சிலுவையாகவும் இந்தியாவில் சிவலிங்கமாகவும், சங்கு - சக்கரமாகவும் வெளிப்படுத்தப் படுகிறது. யூங் (Cari Gustur Jung) தனது மூலப்படிவக் கருத்தை நிறுவ இந்தியப் புராணங்களையும் தேவதைக் கதைகளையும் சான்றாகக் காட்டுகிறார். அவர் விளக்கிய மூலப்படிவங்களுள் கடவுள் மூலப்படிவமும் ஒன்று.

முற்பிறப்பில் ஒருவன் செய்யும் வினையின் பயன் அடுத்த பிறப்பிலும் அவனைத் தொடருமென்ற கொள்கை நல்வினைக்குத் தூண்டுகோலாகவும் தீவினைக்குத் தடைக் கல்லாகவும் விளங்குமென்று கருதப்பட்டது.

காக்கை பற்றிய நம்பிக்கை, பாம்பு வழிபாடு, ஆந்தை கத்துதல் போன்றவை இறைநம்பிக்கையினை அடிபொற்றி

எழுந்த பிற நம்பிக்கைகளாகும். கால ஓட்டத்தில் பழக்க வழக்கத்தின் வழியாகப் பிறந்த இந்நம்பிக்கைகள் சமூகத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. நன்மை அல்லது தீமை வருவதை இறைவன் முன் அறிவிக்கும் ஒரு இடைநிலை உறுப்பாகக் காக்கைச் சித்தரிக்கப்படுகிறது. காக்கையின் சொல் மிகவும் ஆற்றல் உடையது என்பதைக் காக்கை நம்பிக்கைமீது சமூகம் கொண்டிருந்த பலமான பிடிப்பு காட்டுகிறது. காக்கை கரைந்தால் விருந்து வரும் என்ற தமிழர்களின் மனவிழைவு இந்நம்பிக்கையைத் தெளிவுறுத்தும்.

பக்தி இலக்கியத்தில் தொல்படிவங்கள் :

தொன்மவியல் திறனாய்வு பக்தி இலக்கியங்களை ஆராய்வதற்கு தலைசிறந்த கருவியாகும். பக்தி இலக்கியங்கள் யாவும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய பழங்காப்பியங்களின் அழுத்தமான தாக்கத்துக்குட்பட்டவை. தமிழ் மொழியில் உள்ள பக்தி இலக்கியங்கள் யாவற்றிலும் புராணங்களின் செல்வாக்கைக் காணலாம். நாயன்மார், ஆழ்வார் கவிதைகள் தொன்மங்களைப் பலவாறு பயன்படுத்தியுள்ளன. சிவனின் திருவிளையாடல்கள், திருமாலின் அவதாரங்கள் பற்றிய கதைகள் பக்திக் கவிதைகளுக்கு உரமாயிற்று. அப் பழங்கதைகள் பக்திக் கவிஞர்களுக்கு உத்திகளாகவும் உதவின. சம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோர் பதிகங்கள், மற்றும் மங்கையாழ்வார் பாசுரங்கள் ஆகியவற்றில் பழங்கதைகள் பெருவாரியாகப் பயின்று வருவதைக் காணலாம். கண்ணப்பர் போன்ற சில நாயன்மார்களின் மூலப்படிவங்களாக (Archetypes) ஆண்மையைப் பக்தி இலக்கியம் காட்டுகிறது.

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என் அப்பன் என்னொப்பில் என்னையும்
ஆட்கொண்டருளி
வண்ணப்பணித்து என்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்பர் மணிவாசகர்.

(தொடரும்)

தமிழ் மொழி இலக்கியமும் இலக்கியத் திறன் ஆய்வும்

திரு. தி. சு. திருமலைவேலு,
ஆங்கில விரிவுரையாளர் (தே. நி.)
அரசு கலைக்கல்லூரி, கரூர் - 5.

1. தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தில் திறனாய்வு நூல்களாக இன்று வெளிவந்துள்ளவை அனைத்தும் மேல் நாட்டுத்திறன் ஆய்வு எண்ணங்களைத் தமிழில் தந்து, அவற்றிற்குத் தமிழ் நூல்களில் சான்றுகள் காட்டுவனவாகவே உள்ளன; பன்னெடும் காலமாக உலக மொழிகள் அனைத்திலும் காணாத சமூக இலக்கிய மரபுகளைப் பெற்றதும், பல ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர் நிலைப் பரிணாம வளர்ச்சியை (Continous Evolution)ப் பெற்றதும், சமஸ்கிருதம் போன்ற மொழியால் பீடிக்கப்படாததும், அயல் நாட்டார், "உயர் தனிச் செம்மொழி" என்று போற்றும் நிலையில் மாற்ற மற்றதும் ஆன தமிழ் மொழியில், அதற்கெனத் திறனாய்வுக் கலை என்ற ஒன்று இல்லாமலா இருக்கும் என்று வினா எழுப்பும் தமிழ்ச் சான்றோரும் இருந்து வந்துள்ளது; ஆய்வு தேவை என்று வாதிடும் தமிழ் அறிஞரும் இன்று நம்மிடையே உள்ளனர்.[1] இரு சாராரின் வினாவும் விடையும், இப் பொருளில் நமக்குள்ள ஆய்வு ஆர்வத்தை உசுப்பி விட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

2. இருவர் கூற்றின் அடிப்படையிலும் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தை ஆய்வு செய்ததில் மேலோட்டமாகச் சில உண்மைகள் தெரிந்தன. அவை தமிழ் இலக்கியத்திற்குத் திறனாய்வுக் கலை புதியதல்ல என்பதும், சங்க காலத்திற்கு முன்பிருந்தே படைப்பிலக்கிய வடிவமாக (Literary Form) திறன் ஆய்வு இருந்து வந்துள்ளது என்பதும் ஆகும். அதுவும், தனது வளர்ச்சியில் தேக்க நிலை என்ற ஒன்று இல்லாமல் தொடர் நிலை வளர்ச்சியாகவே (Continuous Growth) இன்று வரை வளர்ந்து வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதே.

3. பொதுவாக மேலை இலக்கியத் திறனாய்வுக் கலை என்பது கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க இலத்தீன்

மொழிப் புலவர்கள் யாத்த படைப்பிலக்கியங்களில் கண்ட இலக்கிய உத்திகளும் (Literary Techniques) மற்றும் பிளாட்டோ (Plato), அரிஸ்டாட்டில் (Aristotle) போன்றோர் நிகழ்த்திய அரசியல் சார்ந்த இலக்கியச் சர்ச்சைகளும் இணைந்து கி. பி. 15, 16ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய இலக்கியங்களில் ஏற்படுத்திய தாக்கங்களே (Influence) ஆகும். அத் தாக்கங்கள் ஐரோப்பியப் படைப்பிலக்கியங்களில் உருவாக்கிய இலக்கியக் கொள்கைகளும் (Theory of Literature) அவ்விலக்கியக் கொள்கைகள் கலைஞர்களால் விரிவாகவும், விளக்கமாகவும் ஆய்வு செய்யப்பட்டும், குறைவு நிறைவுகள் மற்றும் காலத்திற்குப் பொருந்துபவை, பொருந்தாதவை எனத் தெளிவாகச் சிந்திக்கப்பட்டும் உருவான இலக்கிய வடிவமே (Literary Form) இலக்கியத் திறனாய்வு ஆகும். இத்தகு இலக்கியத் திறனாய்வுக் கலை கி. பி. 17, 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலக் கல்வி மூலம் ஆங்கிலேயர் குடியேற்ற நாடுகளில் பரவி, அந்நாட்டு இலக்கியங்களில் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியது.

4. ஆனால், தமிழ் இலக்கியம் என்பது சங்க காலத்திற்கு முன்பே மொழி, இலக்கண, இலக்கிய மரபு மற்றும் பொருள் மரபு என்ற சீரிய மரபு அடிப்படைகளையும், ஏனைய பல சிறப்புப் பண்புகளையும்[2] பெற்று, செம்மையுற்ற மொழியாக வளர்ந்து வந்துள்ளது என்பதனை கி. மு. 8ஆம் நூற்றாண்டிற்கு முன் எழுதப்பட்ட தமிழ் மொழி—இலக்கண இலக்கிய—சமூக இயல் (A Treatise on Tamil Grammar, Language, Literature and Society) நூலான, "தொல்காப்பியம்" மூலம் அறிகிறோம். இத்தகைய ஒரு மொழி, இலக்கிய சமூக மரபு நூல் வளர்ந்துள்ள உலக மொழிகள் எவற்றிலும் இருந்து வந்துள்ளதா என்பதனை ஆய்வின் மூலமே தான் நிறுவ முடியும்.

5. சங்ககாலம் தொட்டு இன்று வரை தமிழ் மொழியில் இலக்கியம் அல்லது இலக்கணம் சார்ந்த நூல்கள் படைக்கப்படுவதும், அவை வெளியிடப்படுவதும் சாதாரண நிகழ்வாக அமைந்ததில்லை. அரங்கேற்றம், பட்டிமண்டபம், சங்கக் குழுக்கள், அரசவை, இலக்கிய வட்டம் போன்ற இலக்கிய மேடைகளில் நூல்களின் குறைவு நிறைவுகள் கடுமையாக விவாதிக்கப்பட்டும், சமயச் சான்றோரின் அனல்வாதம், புனல் வாதம் இவைகளில் வென்ற பின்னருமே அவை வெளிவந்தன. காரணம், சங்ககாலம் தொட்டு

இன்று வரை தமிழில் படைப்பிலக்கியங்கள் தக்க காரணமின்றி மரபை மீறாமலும், காரணத்துடன் அவை மரபை மீறும்போது அவற்றை புது இலக்கிய வகையாக (New Literary Genres) அங்கீகரித்தும் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் தனித்தன்மைகளைத் தமிழ்ப் புலவர்கள் காலம் காலமாகக் காத்து வந்துள்ளனர்; கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு கந்தபுராண அரங்கேற்றத்தின்போது வீர சோழியம் கை கொடுத்தமையும்; தமிழனின் கூத்துக் கலை பின்னாளில் பள்ளு, குறவஞ்சி, நாடகங்களாக மலர்ந்ததும், நக்கீரன் தருமியின் பாடலுக்கு எதிராக நடத்திய சொற்போரும், ஒட்டக்கூத்தன் கம்பரிடம் வாதிட்டமையும், அரசவையில் புலவர்களும், புரவலர்களும் நிகழ்த்திய வாதப் பிரதிவாதங்களும் தொகுக்கப்பட்டிருப்பின், அவை சுவையான ஆனால் தலைசிறந்த திறனாய்வு நெறிகளாக தொல்காப்பியம் போன்று இன்று நமக்குக் கிடைத்திருக்கும், எனினும் கி. பி. 19ஆம் நூற்றாண்டில் வீராச்சாமிச் செட்டியாரால் எழுதப்பட்ட விநோதரச மஞ்சரியும்; மு. ரா. அருணாசலக்கவியின் சிந்தாமணி நூலும் சைமன் காசிச் செட்டியின் தமிழ்ப்புலவர் வரலாறும் இப்பணியை ஓரளவு நிறைவு செய்துள்ளன.

6. சிலர் தொல்காப்பியம் கூறும் "பொருள்" இலக்கணம் திறனாய்வுக் கலையின் மேலை இலக்கிய (ஆங்கிலச்) சொல்லான Criticism என்ற சொல்லுக்கு இணையானது என்றும்; தமிழ் உரை ஆசிரியர்களின் கோட்பாடான நூலின் தரத்தையும் நயத்தையும் விளக்குவதே திறனாய்வு என்று கூறியும் வாதிடுகின்றனர்.[3] "உரையை"த் தமிழ் சான்றோர்கள் Commentary என்றும், உரை ஆசிரியர்களை Commentators என்றும் அழைப்பதால் Commentary அல்லது விமர்சனம், திறனாய்வு ஆகுமா? என்ற வினாவும் இன்று நம்மிடையே எழுந்துள்ளது. மறைந்த க. நா. சுப்பிரமணியன் கூட திறனாய்வை விமர்சனக் கலை என்ற அளவிலேயே ஆய்வு செய்துள்ளார்.

7. தொல்காப்பியத்தில் "பொருள்", தமிழ்ச் சமூகம் மற்றும் இலக்கியத்தில், சங்க காலத்திற்கு முன்பிருந்தே வழக்கிலிருந்த மரபுகளை ஐயமற்ற நிலையில் காரண காரியத்தோடு தெளிவாகத் தொகுத்துரைப்பதால், அதனைத் திறன் ஆய்வு அல்லது திறன் ஆய்வு நெறி என்று கொள்ள இயலாது. விமர்சனம் என்பது ஒரு படைப்பிலக்

கியத்தைப் பற்றிய மேலோட்டமான சிந்தனை சிதறல்களாகவே இருக்க முடியுமே அன்றி, அதனை விரித்தலும் (Analysis) விவரித்துரைத்தலும் (Interpretation) ஆக ஏற்றுக் கொள்ள இயலாது. எனவே தொல்காப்பியத்தின் "பொருளும்", இன்றைய "விமர்சனமும்", திறன் ஆய்வு ஆக முடியாது என்பது தெளிவாகிறது.

8. தமிழ் மொழியில் "உரை" என்ற சொல்லுக்கு விளக்கம் என்று பொருள் கொண்டால், உரை ஆய்வின் சாயலைப் பெறும்; ஏனெனில் ஆய்வு என்பது எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றிய காரண காரிய விளக்கமே ஆகும். தொல்காப்பியரும் ஆய்வை, "உள்ளதன் நுணுக்கம்" என்கிறார்.[4] அதாவது நுணுக்கம் என்ற சொல் வள்ளுவரின் "பயனில் சொல் பாராட்டாமையும்"; "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற இரு நிலைகளைச் சுட்டுவதாகும். மேலும், "உரைத்தல்" என்பதன் பொருளாக "தரத்தையும் நயத்தையும் அளவோடு அறிதல்" என்று கொண்டால், உரையும் ஒருவகையில் ஆய்வினையே சுட்டும் என்பது தெளிவாகத் தெரியும். இவ் விளக்கங்களின் அடிப்படையில், ஒரு நூலின் தரமும் நயமும் நுணுக்கமாக உரைக்கப்பட்டால் அல்லது ஆய்வு செய்யப் பட்டால், அது அந்நூலின் படைப்பிலக்கியத் திறனை நிச்சயமாக வெளிக் கொண்டுவரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே, இவ்விளக்கங்களில் நோக்கில் சிந்தித்தால், தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தில் காணும் "உரை" கலை அல்லது "உரை" திறன் தான் மேலை இலக்கியத்தின் இலக்கிய வடிவமான "திறனாய்வு" (Critism) என்பது தெளிவாகும்.

9. நன்னூல் யாத்த பவணந்தி முனிவரும், உரையை காண்டிகை உரை, விருத்தி உரை என 14 வகைகளாகப் பிரிந்து, உரை என்பது நூலின் இன்றியமையாதனவற்றை பிறருக்கு விளக்கும்படியாகவும், விளங்கும்படியாகவும், தன்னுரையானும் (சொந்தக் கருத்தாலும்) பிற நூலானும் (நூல் மேற்கோள்களாலும்) உண்மைப் பொருளை (மெய்ப் பொருள்) விளக்குதல் என்று கூறுவதால், மேற்கூறிய முடிவை இக்கூற்று ஓரளவு உறுதி செய்வதாகவும் உள்ளது.[5] உரை ஆசிரியர்கள், ஒரு படைப்பிலக்கியத்திற்கு தொல்காப்பியர் கூறும் தவிர்க்க வேண்டியதான 10 குற்றங்களையும் ஏற்க வேண்டியதான 32 இலக்கிய உத்திகளையும், அவர்களது

"உரை" என்ற இலக்கிய ஆய்வுக்கு அளவு கோலாகப் பயன்படுத்தி இருக்கலாம் என்றும், நம்மை இங்கே எண்ணத் தூண்டுகிறது.

10. கி. பி. 15, 16ஆம் நூற்றாண்டுகளில் பிரான்ஸ் மொழி (French Language) இலக்கிய வல்லுநர்கள், பாடல் படைப்பிலக்கியத்திற்கு விவரித்துரைத்த (Interpretation) விளக்கங்களும், 17ஆம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கிய விற்பன்னர்கள் சேக்ஸ்பியர் நாடகங்கள் மற்றும் பாடல்களை பதிப்பித்து வெளியிட்ட நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளும், பிழையகலக் கூறிய மேம்பாடு விளக்கங்களும் (Emendations) தமிழிலக்கிய உரை வகையின் அடிச் சுவட்டிலேயே அமைந்துள்ளதைக் காணலாம். இத்தகைய ஆங்கில பிரான்ஸ் மரபுகள் இலக்கியத் திறனாய்வுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டால், அதைவிட மேம்பட்ட தமிழ் "உரை இலக்கியம்" இலக்கியத் திறனாய்வுதான் என்பதில் எந்த மாற்றமும் இருக்க முடியாது.

11. சிலர், தமிழ் இலக்கண இலக்கிய உரை ஆசிரியர்கள் சொந்தக் கருத்துக்களுக்கோ, புதுக் கருத்துக்களுக்கோ இடமளிக்கவில்லை என்றும், மிகைப்படுத்தி எழுதுவதைத் தவிர்த்தனர் என்றும், தமிழின் பண்பாட்டை விளக்கவும் பேணவும், தங்கள் சிந்தனைகளைப் படைப்பிலக்கியங்கள் மூலம் தெளிவாக்கிக் கொள்ளவுமே உரை எழுதினார்கள் என்றும் கூறுகின்றனர்.[6] இதுவும் உண்மையே. எவ்வாறெனில் உரை எழுதுவதற்கான உத்திகள் தமிழ் இலக்கிய மரபில் தெளிவாக விளக்கப்பட்டிருந்ததாலும், உரையாளர், தான் உரை வழங்கும் நூலின் படைப்புப் பொருளில் ஆழ்ந்த புலமையைப் பெற்றிருந்ததாலும், அப் புலமையை உரை விளக்கத்தின் மூலம் கூர் ஆக்கிக் கொள்ளுதல் (Whetting) போன்ற அணுகுமுறைகளோடு உரை எழுத முற்பட்டதாலும், மரபு மீறி அடிப்படைப்பிலக்கியத்தில் குறை காண முயன்றதில்லை. அல்லது தங்கள் அறிவினத்தை உரை என்ற பெயரில் வெளிக்காட்ட முயன்றதில்லை என்பது தெளிவு. குறை காணுதல் தான் மேலை இலக்கியத் திறனாய்வு நெறி என்று சிலர் ஊகித்துக் கொள்வதால் வரும் மருட்சி நிலையே இது. புகழ் பெற்ற ஆங்கில இலக்கியப் படைப்பாளர்—திறனாய்வாளரான டி. எஸ். இலியட் (T. S. Ellot) கூட குறை காணலைத் திறன் ஆய்வு என்று கூறவில்லை.

12. உரை கூறப்படும் படைப்பிலக்கியம் இத்தகைய திறனைப் பெற்றுள்ளது. மேலும் இவற்றைப் பெற்றிருக்கலாம்; இவற்றைத் தவிர்த்திருக்கலாம் என்பது தான் உரை விளக்கமே (திறனாய்வு) யன்றி, இப்படித்தான் இருக்க வேண்டும் என்று மரபு நெறிமுறைகளை ஒதுக்கி வைத்து விட்டு, சொந்தக் கருத்துக்களை வலியுறுத்திக் கூறுவதும், படைப்பிலக்கியம், உரையாளர் சிந்தனை ஓட்டத்தில் உருவாக்கிய கருத்துத் தாக்கங்களை படைப்பிலக்கியத்தின் தவறுகளாகக் கருதிக் கூறுவதும் திறனாய்வு நெறி ஆகாது என்பதும் வெளிப்படை.

13. தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தில் உரை நடை என்பது உரை நூல்களில் வளர்ச்சியே என்பதனை அறியாத சிலர் தமிழ் உரை நடை செப்பேடுகள், கல்வெட்டுக்கள், அயல் நாட்டார் குறிப்பு, பேச்சு வழக்கு இவற்றிலேயே காணப்பட்டது என்றும், கி. பி. 16, 17ஆம் நூற்றாண்டுகளில் மேலை இலக்கியங்களில் உரை நடை வளர்ந்தது போன்று தமிழ் மொழியில் வளரவில்லை என்றும், அவ்வுரை நடையே கி. பி, 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழியில் திறனாய்வு, புதினம் மற்றும் சிறுகதை போன்ற மறுமலர்ச்சி உரை இலக்கிய வகைகளை (Renaissance Prose Literary Genres)ஐத் தோற்றுவிக்க வழி கோலியது என்றும் கூறுகின்றனர்.[7] இதுவும் சர்ச்சைக்கு உரியதே. ஏனெனில், உரை இலக்கியம் மற்றும் உரை நடை இலக்கியம் தமிழ் மொழிக்குப் புதியதில்லை. "உரை இலக்கியத்தை" எழு வகை இலக்கிய வடிவங்களில் ஒன்றாகத் தொல்காப்பியம் கூறுகிறது.[8] கி. பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் "செய்தித்தாள்களும்" "இலக்கிய இதழ்களும்", அச்சு இயந்திரங்கள் மூலம் வேகமாகப் பரவி, உரைநடை இலக்கியங்களுக்கு உத்வேகம் கொடுத்தன. கி. பி. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் மின் அணுவியல் "செய்தித்தாள்கள் இதழ்கள் பரவலை மேலும் துரிதப்படுத்தி உரை நடை இலக்கியத்தை உலக அளவில் பரப்பிவிட்டது. தமிழ்மொழி இலக்கியமும் இந்த ஊடகங்களைத் தனது இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டது. இதில் எந்த அளவு புதுமையை அல்லது மறுமலர்ச்சியை தமிழ் மொழி பெற்றுவிட்டது என்பது புதிராகவே உள்ளது!

14. உரை தவிர, பாயிரம், பதிகம், தொகை நூல் இவையும் திறனாய்வே என்று கூறுவாரும் உள்ளனர்.[9] சங்க

காலம் தொட்டு இன்றுவரை இவை அடிவரையறை, பாடுபொருள், யாப்பமைதி, திணை, துறை போன்ற கோட்பாடுகளைக் கொண்டே உருவாக்கப்பட்டிருந்தலால், இக்கூற்றும் சரியே. எனினும் கி. மு. 500க்கு முன்பே சங்க இலக்கியங்களான முத்தமிழ் நூல்களுக்காக எழுதப்பட்ட ஆய்வுகளைக் கூறும், ''இறையனார் களவியல்'' உரையே, தமிழில் தோன்றிய முதல் திறனாய்வு நூலாகும். ''உயர்மதில் கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்'' என்ற மணிவாசகர் கூற்றும், ''திருந்திய நூற் சங்கத்துள் அங்கிருந்து தமிழ் ஆராய்ந்தருளிய அங்கணர்'' என்ற சேக்கிழார் பெருமான் கூற்றும் இதனை மெய்ப்பிக்கின்றன. இறையனார் களவியல் உரைக்குக் கடைச்சங்ககால (கி. பி. 150க்கு முன்) நக்கீரர் பெருமான் எழுதிய, ''களவியல்'' உரையின் பொருள் நுண்மை, படைப்பிலக்கியங்களின் காரண காரிய நிலைகளைத் தெளிவாக உணர்த்துவதாக உள்ளது என்றால் அது மிகையாகாது.

15. கி. மு. 150 முதல் கி. பி. 7ஆம் நூற்றாண்டு வரையான காலம் சங்கம் மருவிய காலம் என்று அழைக்கப் பட்டாலும், ''சமய இலக்கியத்தாக்கமும்'' ''வடசொல்'' என்ற வேற்று மொழித்தாக்கமும் ஏற்படவே, தமிழ் இலக்கியப் படைப்புக்கள் அனைத்தும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற மூன்று வகைகளாகத் தொகுக்கப்பட்டு தொகைமை (Anthology) என்ற நவீன இலக்கியக் கோட்பாட்டிற்கு தமிழிலக்கிய மரபு முன்னோடியாக விளங்கியுள்ளது.

அடிக்குறிப்புக்கள்

1. பழந்தமிழரின் சில திறனாய்வு நெறிகள் (டாக்டர் க. மீனாட்சிசுந்தரம்) ப. 323; தமிழில் திறனாய்வுக் கலை (டாக்டர் க. கைலாசபதி) ப. 146, ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு - விழா மலர், மதுரை, 1981.

2. தமிழர் தொல் மரபு - கா. அப்பாத்துரை - ஷை விழா மலர், ப. 77.

3. ஷை குறிப்பு 2இல் கண்டவாறு.

4. ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சா ஆய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்
(தொல். பொருள். இளம் 330)

5. அபிதான சிந்தாமணி — ஆ. சிங்காரவேலு முதலியார் ப. 254.

6. அடிக்குறிப்பு 1இல் கண்டவாறு.

7. தமிழிலக்கிய வரலாறு (இலக்கியத் தோற்றம்) மு. கோவிந்தசாமி - அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு. ப. 120.

8. ''பாட்டு, உரை, நூல், பிசி, வாய்மொழி முதுமொழி, அங்கதம்'' (தொல். 1336, 1420).

9. தமிழிலக்கிய வரலாற்றில் திறனாய்வுச் சிந்தனை - ஆ.த. முத்தையா. 'தமிழிலக்கிய ஆய்வுக் கோவை - தமிழ்ப் பல்கலைக் கழகம் - 1988. தொகுதி - 2.

(தொடரும்)

களப்பாளன்:— (1) இவர் ஆமூரில் ஆமூர் முதலி எனப் பெயர் பெற்று வாழ்ந்தவர். இவர் காலத்தில் இவரைக் காளமேகப் புலவர்.

''உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருங்காடி,
வெள்ளங்கா லந்திரிந்து விட்டோமே—உள்ளபடி
ஆமூர் முதலி அமரர்கோ னிங்கிருக்கப்
போமூர் அறியாமற் போய்''

என்னும் வெண்பாப் பாடி முடிப்பதன் முன் பரிசளித்தவர்.

(2) நெற்குன்றூர் வேளாண் குலத்துதித்தவர். இவர் செல்வத்தாலும் கல்வியாலும் மேம்பட்டவர். திருப்புகலூர் அந்தாதி பாடியவர். இவருக்கு நெற்குன்றைவாணர் எனவும் பெயர்.

(அபிதான சிந்தாமணி)

தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையும் கோவா கடலாய்வு நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரை. நாள் 14, 15—2—92

சங்ககாலத் துறைமுக நகரங்களும் பெயர்களும்

பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)

சங்க நூல்களில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தலைநகரங்களின் பெயர்களும் தொண்டை நாட்டை ஆண்ட இளந்திரையனின் தலைநகரின் பெயரும் கூறப்பட்டுள்ளன. மேலும் இந்த மன்னர்களின் துறைமுகங்களும் கூறப் பட்டுள்ளன,

சங்ககால மும்மன்னர்களின் தலைநகரங்களில் பாண்டியர் தலைநகரே மிகவும் தொன்மையானதாகும். இந்த நகரம் இடைச் சங்ககாலத்துக் குரியதாகவும், தமிழகத்தின் தென்கிழக்குக் கடற்கரையில் இருந்ததாகவும் கருதப்படுகிறது. இதுவே பாண்டியரின் துறைமுகமாகவும் இருந்தது. இதை வால்மீகி இராமாயணம் பாண்டிய கவாடம் என்று அழைத்துள்ளது.

இறையனார் களவியலுரைப் பாயிரத்தில், இடைச் சங்கத்தார் தமிழ் ஆராய்ந்தது கபாடபுரத்தில் என்றும், சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையில், கபாடபுரத்தில் இடைச்சங்கம் இருந்ததென்றும் கூறப்பட்டுள்ளது. ''கவாடம்'' என்ற வடமொழிப்பெயர் 'அலைவாய்' என்ற தமிழ்ப் பெயரின் மொழி பெயர்ப்பாகும்.

வாய் என்ற சொல் வாயில் என்ற பொருளில் கதவைக் குறிப்பதாகக் கொண்டு கபாடம் என்று வடமொழியில் மொழி பெயர்த்தனர். இன்றும் புதுவை மாநிலத்தில் மீனவர்கள் படகுகளை 'அலைவாய்க்' கரைக்குக் கொண்டு வருவதாகக் கூறுவர். இராமநாதபுரத்தருகில் கடற்கரை மீனவர்களிடையே 'அலைவாய்க்கரை' என்ற சொல் வழக்கு பயிலுகின்றது. ஆதலின் அலைவாய் என்ற சொல்வழக்கு பொதுச்சொல்லாக, கடல் அலைகளால் அலைக் கழிக்கப் படும் கடற்கரைப் பகுதியைக் குறித்தது தெரிகின்றது. அவ்வாறான கடற்கரைப் பகுதிகளில் துறைமுகமாக அமைய

ஏற்புடைய ஒரு பகுதியை அலைவாய்ப் பகுதியைச் சிறப்பாக அலைவாய் என்றழைத்தனர். அது பண்டைக் காலத்தில் பாண்டியரின் தலைநகராகவும் துறைமுகமாகவும் அமைந்தது.

கடைச்சங்க காலத்தில் பாண்டியரின் துறைமுகம் கொற்கையில் இருந்தது. அண்மைக் காலத்தில் கொற்கையில் அகழ்வாராய்ச்சி செய்தபோது இந்தத் துறைமுகம் கி. மு. 785ஆம் ஆண்டுக்குரியது என்பது 'கார்பன்-14' தேர்வின்படி அறிவியுற்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வால்மீகி இராமாயணத்தின் கரு, கி. மு. 6ஆம் நூற்றாண்டுக்குரியதாகவும் இப்போதுள்ள அதன் கரு கி. மு. மூன்று, நான்காம் நூற்றாண்டுக்குரியதாகவும், பாரதீய வித்யா பவன் வெளியிட்ட 'இந்திய மக்களின் வரலாறும், பண்பாடும்' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

அகழ்வாராய்ச்சியில் கொற்கை கி. மு. எட்டாம் நூற்றாண்டுக்குரியதாகக் கூறுவதால் வால்மீகி இராமாயணத்தில் கூறப்பட்ட பாண்டியரின் தலைநகரமானக் கபாடபுரம் அதற்கு மூந்திய அலைவாயை நினைவில் வைத்து எழுதியதாகத் தெரிகின்றது. இடைச் சங்கம் இருந்ததோ இல்லையோ? அச்சங்கம் இருந்திருந்தால் அப்போது பாண்டியரின் தலைநகரம் அலைவாய் என்ற பெயரில் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

ஆனால் அலைவாய் என்ற பெயர் சங்க காலத்தில் வேறு சில துறைமுகங்களுக்கும் இருந்திருக்கலாம் என்பது இப்போதுள்ள திருச்செந்தூரை 'அலைவாய்' என்றே அகநானூறு 266ஆம் பாட்டில் அழைக்கப்பட்டதிலிருந்து தெரிகின்றது. பண்டைப் பாண்டியரின் தலைநகரமான அலைவாய் கடற்கோளால் அழிந்த பிறகு, கடைச் சங்க காலப் பாண்டியரின் தலைநகர் உள் நாட்டில் இருந்த மதுரைக்கு மாற்றப்பட்டது. அப்போது அலைவாய் என்றழைக்கப்பட்ட திருச்செந்தூரைப் பண்டைய அலைவாயில் இருந்து பிரித்துக் காட்டவே, திருமுருகாற்றுப்படை உரையில் 'நாமனூர் அலைவாய்' என்றும், 'திருச்சீரலைவாய்' என்றும் அழைக்கப்பட்டது.

அச்சத்தைத்தரும் முருகன் சில சங்கப்பாடல்களில் கூறப் பட்டுள்ளார். அதனால் நாமம், அதாவது, அச்சம் தரும்

முருகன் பெயரால் அமைந்த அலைவாய் ஊர் 'நாமனூர் அலைவாய்' ஆயிற்று.

திருச்செந்தூரும் ஒரு துறைமுகமாக இருந்தது. அகப் பாடல் 266இல் 'திருமனி விளக்கின் அலைவாய்' என்றதால், கலங்கரை விளக்கத்தில் இருந்து ஒளி வீசிய திருமனி கூறப் பட்டுள்ளது. 'திக்கற்ற செட்டியார்க்குச் செந்தூரானே துணை' என்று தமிழிலும் மலையாளத்திலும், கடலில் கப்பல் வணிகம் செய்த செட்டியார்களைக் காப்பாற்றிய முருகன் பற்றி வழங்கும் பழமொழியும் இதை வலியுறுத்தும்.

கேரளத்தில் ஆலப்புழை என்றழைக்கப்படும் துறைமுக ஊரும் அலைவாய் என்பதாகும்.

பாண்டியரின் பண்டைத் தலைநகரம் அலைவாய் அழிந்ததும் உள்நாட்டுத் தலைநகராய் அமைந்த மதுரைக்கு முதலில் அலைவாய் என்றே பெயரிட்டு இருந்தனர் என்பது தெரிகின்றது. ஆனால் பிற்காலப் புராணக்காரர் அலைவாயை 'ஆலவாய்' ஆக்கி ஆலத்து அதாவது நஞ்சை வாயில் உடைய பாம்பு ஊர்ந்து, வளைத்து, எல்லை வகுத்த ஊரே ஆலவாய் என்று கூறிப் புராணக்கதை படைத்தனர்.

தேவாரத்தில் தான் முதலில் ஆலவாய் என்ற பெயர் வருகின்றது. இந்தக்கதை மிகப் பிற்காலத் திருவிளையாடல் புராணத்தில்தான் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதில் வியப்புக்குரியது என்னவென்றால் சங்ககாலப் புலவர் பெயராகப் பேராலவாயர் என்றும், அவர் நற். 51ஆம் பாடலைப் பாடியதாகவும் கூறப்பட்டுள்ளதுதான்.

மற்றும் மதுரைப் பேராலவாயார் என்ற புலவர் நற்றிணை 361, அகம் 87, 296 ஆம் பாடல்களைப் பாடிய தாகவும் கூறப்பட்டுள்ளார்.

ஆலவாய் என்ற பெயர் சங்க காலத்தில் இருந்திருக்க முடியாது. அது அலைவாய் என்றே இருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் ஏடு பெயர்த்தெழுதியோர் தெளிவின் கல்வி யின்மையால் அலைவாய் என்ற பெயரை, ஆலவாய்—என்று கொண்டு புலவர் பெயரை மாற்றியுள்ளனர். இதுபோல வேறு சில சங்கப் புலவர் பெயர்களும் புராண மனப்பான்மை

யால் பிற்காலத்தில் தவறுதலாக எழுதப்பட்டுள்ளதைக் காணலாம்.

மதுரை என்ற பெயருக்குப் புராணக்கதை உள்ளது. இதுபற்றி விளக்க வேண்டுமானால் தனிக்கட்டுரை வேண்டி யிருக்கும். கடைச் சங்க காலத்தில் கொற்கை நகர் பாண்டியரின் துறைமுகமாக இருந்தது. இதை 'கோல்ச்சிஸ்' (Colchis) என்று பெரிப்புளூஸ் என்ற நூலிலும் தாலமி எழுதிய நூலிலும் கி. பி. முதல், இரண்டு நூற்றாண்டுகளில் குறிக்கப் பட்டுள்ளது.

கடைச் சங்க காலப் பாண்டியரின் உள்நாட்டுத் தலைநகரமான மதுரைக்குத் துறைமுகமாகக் கொற்கை இருந்தது. அது தாமிரபரணி ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்தது. அது அழிந்தது எப்போது என்று உறுதியாகக் கூற முடியாது. ஆனால், அசோகப் பேரரசனுடைய கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்குரிய தூண் கல்வெட்டு களில், தனது பேரரசுக்கு உட்படாத தென்னிந்திய அரசு களாகச் சேர, சோழ, பாண்டிய, சத்ய புத்ர அரசுகளையும், தம்பப்பண்ணி என்ற அரசையும் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

சத்யபுத்திரன் அதிகமான் பரம்பரை என்பது அண்மை யில் ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தம்பப்பண்ணி இலங்கைத் தீவான ஈழநாடு என்பதும் தெளிவாகின்றது. தம்பப்பண்ணி என்ற பெயர் தண்பொருநை என்ற ஆற்றின் தூய தமிழ்ப் பெயரின் மரூஉவாகும். வட மொழியில் தாமிரபரணி என்று வழங்கப்பட்டுப் பிராகிரு தத்தில் தம்பப்பண்ணி என்று வழங்கப்பட்டது. தாமிரத் திற்கும் (செம்பு) இந்த ஆற்றிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அசோகப் பேரரசின் கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் காலத்தில் தாமிரபரணியின் துறைமுகமான கொற்கையிலிருந்து இலங்கைக்கு அசோக மன்னரின் பிள்ளைகள் பௌத்த தர்மத்தைப் போதிக்கச் சென்றிருக்க வேண்டும். அதன் காரணமாக மௌரியர் இலங்கையின் பெயரைக் குழப்பியிருக்கின்றனர். அதனால் இலங்கையில்

இல்லாத தண்பொருநைப் பெயரை இலங்கைத் தீவின் பெயராகக் கொண்டு குழப்பினர் என்று தெரிகின்றது.

ஆதலின் கி. மு. மூன்றாம் நூற்றாண்டுவரை கொற்கை இருந்திருக்கலாம். பின்னரே அதுவும் கடல் மணல் படிந்ததால் மேடிட்டு அழிந்தது.

பாண்டியரின் துறைமுகமான கொற்கை என்ற பெயர் கொல் என்ற வேர்ச் சொல்லின் அடிப்படையாகத் தோன்றிய தென்று கால்டுவெல் கூறியுள்ளார். கடற்கரை அலைகள் கொல்வதால் அதாவது அழிப்பதால் கொல்கை என்று வழங்கி கொற்கை என்று ஆனதாகக் கூறியுள்ளார்.

இடைக் காலத்தில் சேரர்களின் தலைநகரமான இப்போதைய கொல்லமும் அதே காரணத்தால் பெயர் பெற்றதாகக் கூறுவர். 'மரங்கொல் தச்சன்' என்று வரும் சங்கப் பாடல் வழக்கில் 'கொல்' என்ற சொல்லின் பொருள் கொற்கையென்ற பெயரில் இருப்பதாகக் கருதுவது பொருத்த மாகவே தோன்றுகிறது.

ஆனால், ஒரே ஒரு அகநானூற்றுப் பாடலில் (153) 'தேம்பாய்ந்து ஆர்க்கும் தெரியிணர்க் கொற்கின்' என்ற வரி வருகிறது; இங்கு கொற்கு என்பது கொன்றை மரத்தைக் குறித்தது. கொன்றை என்ற பெயர் கொற்கு என்று மாறுவது இயற்கையே. ஆனால் கொற்கு என்ற பெயர் கழக அகநானூற்றுப் பதிப்பில் காணப்படவில்லை; ஆனால் இதற்கு முன்னர் ராஜகோபாலய்யர் பதிப்பித்த அகநானூற்று முதற் பதிப்பில் காணப்படுகிறது. இது சரியா என்பது உள்ள ஓலைச்சுவடிகளைத் திரும்பவும் ஆராய்ந்தால் உண்மை தெளிவாகும்.

கொற்கு என்பது சரியான பாடமானால், கொற்கையின் பெயரும் மரத்தின் பெயரால் வந்ததாகக் கொள்ளலாம். இது வஞ்சிகாஞ்சி என்ற தலைநகர் பெயர்கள் மரத்தின் பெயரால் அமைந்த மரபை ஒத்ததாகும்.

மதுரை என்ற பெயர் மருத மரத்தின் பெயரால் மருதை என்று வழங்கி Metathesis வழியாக மொழி மாற்றப்பட்டு மதுரை என்று மாறியது என்று நான் 1962ஆம் ஆண்டே ஒரு விழாவில் கூறியுள்ளேன். இது பற்றி விரிப்பின் பெருகும்.

பண்டைச் சேரருடைய துறைமுகமாக முசிறி சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. முசிறி என்ற பெயரின் காரணத்தை அண்மையில் ஒரு கேரள வரலாற்று ஆசிரியர் எழுதியதைப் படித்தபோது நான் அவருடைய நுண்மாண் நுழைபுலத்தை நினைத்து அயர்ந்தேன்.

பண்டை முசிறி இன்று கொடுங்களூர் என்று அழைக்கப் படுகின்றது. நன்கு தெரிந்ததே. இங்கு ஒரு பெரிய சயல் புற்று இன்றும் உள்ளது. இதை இக்காலத்தில் வசூரிமாதா என்று தொழுவர். தவிடு, மிளகு முதலியவற்றை அம்மை தரும் வசூரிமாதாவைச் சாந்தப்படுத்தப் படைக்கின்றனர்.

இந்த வசூரியே மசூரி என்று மாறி முசிறி என ஆனது என்று அவர் எழுதியுள்ளார்.

வசூரி என்ற வடமொழிப் பெயர் அம்மையைக் குறித்து வழங்குவது மிக பிற்காலத்தது என்பது தெரிந்ததே. கி. பி. முதற் நூற்றாண்டுக்குரிய சேரரின் துறைமுகப் பெயர் மிகப் பிற்கால வசூரியிலிருந்து வந்தது என்று கொண்டது எவ்வளவு பேதமை என்பது புரிந்து கொள்ளக் கூடியதே.

முசிறி என்ற பெயர் வந்த காரணம், சங்கப் பாடல் களிலேயே பொதிந்து உள்ளது; முயிறு என்ற ஒரு வகை எறும்பு, கூடுகட்டி வாழ்வதாக நற்றிணை 180, ஐங்குறுநூறு 99 ஆகியவைகளிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த எறும்பு பலாமரத்தின் இலைகளைத் தைத்துக் கூடு கட்டுகின்றது. இந்த எறும்பு Red weaver ant என்றும் Occophyuss smardigna என்றும் அறிவியலில் அழைக்கப்படும். இந்த எறும்புகள் இன்றும் கேரளக் கடற்கரையில் பலாமரத்தில் நிறையக் காணப்படுகின்றன.

இந்த எறும்பு சிறியதாயினும் கடித்தால் மிகுந்த வலியைத் தரும். இந்த எறும்புகள் மிகுந்து காணப்பட்ட கடற்கரைத் துறைமுகம் முயிறி என்றும் அதுவே மாறி முசிறி என்றும் அழைக்கப்பட்டது.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் யூதர்களுக்குச் சேர அரசன் கோசிரீபாஸ்கர ரவிவர்மன் திருவடி 'முயிரிக் கோட்டு இருந்தருளிய நாள் என்றும் (Epigraphica India iii,

P. 68) 'முயிறிக்கோட்டு அஞ்சு வண்ணம்' என்றும் முசிறி அழைக்கப்பட்டதைக் காணலாம்.

முயிறியே முசிறியின் தொன்மைப் பெயராகத் தெரிகிறது. முசிறியைக் கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் உரோம, கிரேக்க பயண நூல் ஆசிரியர்கள் மூசிறீஸ் (Mouziris என்றழைத்தனர் என்பது தெரிந்ததே.

இது வால்மீகி இராமாயணத்தில் 'முரசிபத்னா' என்றழைக்கப்பட்டது, பிற்காலத்தில் வராகமிகிரர் 'மரீசிபத்தனம்' என்று அழைத்துள்ளார்.

முசிறியிலிருந்து மிளகை மேலை நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்தது சங்க நூல்களிலும் மேலைநாட்டார் பயண நூல்களிலும் கூறப்பட்டுள்ளது தெரிந்ததே. இதன் காரணமாகவே வடமொழியாளர் மிளகை முசிறியின் பெயராலேயே 'காலாமிஸ்ரி' என்று கருப்பு மிளகை அழைத்தனர்.

பெரும்பாணாற்றுப் படையில், மிளகின் வணிகப் பெயராக 'மிரியல்' என்ற பெயர் கூறப்பட்டுள்ளது.

மிரியல் என்ற மிளகின் வணிகப் பெயர், முசிறி என்ற பெயரிலிருந்து வந்துள்ளது. தெலுங்கில் இன்றும் 'மிரியாலு' என்று மிளகை அழைப்பதுவும் அதேபோன்ற பெயர் சிங்களத்தில் வழங்குவதையும் காணலாம்.

சேரருடைய சிறந்த துறைமுகப்பட்டினமான முசிறியின் பெயராலேயே சேரன் தலைநகரான கொங்கு நாட்டுக் கரூர் அருகில் முசிறி என்று உள்நாட்டு ஊர் பெயர் வழங்கப்படுவதும் கருதத்தக்கது.

சங்க காலச் சோழருடைய தலைநகரமும், துறைமுகமும் காவிரிப்பூம்பட்டினம் ஆகும். இதற்குச் சங்க காலத்திலேயே புகார் என்ற பெயரிருந்தது. புகார் என்ற பெயரே முந்தியது என்று கருத இடம் உள்ளது. காடுகள் கரையில் விரிந்தமையால் ஆறு காவிரி என்றும், அது கடலில் கலக்கும் இடத்தில் தோன்றிய பட்டினம் என்றதால் காவிரிப்பூம் பட்டினம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப, மணிப் பூவாடையது போர்த்துக், கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி' என்று கவிச் சுவை சொட்டச்சொட்ட, நயத்துடன் பாடிய இளங்கோவடிகள் பாடல் வரி காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர்க் காரணத்தை நன்கு விளக்குவதாகும்.

இந்தப் பெயரை உச்சரிக்க முடியாத கிரேக்க, உரோமப் பயணிகள் 'காபேரிஸ்' என்றும் 'கமாரா' என்றும் சுருக்கிப் பெயரைச் சிதைத்தனர்.

ஆனால் அதைவிட எள்ளி நகையாடற்குரியவை, காவேரி முனிவனின் பெயரால், காவேரி என்றழைக்கப்பட்டது என்றும், அகத்திய முனிவனின் கமண்டலத்தைக் காகம் கவிழ்த்ததால் காவேரி தோன்றிற்று என்றும் கதைத்தது போன்ற புராணச் செய்திகள் தோன்றினமையாகும்.

'புகார்' என்ற பெயர் வந்ததன் காரணம், பாண்டியரின் பண்டைய தலைநகரும் துறைமுகமுமான அலைவாய் என்ற பெயர் வந்ததோடு ஒன்றிக் காணப்படுவது கவனிக்கத்தக்கதாகும்.

(தொடரும்)

கச்சம், தேவகோடி : கச்சம், தேவகோடி என்பன சில எண்ணுப் பெயர்கள். (சீவக-2219. நச்)

கச்சை ;— ஆடை நெகிழாமல் இருக்கக் கட்டிக் கொள்ளும் கற்றுப்பட்டை. (குறிஞ்சிப்பாட்டு விளக்கம் 70)

கட்டு : (1) கட்டாவது முறத்திலே நெல்லை இட்டுக் குறி சொல்லுதல் (அகம். 98. வேங்கட விளக்கு)

கட்டுரை : பொருள் பொதிந்த சொல்; உறுதியை உடைய சொல்லும் ஆம். (சிலப்-பதிகம் : 54. அடியார்.)

கருத்து அறிவிக்கும் கருவியா மொழி?

டாக்டர் வி. ப. கா. சுந்தரம், மதுரை.

மேலை நாட்டு மொழியியலை மட்டுமே கற்று விட்டு மொழி ஒரு கருவியே என்று கூறுவோர் உண்டு:—"மொழி என்பது கருத்தைப் பிறர்க்கு அறிவிக்கும் ஓசைக் கருவியே" என்று கூறிவிடுவார்கள். உடலை மறைக்கும் கருவி—சட்டை போன்று, தலையை மறைக்கும் கருவி தொப்பி போன்று—மொழியும் ஒரு கருவியே என்பார் சிற்சிலர். நான் அமெரிக்கக் கல்லூரித் திருவள்ளுவர் மன்ற விழாவில் தலைமை தாங்க அன்றைக்குப் பாரதிதாசனார் உரைத்தவைகளை இங்கு மீண்டும் உரைக்க விரும்புகிறேன்.

ஆற்றில் ஒருவரைக் கடத்தும் படகு போன்று கருத்தைக் கடத்துவதா மொழி: ஒருகரையிலிருந்து மறுகரைக்குப் படகு ஒருவரை எடுத்துச் செல்லும்; அதுபோன்று ஒருவரிடமிருந்து மற்றவர்க்குக் கருத்தை எடுத்துச் செல்லுவதே மொழி என்பார் உண்டு.

1. படகு உடன் வராதது; ஒருவரின் உள்ளே உறையாதது! உணர்ச்சியை ஊட்டாதது. மொழியோ என்றும் ஒருவருடன் வருவது; ஒருவருடன் இருப்பது. ஒருவரின் மனத்தே தங்கி விடுவது. உள்ளத்தில் ஒளியை ஏற்றுவது; உணர்வைத் தூண்டுவது.

2. மொழியானது புறம் பற்றியது அன்று; அது அகம் பற்றியது. விட்டு அகற்றிவிடத்தக்கது படகு. மொழி அகத்தினுள் அகமாய் இருப்பது. அதனை விட்டு அகற்றிவிடவே முடியாது. விட்டெறிந்து விட்டால், ஊமையாவாய்; இன்றேல் உளறுவோனாவாய்; இன்றேல் கிறுக்கனாவாய். மனிதனாக்குவது மொழி; மனிதனாக இருக்கச் செய்வது மொழி.

3. உன்னோடு மட்டும், உன் இனத்தவரோடு மட்டும் தொடர்புடையதன்று மொழி. நீ வாழும் காலத்தவருடன் மட்டும் தொடர்பு கொள்ளத் துணை புரிவது மொழி என்று எண்ணுதல் தவறு. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த தமிழர் எவ்வாறு நினைத்தார்கள்—எவ்வாறு

தொழுதார்கள்—எதற்காக அழுதார்கள்—எவ்வாறு காதலித்தார்கள்—எவ்வாறு போரிட்டார்கள்—என்று காட்டும் வரலாற்றுக் கண்ணாடி—மொழியாகும். வரலாற்றுக் கருவூலம் மொழியாகும். ஒவ்வொரு சொல் ஒரு கதை கூறுவது.

4. மரத்திலே, மண்ணிலே, பொன்னிலே, செம்பிலே சிற்றுளியால் தோண்டிக் கலம் செய்தான் ஆதிமனிதன். கல்லுதல்—தோண்டுதல். கல்லப்பட்டது (தோண்டப்பட்டது) கலம்; கல் + அம் = கலம். பொருள்களிலே கல்லிக் கல்லிச் சித்திரம் செதுக்கி அமைக்கும் தொழிலே—கலைத் தொழில். முதலில் கலை என்பது இப்பொருள்பட்டு நின்று, பின்னர் நுணுக்கமாக அமைந்த சித்திரம், ஓவியம், இசைகலை நடனக்கலை என்று அகன்ற பொருளில் வந்தது. பொருட் பேறு விரிந்தது. இதுபோன்று தமிழில் உள்ள ஒவ்வொரு சொல்லும் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் வாழ்ந்த வாழ்க்கையை, வாழ்வைக் காட்டுவது ஒவ்வொரு சொல் பண்டையோர் நினைப்பைப் பதிவு செய்து வைத்துள்ள பதிவு நாடாவாகும்.

5. ஆதிமாந்தனின் இறையியல் கோட்பாடுகளையும் கடவுள் சிந்தனையையும் கடவுள் வழிபாட்டு முறையினையும் காட்டும் தமிழ்ச் சொல்களே—இறைவன், கடவுள், இயவுள் பரம்பொருள், பகவன், ஆதி, பரமன், சிவன், முருகன்—முதலிய நூற்றுக்கணக்கான சொல்கள். வழிபாடு என்பது திருமறையின் வழிகளில்—கடவுள் காட்டும் வழிகளில் நடப்பதே ஆகும். 'இறை வழிச் செலவு'—வழிபாடு ஆகும். இத்துணை ஆழமான பெரிய மெய்ம்மைக் கருத்தை வெளிப்படுத்துவது—வழிபாடு என்னும் வான் பெரும் சொல். இவ்வாறே கடவுளைக் குறிக்கும் ஒவ்வொரு சொல்லும் விரிவாகக் கூறுகின்ற மெய்ப்பொருளை, தத்துவத்தை எல்லாம் உள்ளடக்கி நிற்பது. எனவே மொழி என்பள் தத்துவக் கருவூலம், மெய்யியல் கூறும் மேன் மலைகது ஆகும்; மெய்யியல் உய்வனங்களும் ஆகும்.

௬. கிருத்தவம் பரப்ப வந்த போப்பு ஐயர் திருவாசகத்தைப் படித்தபோது—உள்ளம் உருகியது; வெள்ளம் போல் அன்பும் அருளும் பெருகியது. திருமொழிகள் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவன; ஒரு மொழியின் சொல் அந்த மொழியாளனின் உணர்ச்சிகளை எழுப்பும்.

O! Parro, O my dear deer - என்றோ, இந்தியிலோ தன் காதலியை அழைத்தால் உணர்ச்சி ஊறி எழுமா? ஆங்கிலமும் இந்தியும் தெரிந்த பெண்ணிடம் கூட இச் சொல்கள் உணர்ச்சியை எழுப்பா. மான் கண் மாதவி! தேன்மொழித் தேவியே! என் கண்ணே! ஆருயிர் அமுதே! என்று கட்டிய மனைவியுடன் பேசிப் பார். "You are like the neetar of the heaven which is as dear as my life" என்பதை ஆருயிர் வானமுதே என்று சொல்லிப் பாரு. திரைப்படத்தில் கூடத் தமிழிலே பேசத் தெரியாத கொச்சை மொழியாளர்கள் கதை எழுதுவதுண்டு; பக்திப் பரவசமும் காதல் கனிரசத்தையும் ஊற்றுவது தாய்மொழியே.

7: உயிரையும் உயிரையும் இணைப்பது மொழி. "உன்னை மறவேன்! உன்னை ஒருக்காலும் மறவேன்!! என் முருகப் பெருமான்மீது ஆணை உன்னை ஒருக்காலும் மறவேன்!!! என்று காதலன் வற்புறுத்திச் சொல்லும் பொழுது உயிர்கள் இணைகின்றன; உயர்குடியின் மரபு வழியினர் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்களே. உணர்ச்சிகளின் ஆழத்தின் வைரக் கல்களை வெளியில் எடுத்து வைப்பது மொழி. மொழியில்லா விட்டால் நாய்கள் காதலிப்பது போன்று மெய்யுறு புணர்ச்சி மட்டும் கொண்டு, முடிவில் புணர்ந்தவன் போய் விடுவான். மொழியே இணைக்கிறது: மொழியே விடாத, மறக்காத மாண்புத் தொடர்பை உண்டாக்குகிறது.

8; வயிற்று வலி, மண்டையிடி, தேள்கடி முதலிய நோய்கட்கு என் தந்தையார் மந்திரிப்பார்; ஒருநாள் அவர் மனம் மகிழ நற்பணிவிடைகள் புரிந்து அவர் அருகில் இருந்து நான் கேட்டேன்:—"அப்பா! நீங்கள் என்ன சொல்லி மந்திரிக்கின்றீர்கள்—எனக்குச் சொன்னால் நானும் புகழ் பெற வழியுண்டாகும் என்றேன்; அவர் சொன்னார்— "நமச்சிவாய" என்பதையே சொல்லுகிறேன்" என்று; மேலும் கூறினார் "நமச்சிவாய" என்று நான் பற்றுறுதி பூண்டு பத்திமை பூண்டு—சொல்லுகிறேன். இச்சொல்லை இவ்வாறு உணர்ச்சியுடன் சொல்லிப் பயின்றுள்ளேன்—அது ஆற்றல் பெறுகிறது: இறையருள் அதனால் கிட்டுகிறது என்றார்; சொல்லினுள் இறையாற்றல் உண்டு.

9. உலகிலே சீனர்களும் தமிழர்களும் இசையில் முதன் முதல் 12 சுரத் தானங்களைக் கண்டுபிடித்தார்கள்; சுரத்தின் ஒலிகளைச் செப்பமாக, மிக மிக நுணுக்கமாக இணை

முறையில் அமைக்கக் கற்றிருந்தார்கள். இந்த வரலாற்றினை அறியத் துணை செய்வது சிலப்பதிகாரத்தின் சில வரிகள்; 2500 ஆண்டுக்கு முன் இருந்த பண்களை—அதற்குரிய உணர்ச்சிகளில் நாம் இன்றும் பாடலாம். மொழியானது அதற்கு வழி காட்டுகிறது. மக்கள் இறந்து 2500 ஆண்டு ஆகிறது; அவர்கள் கண்டுபிடித்த பண்ணை இன்று அறியலாம் பாடலாம்.

10. இன்றுள்ள கண்டுபிடிப்புகளை இனி 1000 ஆண்டுக்குப் பின் வருவோர்க்கு அறிவிக்கும் எதிர்காலத் தூரத் தொலைபேசியாகும் ஒரு மொழி.

11. ஒரு மொழியின் சொல் வளமானது அம் மொழியோரின் சிந்தனை வளத்தைக் காட்டும் கல்வெட்டுக்கள்; ஏராளமான சொல்களுக்கு ஏராளமான கருத்துகள்.

12. ஏழிசையாய் நிற்போன், உள் நின்றதோர் சுவை ஆனோன், உறு தாள ஒலி ஆன இறைவன் கொட்டாட்டுப் பாட்டாகி நின்றான்—என்றெல்லாம் போற்றி இறைவனை வழிபட்ட நாயன்மார்கள்—இறைவனையே கலையாக, இறைவனையே மொழியாகக் கண்டு இன்புற்றார்கள்.

எனவே மொழி என்பது வெட்டரிவாள் போன்று, படகு போன்று, வீடு போன்று கருவி மட்டும் அன்று; அது உயிர்க்கு உயிரானது; உணர்வின் உணர்வானது. இறைவனாக நிற்பது; ஆற்றல் மயமானது; வழிவழி வருவது வரலாற்றை அறிவிப்பது.

———

ஒக்கிடுதல்: ஒக்க+இடுதல். ஒழுங்கு படுத்துதல், பழுது பார்த்தல் (செட்டி நாடும் தமிழும்-205)

ஒட்டகம்: ஒட்டகம் என்பது அக்கால மரபுப்படி தமிழ்ச் சொல்லாகவே இருத்தல் வேண்டும். ஒரு மாதம் வரை பட்டினி இருக்கும் திறம் ஒட்டகத்தின் சிறப்பியல்பாம். ஒட்டப் போடுதல்—பட்டினியிருத்தல்; ஆதலால், அத்திறம் பற்றி அதற்கு அப்பெயர் இடப் பட்டிருக்கலாம்.

(தமிழ் வரலாறு 237)

பலகுடையம் தங்குடையம்

திரு. பா. வீரமணி

> பலகுடை நீழலும் தங்குடைக் கீழ்க்காண்பர்
> அலகுடை நீழ லவர் —*1034* (உழவு)

இக் குறளுக்கு மணக்குடவர் முதல் இன்றுவரை பொருள் கண்ட பெரும்பாலோரின் உரைகள் அத்துணைப் பொருத்தமாக இல்லை. ''பலகுடை'' ''தங்குடை'' என்பவற்றிற்கு ஒவ்வொருவரும் வெவ்வேறான பொருள் கொண்டு விட்டதால் குழப்பம் ஏற்பட்டு விட்டது எனலாம். இக் குறளையும், இக்குறளுடைய ''உழவு'' அதிகாரத்தையும் ஊன்றி நோக்கின் அக்காலத் தமிழகத்தின் சமுதாய நிலையையும், வள்ளுவரின் முற்போக்குச் சிந்தனையையும் நன்கு உணரலாம். இக் குறளுக்கு உரிய பொருளை உணர வேண்டுமாயின் வள்ளுவர் காலத்துச் சமுதாய நிலையை நன்கு உணர முற்பட வேண்டும்.

வள்ளுவர் காலத்துச் சமுதாய நிலை

வள்ளுவர் காலத்துச் சமுதாய நிலையைப் போதுமான அளவுக்குக் கூட அறிய நமக்குச் சான்றுகள் இதுவரை கிடைத்தில. அக்கால அரசியல், சமூக நிலையை அறிய போதிய கல்வெட்டுச் சான்றுகளோ, தொல் பொருள் சான்றுகளோ, வரலாறோ நமக்கு இன்னும் கிடைக்கவில்லை எனலாம். அதனாற்றான், சங்க இலக்கியங்களையும், திருக்குறளையும் கொண்டே அக்கால சமுதாய நிலையை உணர வேண்டியுள்ளது, வள்ளுவர் காலத்துத் தொழில்களையும், மற்றும் உழவையும் திருக்குறளைக் கொண்டே அறிய வேண்டியுள்ளது. உழவு அதிகாரத்தை ஆய்வதற்கு முன்பு, பண்டையபுராதன மனித சமூகத்தின் வாழ்நிலையை சிறிது தெரிந்துகொள்வது பயனுடையதாயிருக்கும்.

பண்டைக் காலத்தில் மனிதர்கள் தம் உணவுக்காக விலங்குகளை வேட்டையாடினர். வேட்டைக்காக மக்கள் நாடிடையிட்டும் காடிடையிட்டும் நாடோடிகளாகத் திரிந்து கொண்டிருந்தனர். நாடோடிகளாகத் திரிந்து கொண்டிருந்த மக்களுக்கு, சில நாட்களுக்கு உணவுக்காக விலங்குகள்

கிடைக்காதபோது, ஒருநாளில் பிடித்த விலங்குகளில் ஒன்றிரண்டை மறுநாளுக்காகக் கட்டி வைத்தனர். பின்னைய நாளுக்காக உணவை மனிதன் எந்நாளில் சேகரித்து வைக்க எண்ணினானோ, அன்றே முதலாளித்துவத்தின் வேர் முளைத்து விட்டது எனலாம். மற்றும், எஞ்சியவிலங்குகளைப் பின்னைய நாள்களுக்குக் கட்டிவைக்கத் தொடங்கியபோது, தன் ஏவலுக்கேற்ப விலங்குகளைக் கட்டுப்படுத்தவும் மனிதன் தெரிந்து கொண்டான். பின்னாளில் இரும்பைக் கண்டுபிடித்ததின் விளைவு, மனித சமூகத்தில் ஒரு புரட்சியை விளைவித்தது. விலங்குகளைக் கட்டுப்படுத்திய திறனும், இரும்பின் உதவியும், நாடோடிகளாகத் திரிந்துகொண்டிருந்த மக்களை ஒரே இடத்தில் தங்கி வாழ வழிவகுத்தது. இரும்பினால் மரங்களைச் செதுக்கி வடிவமைக்கவும், இரும்பைக் கொண்டு கலப்பை போன்ற உற்பத்திக் கருவிகளை உருவாக்கக் கற்றுக் கொண்ட மனிதர் நிலத்தை ஆழ உழுது பயிர்களை நன்கு விளைவிக்கும் திறனைப் பெற்றனர். பயிர்களை விளைவித்த உழவுத் தொழில், மனிதக் கூட்டத்தைக் காலந்தோறும் ஒரே இடத்தில் தங்கி வாழும் நிலையை உறுதிபடுத்தியது. உழவுத் தொழிலுக்காக, நல்ல நிலத்தையும், நீர்வளமிக்க இடத்தையும் நாடினர். பெரிதும் ஆறுகளின் கரைகளில் அவ்விடத்தைத் தெரிந்தெடுத்தனர். இந்நிலமே மருதம் என வழங்கப்பட்டது. குறிப்பாக உழைப்பும், உற்பத்திக் கருவிகளும் பல்லாற்றானும் உருவாக வழி அமைத்தது மருத நிலமே ஆகும். மனித இனத்தின் நாகரிகத் தொட்டிலும் மருதமேயாம்.

கல்வி எனும் சொல் கல்+வி எனப் பொருள்படும்; 'கல்' எனும் பகுதிக்குத் தோண்டுதல் எனப் பொருள். மனிதன், முதன்முதலில் தம் உணவுக்காகச் செடிகளையும், கொடிகளையும், பயிர்களையும் விளைவிக்க மண்ணைத் தோண்டினான். மொழி வாயிலாக நூல்களைக் கற்பதற்கு முன், மனிதன் கற்றது தோண்டுதலையுடைய தொழிற் கல்வியே ஆகும். 'கல்' எனும் பொருளையுடைய தோண்டுதல், பிற்காலத்தில் ''ஆராய்தல்'' எனப் பொருளாகி, எழுத்துக் கல்விக்கும் கல்வி எனப் பெயராயிற்று எனலாம். மனிதனின் ஆதி கல்வி தோண்டுதலையுடைய உழவுத் தொழிலே ஆகும். இம்முடிவிற்கு மொழிஞாயிறு பாவாணரின் கீழ்க்காணும் கருத்தும் அரண் செய்வதை அறியலாம்.

''கல்லுதல்—தோண்டுதல். மாந்தன் முதன்முதலில் கற்ற கல்வி உழவுத் தொழிலாதலால், கல்வி எனும் சொல்

முதலில் உழவுத் தொழிலையே குறித்திருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் நிலப்பண்பாட்டையும் உளப்பண்பாட்டையும் ஒருங்கே உணர்த்தும் Culture evetivation எனும் இருசொற்களும் col எனும் இலத்தின் சொல்லிலிருந்து தோன்றியிருக்கிறது''
(தேவநேயப் பாவாணர் - தமிழர் நாகரீகமும் - பண்பாடும், பக். 122, 1992.

விலங்குகளைத் தம் ஏவலுக்கேற்ப கட்டுப்படுத்த தெரிந்துகொண்ட மனிதஇனம் அவ்விலங்குகளைக் கொண்டு அவ்வினத்தைப் பல்லாற்றானும் பெருக்கியது. இரும்பின் பயனறிந்து கத்தி, கோடாரி, அரிவாள், கலப்பை போன்ற உற்பத்திக் கருவிகளைப் பலவகையில் பெருக்கியது. உழைப்பும் உற்பத்திக் கருவிகளின் பெருக்கமும் செல்வத்தை மேன்மேலும் வளர்த்தது.

''அனைத்துச் செல்வங்களின் தோற்றுவாய் உழைப்பே என்பது அரசியல் பொருளியல்வாதிகளின் முடிவாகும். இயற்கைக்கு அடுத்த நிலையில் செல்வத்தை உருவாக்குவது உழைப்பே ஆகும். இயற்கை வழங்கும் பொருள்களை அது செல்வமாக மாற்றுகிறது. ஓர் அர்த்தத்தில் உழைப்பு மனிதனையே உருவாக்கியது என்று நாம் கூறவேண்டிய அளவுக்கு அது மானுட வாழ்வு முழுவதற்கும் முதன்மையான அடிப்படையாக உள்ளது.
(ஏங்கல்ஸ், இயற்கையின் இயக்கவியல், 1974, பக். 278)

ஏங்கல்ஸின் மேற்கண்ட கருத்து இவ்வாய்வுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

உழவும் அதன் சிறப்பும் :

கலப்பையையும், எருதுவையும், நீர்வளமுடைய நிலத்தில் பயன்படுத்தி, மனிதஇனம் உணவுப் பொருளைப் பெருக்கியது. தம் ஊருக்குத் தேவையான உணவுப் பொருளைப் போதுமான அளவு பயன்படுத்தியும், உணவுப் பொருள் மிஞ்சியது. பின்னாளில் மேலும் மேலும் மிஞ்சியது. மிஞ்சிய பொருளை என்ன செய்வது? என்று எண்ணிய நேரத்தில்தான், பிற ஊர்களுக்கும், நாடுகளுக்கும் சென்று விற்கலாம் எனும் எண்ணம் தோன்றியது. எஞ்சிய பொருளை வெளிநாடுகளுக்குச் சென்று விற்க, நேரிடையாக

உழைப்பில் ஈடுபடாத நிலவுடைமையாளர்களுள் சிலர் முற்பட்டனர். அவர்களே பின்பு, வணிகர் எனும் தனி வர்க்கமாக மாறினர். உழவுத் தொழில், கருமார், தச்சர், உழுவோர், விற்பனையாளர், வணிகர் போன்ற பல வேலைப் பிரிவினரை (Division of labour) உருவாக்கியது. இவ் வேலைப் பிரிவினரின் உழைப்பால், உற்பத்தி மேன்மேலும் பெருகியது. வணிகம் வளர்ந்தது. இதன் விளைவாகச் செல்வம் பல மடங்கு பெருகியது. இந்த உற்பத்தியும், செல்வமும் பல மடங்கு பெருக மருத நிலமே, மற்ற நிலங்களைக் காட்டிலும் சிறந்திருந்தது. செல்வத்தின் கட்டுக்கடங்கா வளர்ச்சியே, பின்னாளில் அரசைத் தோற்றுவித்தது எனலாம். மனித சமுகத்தில், உழவும், நாகரிகமும், செல்வமும் தோன்ற ஊற்றுக்களமாக இருந்த மருத நிலமே, முதன்முதலில் அரசைத் தோற்றுவித்தது எனலாம். சங்க இலக்கியங்களில் மருத நிலம் பணையெனப் பல இடங்களில் (மதுரைக் காஞ்சி - 170, பெரும்பாணாற்றுப்படை - 24) குறிக்கப் பெறுகிறது. பணை எனும் சொல்லிற்குச் செழிப்பான நிலம், வளமான மண் எனக் கொள்ளலாம். பரிமேலழகரும் 1037 ஆம் குறளை விளக்கும் ஞான்று ''பணைத்து விளையும்'' என்று குறிப்பிடும் ஆட்சியை நோக்குக. நீர்வளம் மிக்க மருத நிலத்தைப் புலவர்கள் ''புனல் நாடு'' என அழைத்தனர். அந்நாட்டின் மன்னனையும் ''புனல்நாடன்'' என்றே அழைத்தனர். காவிரி எனும் பொன்னி ஆறு மருத நிலம் மிக்க சோழ நாட்டை வளப்படுத்தியதால், அந்நாட்டு மன்னனைப் ''பொன்னித் துறைவன்'' என்றும், ''வளவன்'' என்றும் அழைத்தனர். வளமிக்க நாட்டின் தலைவனே வளவன் எனப்பட்டான் இப்பொருளாட்சியைக் கருதியே சோழ மன்னர்களை மாவளத்தான் திருமாவளவன், கரிகால் வளவன், கிள்ளிவளவன் என அழைத்தனர். திருவள்ளுவரும், விளைவுவளம் மிக்க மருத நிலத்தையே, ''தள்ளா விளையுள்'' —731, என்றும் ''நாடென்ப நாடா வளத்தன''—என்றும் கூறினார் எனலாம்.

(தொடரும்)

செய்திகள்

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி

மாணவர் தம் இலக்கிய ஈடுபாட்டினையும் ஆய்வு நோக்கினையும் ஆழ்ந்த சிந்தனைத் திறனையும் வளர்க்கும் விருப்புடன் இருபத்தேழு ஆண்டுகளாக ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டிகளை நடத்தி வருகின்றோம்; முதல் தகுதி பெறும் எழுத்தோவியத்தை உருவாக்கும் மாணவ மணிக்கு ஈராயிரம் வெண்பொற் காசுகள் மதிப்புடைய தங்கப் பதக்கமும் அவர் பயிலும் கல்லூரிக்கு ஐயாயிரம் வெண் பொற்காசுகள் மதிப்புடைய ''கொடைவள்ளல் த. பி. சொ. அரிராம் சேட்டு நினைவுச் சுழற்கோப்பை''யும் வழங்கு கிறோம்;

இவ்வாண்டுக்குரிய ஆய்வுப் பொருள் :-

''பாவலர் முடியரசனாரின் தமிழ்த் தொண்டு''

1. தமிழகத்தின் பதின்மூன்று பல்கலைக் கழகங்களைச் சார்ந்த கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆண் பெண் ஆகிய இருபாலாரும் போட்டியில் கலந்து கொள்ள லாம்.
2. எழுத்தோவியம் முழு வெள்ளைத் தாளில் ஐம்பது பக்கங்களுக்குக் குறையாமலும், அறுபது பக்கங் களுக்கு மிகாமலும் அமைய வேண்டும்; மேற்கோள் நூற்பட்டியல் இறுதியில் இடம்பெற வேண்டும்.
3. ஆராய்ச்சிக் கட்டுரை வந்து சேருவதற்குரிய இறுதி நாள் 31—12—1993;
4. கருத்தோவியங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
   முனைவர் பா; வளன் அரசு
   தலைவர், தனித்தமிழ் இலக்கியக் கழகம்;
   1-அ, நெல்லை நாயனார் தெரு,
   பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002

பெற்றது வெற்றி

பெரு; தமிழ்வேந்தன், பவானிசாகர்.

வந்தது தமிழிற் றந்தி யெனுஞ் செய்தி நமக்குச்
செந்தேனாய்க் கிடைத்தது; இனித்தது—இந்திய
மொழிகள் பதினைந்தனுள் இருந்தமி ழொன்றே
விழுமிதாய்ப் பெற்றது வெற்றி.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. வி. குமாரசாமி அவர்கள், சியூனியன் தீவு.	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
திரு. A. T. A ஈஸ்வர அடிகளார்	5 00
தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00
பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
திரு. K. வேணுகோபால், சென்னை-14	25 00
திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கிள்ளான், மலேசியா.	25 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள். 51. வெங்கடராமய்யர் தெரு. சென்னை-79.	5 00
திரு. K. E. மணவாளன் அவர்கள், பெங்களூர்	10 00
திரு. நடராசன் அவர்கள், கோயமுத்தூர்	5 00
திரு. தி.ச. செந்திலாண்டவன் அவர்கள் தம் தந்தையார் சொ. சம்பந்த தேசிகர் முதலாண்டு நினைவு நன்கொடை	10 00
திரு. ஆ. பழ. குமரப்பன் அவர்கள், புதுக்கோட்டை	5 00

மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

D. வரலட்சுமி, 22, வேம்புலி அம்மன் கோவில் தெரு, பல்லாவரம், சென்னை-43.	20 00
திரு. M. G. முருகையன், 85, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை-43.	25 00
திரு. K. வீரபத்திரன், H.M. அருவிழிமங்கலம், வடவேர், குடவாசல் T. K நாகை மா. வ.	11 00
திரு. R. சேகர், 35, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை-43.	11 00

திரு. T. R. மோகன்,
68, ராஜேந்திர பிரசாத் ரோடு, நேரு நகர்,
குமரன் குன்றம், சென்னை-44. 10 00

திரு. V. கிருத்திகா,
35, சாவடித்தெரு, பல்லாவரம், சென்னை-43. 11 00

திரு. கோதண்டபாணி,
2/121, பிள்ளையார் கோயில் தெரு,
பொழிச்சலூர், சென்னை. 21 00

திரு. இரா. நெல்லையப்பன்,
15, சீனிவாச நகர், முதல் மெயின் ரோடு,
சென்னை 64. 21 00

திரு. T. S. பாஸ்கர்,
35, சாவடித்தெரு, பல்லாவரம், சென்னை-43. 51 00

திரு. J. N. D. அகஸ்டின்,
64, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை-43. 10 00

செல்வி மோனிகா,
70, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை-43. 10 00

திருமதி C. ஷோபனா,
65, சாவடித் தெரு, பல்லாவரம், சென்னை-43. 5 00

திரு. K. R. குணசேகரன், சென்னை-43. 10 00

திருமதி விஜயலட்சுமி மற்றும் ஆசிரியைகள்
N.S.N. பள்ளி, குரோம்பேட்டை, சென்னை-44. 25 00

திருமதி மீனா மற்றும் ஆசிரியைகள்
N.S.N. பள்ளி, குரோம்பேட்டை, சென்னை-44. 14 00

திரு. M. வேணுகோபால், 75, மல்லீஸ்வரி நகர்,
3-வது தெரு, சேலையூர்-600 073. 21 00

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-108, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.

கழகப் புதிய வெளியீடுகள்

திலகவதியார் நாடகம் - டாக்டர் அ. கலியபெருமாள் 25 00
சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்
—டாக்டர் எஸ். பி. சபாரத்தினம் 15 00
பாவேந்தர் பாட்டுக் கதைகள்—டாக்டர் பூவண்ணன் 15 00
பாட்டுத் தோட்டம் ,, ,, 20 00
தமிழனே இது கேளாய்—டாக்டர் முத்துக்குமரன் 30 00
அரசியல் மேதை அம்பேத்கார்—மோ. பாலசுப்பிரமணியம் 16 00
ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு
புலவர் கா. கோவிந்தன் 30 00
In the Kingdom of Nataraja
—Chantral Boulanger Tom Dawber 100 00
நாளிதழ் ஆசிரியர்—கருப்பையா, பி.ஏ. 85 00

தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும்

கோயிற் கலைச்செல்வர் தி. இராசமாணிக்கம் 25 00

சிவனும், முருகனும், தேவியும் மட்டுமன்று; ஐயப்பனும், சித்திரகுப்தரும், சகலகலாவல்லியும், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரும் இவர் கண்களிலிருந்து தப்பவில்லை. போசளர் (கோசலர்), சாளுக்கியர் கட்டிய கோயிற் கலைச் செல்வங்களும், தூங்கானை மாடம், கரக்கோயில்களின் அமைப்புகளும், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் போன்ற பகுதிகளும் படிக்கத்தகுந்தவை. பின்பகுதி சிறப்பாக எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்கின்றது. தமிழகக் கோயில்கள், பின்னிணைப்பு போன்ற பகுதிகள் கோயிற்கலையை அறிய உதவுகின்றன. கோயிற்கலையையும், தெய்வங்களின் பெருமைகளையும் இதைவிடச் சிறந்த நூல் விளக்கமாக வெளிவரவில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் 40 00

ஆரியம் கலவாத தமிழ்ப் பண்பாடு இருக்கின்றதா? என்று தமிழ் மக்களே வினவத் தொடங்கிய காலத்தில், அத்தகையதொரு சிறந்த பண்பாடு சிறந்தோங்கி வளர்ந்துள்ளது என்பதைச் சான்றுகளுடன் நாகரிகம், சமயம், கலைகள், பொழுதுபோக்கு என்ற தலைப்புகளில் எழுதியுள்ள மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூலை வரவேற்றுத் தம் பெருமையை பெருமிதத்துடன் படித்துப் பயனடைய உதவுகின்ற இந்நூலை எல்லோரும் வரவேற்க வேண்டும். சிறந்த தூயதமிழ் நடையையும் பாராட்டிப் பயன்பெறுவார்கள் என்பதும் எங்கள் எண்ணமாகும்.

பதிவு எண் : M / 4899 NOV 1993

Asian Educational Services

(C-2-15, SDA, New Delhi-110016.)

Branch : No. 5, Sripuram First Street, Royapettah, Madras-600014.

Phone No. 8265040

A Comprehensive Tamil and English Dictionary —WINSLOW M.		166	00
English Tamil Dictionary —WINSLOW		165	00
Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature —SINGARAVELU MUDALIAR		165	00
Thirukkural Original Tamil with English Translation —DREW & LAZARUS	GB	50	00
	HB	35	00
	PB	20	00
Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly —KATHIRAIVER PILLAI		165	00
A Grammar of the Common Dialect of the Tamil language —JOSEPH BESCHI		145	00
Dictionary of Tamil Proverbs —LAZARUS JOHN		196	00

Books can be had of :

The South India Saiva Siddhantha Works, Publishing Society Tinnevely Ltd., Madras-18.

154, T. T. K. Road, Madras-18.

Branches:

79, Prakasam Saalai (Broadway), Madras 108.
Tirunelvelli 6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1 Trichirappalli-2. Salem-1

அப்பர் அச்சகம், சென்னை-108.

செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-கூ பரல்- டிசம்பர் 1993
திருவள்ளுவர் ஆண்டு-உ கார்த்திகை



"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் இதழ்)

நிறுவனர் : தாமரைச்செல்வர் வ. சுப்பையா பிள்ளை

இதழாசிரியர் குழு

முனைவர் பொன். கோதண்டராமன்
முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் பொன். சௌரிராசன்
முனைவர் கு. சுந்தரமூர்த்தி
முனைவர் சொ. சிங்காரவேலன்
பேராசிரியர் கே. எஸ். சிவராமலிங்கம்
கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்
முனைவர் வீ. ப. கா. சுந்தரம்

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.,

உள்ளுறை

	பக்கம்
தமிழிசை ஆய்வில் புரட்சி	கஉக
நன்கொடையில் உலக சாதனை	கஉ௬
சங்ககாலத் துறைமுக நகரங்களும் பெயர்களும்	கஉக
செங்கண்மால் விடையார்	ககக
பலகுடையம் தங்குடையம்	கஉஅ
தமிழ்மொழி இலக்கியமும் இலக்கியத்திறன் ஆய்வும்	கசஎ
பக்தி இலக்கியத்தில் தொல்படிமங்கள் சில அணுகுமுறைகள்	கடுக
மதிப்புரை	கடுஅ

முருகவேள் பன்னிரு திருமுறை

—டாக்டர் தணிகைமணி

வ. சு. செங்கல்வராயப் பிள்ளை 940 00

அருணகிரிநாதப் பெருமான் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் முழுவதும், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம் மற்றும் திருமுருகாற்றுப் படை, சேய்த்தொண்டர் புராணம் முதலியவைகளை பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளது. பாமரரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய முறையில் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை உரை வகுத்துள்ளார்கள்.

திருப்புகழ் மணத்தைப் பரப்புவதற்காக அனைத்துத் தொகுதிகளும் கணிப்பொறி மூலம் தொகுக்கப்பெற்று ஒருங்கே கிடைக்கக் கழகவழி வெளிவந்துள்ளன.

செந்தமிழ்ச் செல்வி

தி. வ. ஆண்டு உ0உ௪ - கார்த்திகை
டிசம்பர் - 1993
சிலம்பு-கூ௩, பரல்-௪

தமிழிசை ஆய்வில் புரட்சி

சங்க காலத்தில் தனிப்பெருமை கொண்டு கோலோச்சிய தமிழன் களப்பிரர் இடையீடு ஏற்பட்ட பின் தன் புகழை இழக்கலானான். கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்குப்பின் வந்த சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் தந்த ஆதரவினால் தமிழ்ப் பண்பாட்டில் பிற இனக் கலப்பு அளவுக்கு அதிகமாகப் போனது. தொடர்ந்துவந்த நாயக்க அரசும், நவாப் அரசும் தமிழ்ப் பண்பாட்டைப் பற்றிக் கவலைப்படவே யில்லை. தமிழருடன் வாழ்ந்த வேற்று இன, மொழி மக்கள் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழர் கலைகளையும் சீர்குலையச் செய்தனர். பின்னர் வந்த வெள்ளையன் காலத்தில் மேலை நாட்டுப் பண்பரடு ஊடுருவலாயிற்று.

இச் சூழலில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் தமிழ் உணர்வு இயக்கங்கள் தலை தூக்கின. அவற்றுள் ஒன்று தமிழிசை இயக்கம். தங்கத் தமிழாம் சங்கத் தமிழ் தெறித்து பிறப்பதற்கு முன்னரே இயல், இசை, நாடகம் என முத்தமிழாக மிளிர்ந்து செழித்தோங்கி விளங்கியது. இசைத் தமிழ் பற்றிச் சீரிய இலக்கண நூல்கள் தோன்றின. தமிழர் வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியனார் முன்னோர் முறையையொட்டி ஐந்து திணைகளை வகுக்கும்போது ஐந்து வகை நிலங்களை வகுத்து ஒவ்வொரு நிலத்துக்குமுரிய, யாழ், இசைக்கருவிகள், பாடப் பெற வேண்டிய பண், பாடப்பெற வேண்டிய நேரம், பொழுது என்று விரிவாகக் கூறிச் சென்றார். சங்க காலத்தில் எழுந்த இசை இலக்கண நூல்கள் காலத்தால் அழிந்தன. சங்க கால இசை பிற்கால இனக்கலப்பால் சீர் குலைந்தது. 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெலுங்கிசை கர்னாடக இசை என்ற [illegible] பரவலாயிற்று. தமிழகத்தில் தமி[illegible] கூறுமளவிற்குத் தமிழிசைக்கு [illegible] குரல் எழுந்த[illegible] மேடையில் பாடிய இசைக் கலை[illegible]ர்களும் தமிழ்ப்பாடல்களை அறவே பாடாது விடுத்தனர்.

192468
031 ... 21 ... 2

வலுவிழந்த தமிழிசையின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட தமிழிசை இயக்கம் தொடங்கியது. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் 'கருணாமிர்தசாகரம்' என்ற விரிவான தமிழிசை ஆய்வு நூலைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதினார். யாழ் நாட்டு அறிஞரான விபுலானந்தர் இசைக் கருவியான யாழைப் பற்றி விரிவாக ஆய்ந்து 'யாழ் நூல்' இயற்றினார். இசையாய்வாளர்களான கு. கோதண்டபாணி பிள்ளை, அ. இராகவன், முனைவர் வீ. ப. கா. சுந்தரனார், பொறியியல் அறிஞர் திரு. ப. தண்டபாணி போன்ற பேரறிஞர்கள் அரிய ஆய்வு நூல்களை எழுதலாயினார். இவர்கள் வழி நின்று தமிழிசை பற்றி நுணுகி ஆய்ந்து தமிழிசை ஆய்வில் பெரும் புரட்சி செய்து வருபவர் திரைப்பட உலகில் புகழ்பெற்று விளங்கிய டாக்டர் புரட்சிதாசன் அவர்கள்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகட்கு முன் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து திரைப்படத் துறையில் நுழைவதற்காகச் சென்னை வந்து சேர்ந்தவர் திரு. இராசகணபதி அவர்கள், பள்ளிக் கல்வி முடிந்தவுடன் தமிழை முறையாகக் கற்க வேண்டுமென்று தக்க தமிழறிஞரிடம் இலக்கிய, இலக்கண நூல்களைக் கற்றார். தமிழ் இலக்கணத்தைக் கற்றபோதே யாப்பிலக்கணத்தில் சிறந்து விளங்கி இயல்பாகக் கவிதை புனையும் ஆற்றலையும் பெற்றார். தோற்றத்தில் திரைப்பட நடிகராதற்குரிய அமைப்பு இருந்த காரணத்தினால் நடிகராகலாமென்ற எண்ணமுமுண்டு. இவற்றுடன் தமிழிசையையும் முறையாகக் கற்றார். கேட்போரை மயங்க வைக்குமளவிற்கு இனிமையாகப் பாடும் நல்ல குரல் வளத்தையும் பெற்றிருந்தார். எனவே பாடலாசிரியராகவோ, பாடகராகவோ, நடிகராகவோ—ஏதோ ஒருவகையில் திரைப்படத்துறையில் நுழைய வந்தவருக்குப் பாடல் இயற்றும் வாய்ப்பு கிட்டியது. நடிகர் பி. யு. சின்னப்பா நாடகக் குழுவில் நடிகரானார். முன்னூறு படங்களுக்கு உரையாடல்களும், 5000 பாடல்களும் இயற்றிய பின் பிற மொழிப் படங்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடுவதில் ஈடுபட்டு 40 ஆண்டுகளில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழாக்கப் படங்களை வெளியிட்டுப் பேரும் புகழும் பெருஞ் செல்வமும் பெற்றார். மொழி மாற்றப் படம் என்றாலே 'புரட்சிதாசன்' என்று சொல்லுமளவிற்குப் புகழ் பெற்றார். திரைத்துறை திரு. இராசகணபதியைப் 'புரட்சிதாசனா'க மாற்றிவிட்டது. தாமே சில படங்களையும் தமிழில்

நேரடியாக உருவாக்கினார். சிறந்த திரைப்பட இயக்குனராகவும் மாறினார்.

இவ்வளவு புலமையும் திறமைகளும் பெற்ற புரட்சிதாசனார் இளமையிலேயே தந்தை பெரியார் அவர்களின் தன்மான இயக்கக் கொள்கைகளில் உள்ளத்தைப் பறி கொடுத்தார். அன்றும் இன்றும் தந்தை பெரியாரின் வழியே தமிழினத்தைத் தலைநிமிர வைக்கக்கூடிய ஒரே வழி என்பதை உறுதியாக நம்புகிறார். இந்தக் கொள்கைப் பிடிப்பு, பின்னால் இவர் நூலாசிரியரான பின் இவருடைய நூல்கள் அனைத்திலும் வெளிப்படலாயிற்று. இசையோ, கவிதையோ, கட்டுரையோ எதிலும் ஆரிய இனத்தின் ஊடுருவலால் தமிழினம் சீர்குலைந்ததைச் சுட்டிக்காட்டாமல் இருக்க மாட்டார்.

திரைத்துறையிலிருந்து சற்று ஒதுங்கியிருக்க எண்ணிய புரட்சிதாசனார் கடந்த பத்தாண்டுகளாகப் பல்வேறு பயனுள்ள நூல்களை எழுதிக் குவித்து வருகிறார். தமிழர் வாழ்வியலுக்குப் பயன்படக்கூடிய 6000 குறள்களை இயற்றி நூலாக வெளியிட எண்ணினார். யாப்பிலக்கணத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவராதலின் எல்லாவகைப் பாவினங்களில் எண்ணியதுபோல் எளிதில் பாவியற்றும் வல்லமை பெற்றவர், எனவே குறட்பாவில் நூலை வடித்தவர் அதை அச்சிடத் திட்டமிட்டார். அதைச் செம்மைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர் அதை அச்சிடும் முன்னரே வேறு நூல்களை வரிசையாகப் படைக்கத் தொடங்கிவிட்டார். பத்து நூல்களைப் படைத்த பின்னும் முதலில் எடுத்த நூல் இன்னும் முற்றுப் பெறாமலேயே நிற்கிறது,

இசைத் துறையில் உள்ள நீண்ட காலப் பயிற்சியினால் தமிழிசை பற்றி ஆயும் பணியில் ஈடுபட்டு இசைத் தமிழ், ஏழிசை, தமிழிசையில் சாமகானம், சிலப்பதிகாரச் செங்கோட்டியாழ் போன்ற விரிவான ஆய்வு நூல்களைப் படைத்துள்ளார்; இசையுடன் கூடிய நடனம், நாடகம் பற்றி ஆய்ந்து 'சிலப்பதிகாரக் கூத்து' என்ற நூலைப் படைத்துள்ளார்; நடனக்கலைப் பற்றி விரிவாக 'நாட்டிய நன்னூல்' என்ற தலைப்பில் நூல் எழுதி அச்சுக்குக் கொடுத்துள்ளார். இந்த ஆறு நூல்கள் தவிர தொல்காப்பியம் விளக்கும் ஐந்திணை பற்றி விளக்கும் இலக்கண நூலாகத் 'தொல்காப்பிய ஐந்திணை' பினை உருவாக்கியுள்ளார்;

யாப்பிலக்கணப் புலமை நிறைந்துள்ள காரணத்தினால் தற்கால இளைஞர்கள் முறையாக மரபுக் கவிதைகளைப் புனைய 'கன்னித் தமிழில் கவிதை பாடுவோம்' என்ற யாப்பிலக்கண நூலைப் படைத்துள்ளார். இலக்கிய, வாழ்வியல் நூலான 'ஐயந்திரிபற' 6000 குறள் அச்சேறும் வேளையை எதிர்நோக்கியுள்ளது. சமுதாய, சமய வரலாற்றாய்வில் ஈடுபட்டு 'வரலாற்றில் இந்து மதம்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். வாழ்க்கை வரலாறாகத் தம் நாற்பதாண்டுத் திரையுலக அனுபவங்களைப் பின்னணியாகக் கொண்டு 'சினிமாவும் அரசியலும்' என்ற நூலை வெளிக் கொணர்ந்துள்ளார். இதுவரை இவர் செய்த எழுத்துப் பணி இது.

இவர் இசையுலகில் செய்துள்ள புரட்சி இதுவரை தமிழ் இசையாய்வு செய்த அனைவரும் முல்லை நிலத்தை முதன்மையாகக் கொண்டு அரிகாம்போதியை முதல் ராகம் என்று எழுதி வந்துள்ளனர். இவர் இதனை மறுத்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என முறையாக வகுத்ததுபோல முதல் நிலம் குறிஞ்சியே; எனவே படுமலைப் பாலையான நடபைரவியே முதல் ராகம் என்று வாதிட்டுள்ளார் குரல் குரலாயது செம்பாலை. இது தமிழிசை. உழை குரலாயது அரும்பாலை. அதை முதல் ராகமாகக் கொள்வது வடஇசை மரபு. இது தவறு எனச் சுட்டிக் காட்டுகிறார் மதப்புலமை பெற்ற இசையாசிரியர்கள் முல்லையை முதன்மைப்படுத்திய அடிப்படையில் அரி (திருமால்) காம்போதிதான் செம்பாலை என்று நினைத்தும், குறிஞ்சியை இரண்டாவது படுத்திய அடிப்படையில் சங்கராபரணம் அதாவது படுமலைதான் என்றும் நினைத்துக் குழப்பி விட்டார்கள் என்று 'ஏழிசை' என்ற நூலில் 160 பக்கங்களில் விரிவாக ஆய்ந்து நிலை நாட்டுகிறார்.

உலகில் உள்ள எல்லா இசைக்கும் அடிப்படைச் சுரங்கள் தமிழிசையில் உள்ள ஏழு சுரங்களே. இவற்றின் இணைச் சுரங்களான ஐந்தைச் சேர்த்து 12 என்று வைத்துப் பண்ணுப் பெயர்க்க வேண்டும். பிற்பட்ட வடநூல் புரோகிதர்கள் 7+5=12 சுரங்களை அதிகப்படுத்திச் சொன்னார்கள். ஏழிசைத் தலைப்புகளுக்குரிய கனபரிமான அளவான 4, 4, 3, 2, 4, 3, 2 என்னும் 22ஐச் சாமகான சுரமென்று நம்ப வைத்தனர்; வடஇசைக்கு அடிப்படை சாமகானமே. அச் சாமகானம் தமிழிசையினின்று எழுந்ததே என்று

புரட்சியார் 'தமிழிசையில் சாமகானம்' என்ற 216 பக்க நூலில் நிலை நாட்டியுள்ளார். அவ்வாறு சாமகானம் என்று கொள்வது தவறு என்று பின்வரும் வரிகளில் சுட்டிக் காட்டுகிறார். 'ஏழு சுரங்களோடு மென் சுரங்கள் ஐந்து கொண்டால் பண்ணுப் பெயர்ப்பு. மேற்கொண்டு பல சுரங்கள் வைத்துப் பண்ணுப் பெயர்க்க முடியாது. இது இசைச் சுரச் சட்டம். ஏழு சுரங்களோடு மென் சுரங்கள் 5; 24 கால் சுரங்கள். கமகங்கள் கொண்டுதான் அந்தப் பண்களைப் பாட முடியும். பண்ணுப் பெயர்ப்பது வேறு; பாடுவது வேறு' என்று அருமையாக விளக்குகிறார்.

பழந்தமிழிசைதான் பிறமொழி இசைகளுக்கு மூல காரணம் என்பது புரட்சியாரின் கருத்து. சுரம், சுருதி, இராகம் எனப் பன்னீராயிரம் ஆதி இசைகளும் இசைத்தமிழ் என்கிறார். இசை இலக்கணம் கூறும் நூலாக 220 பக்கங்களில் படைத்துள்ள 'இசைத்தமிழ்' என்ற நூலில் பண்கள் வேறு. ராகங்கள் வேறு. குழல், யாழ், முழவு, பாடல். இந்த நான்கும் சேர்ந்து அமைவது பண். குரலால் இசைச் சுருதிப்படுத்திய சுரங்கள் கொண்டு ஆரோசை (ஏற்றம்) அமரோசை (இறக்கம்) கணிப்பது. பிறகு அதைப் பாடுவது ராகம் என்று இதில் விளக்கியுள்ளார். தமிழிசையில் பண்ணாகும்போது சுரமிரண்டும் மாத்திரை 22ம் ஆகக் கணக்கிற்கு 24 வரும். தமிழிசையைப் பின்பற்றிய பாதர் 22 மாத்திரைகளையே சுரமாகக் கொண்டது தவறு என்று புரட்சியார் இந் நூலில் விளக்கியுள்ளார்.

தமிழை நன்கு பயின்று தமிழிசையில் தேர்ச்சி பெற்று தமிழிசை ஆய்வில் தலைநிமிர்ந்து நிற்கும் புரட்சிதாசன் அவர்களின் தமிழிசை ஆய்வுப் பணிக்குத் தமிழிசைவாணர்கள் வரவேற்றுப் போற்ற வேண்டியது இன்றியமையாததாகும்.

நன்கொடையில் உலக சாதனை

சென்னை, டிசம்பர் 3;

சிதம்பரனார் மாவட்டம் ஸ்ரீவை குண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் கலைக் கல்லூரி நூலகர் திரு. பா. கலியாண சுந்தரத்திற்கு நன்கொடை அளிப்பதில் உலக சாதனை படைத்ததற்காக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் விருது வழங்கி கௌரவித்தார்.

இவர் 1990இல் தனக்கு ஊதிய (49 மாத) நிலுவைத் தொகையாக வந்த 1.11 இலட்சத்தை முழுமையாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஆதரவற்ற குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக அளித்தார். மாதச் சம்பளம் வாங்கும் ஒருவர் தான் வேலை செய்யும் காலத்தின் தனது ஊதியத்தி லிருந்து பொதுக் காரியத்திற்கு அளித்த மிகப் பெரிய நன்கொடை என்ற அளவில் இது உலக சாதனையாம்.

மன்னர் பாஸ்கர சேதுபதியின் 125ஆம் பிறந்த நாள் பெருமங்கள விழா 03-12-93 வெள்ளி மாலை 6 மணியளவில் சென்னை காதி கிராமத் யோக் பவன் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவில் மன்னர் பாஸ்கர சேதுபதி ஒரு சிறந்த கவிஞராகவும், நிர்வாகியாகவும், இசைப் பேரறிஞராகவும், கலைஞராகவும், கொடையுள்ளம் கொண்டவராகவும் இருந்ததை நினைவுக்கூறும் வண்ணமாக தற்காலத்தில் இப் பண்பு நலன் மிக்க சான்றோர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப் பட்டு கௌரவிக்கப்பட்டனர். திரு. கலியாணசுந்தரம் கொடையுள்ளத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். தான் பெறும் ரூ. 9,000/- மாத சம்பளத்தில் தனது செலவிற்காக ரூ. 600/- மட்டுமே எடுத்துக்கொண்டு மீதியை பொதுநலத்திற்காக செலவிடுபவர். பாகப் பிரிவினையில் தன் பங்கிற்கு கிடைத்த ரூ 4 லட்சம் மதிப்புடைய சொத்துக் களில் எதையும் பெற்றுக் கொள்ளாமல் முழுமையாக தானம் செய்து விட்டவர்.

தனது கண்களை மட்டுமல்லாது உடலையே மருத்துவக் கல்லூரிக்கு தானமாக எழுதி வைத்திருப்பவர். 30 ஆண்டு களாக வேலை பார்த்து வந்தாலும் 10 காசு கூட தனக்காக எவ்விதத்திலும் சேர்த்துக் கொள்ளாதவர். பொது வாழ் விற்கு இடையூறு என திருமண வாழ்வை தியாகம் செய்தவர். அரசு முன் கூட்டியே ஓய்வு பெறும் தங்கத் திட்டத்தை கொள்கையாக அறிவித்தபோது இது அரசு ஆணையாக வெளிவருமானால் அதன் மூலம் தனக்குக் கிடைக்கும் ரூ. 10 லட்சத்தை உடனடியாக நன்கொடையாக அளித்து விடுவதாக அறிவித்திருப்பவர்.

அடுத்த ஆண்டு தனது ஊதியம் மாதம் ரூ. 10 ஆயிரம் ஆகும்போது மக்கள் வரிப்பணத்தின் மூலம் பெறும் இந்த சம்பளத்திற்கு சமுதாயத்திற்கு புதுமையான முறையில் நன்றி தெரிவிக்கும் விதமாக ஓராண்டு முழுவதும் மாதந்தோறும் ரூ. 10,000 விதம் ரூ. 1,20 லட்சம் நன்கொடையளிப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்திருப்பவர். இதற்கு முன் ஏற்பாடாக அடுத்த ஆண்டு கட்டாயமாக சம்பளத்தில் பிடித்தம் செய்யக்கூடும் தொகையை இவ்வாண்டே ஒவ்வொரு மாதமும் தனியாக ஒதுக்கி வருபவர். தனக்கு வேண்டிய ரூ. 600/-ஐ விடுமுறை

நாட்களில் எளிய வேலை செய்து தனது தேவைகளை நிறைவு செய்துகொள்ள இருப்பவர்.

இவ்வாறு, ஒரு சமூக நல ஊழியர் தனக்காக எந்த விதத்திலும் எந்தக் காலத்திலும் சேமிப்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்ற கொள்கையில் வாழ்ந்து வரும் இவர் மாதச் சம்பளமாக வாங்குவோரில் இவர்போல் யாரும் நன்கொடை வழங்கியதில்லை என்ற வரலாறு படைத்தவர்.

நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் பேசும்போது இந்த விழா ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும், ஒரு மறைந்த தலைவர்க்கு விழா எடுக்கும்போது அவரது நற்பணிகள் மட்டுமே பேசப்படும். ஆனால் இந்த விழாவிலோ பாஸ்கர சேதுபதியின் பண்பு நலன்கள் மட்டும் பேசப்படாமல் இன்றும் அந்த குண நலன்களின்படி வாழ்ந்து வருபவர்களை தேடிக் கண்டுப்பிடித்து அவர்களை கௌரவித்துள்ளார்கள். இது மக்களிடையே மகத்தான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும். இவர்கள் போல் முழுமையாக நாம் வாழாவிட்டாலும் ஒரளவிற்காகவாவது அவர்கள் நெறிமுறைகளை கைக்கொள்ள வேண்டும் என்ற ஆசை மக்கள் உள்ளத்தில் எழுவதற்கு இது தூண்டுகோலாக அமையும். உதாரணமாக திரு. கலியாண சுந்தரனார் போல் முழுமையாக நாம் அர்ப்பணிக்காவிட்டாலும் 10இல் ஒரு பங்காவது நாமும் சமுதாயத்திற்காக செலவிட வேண்டும் என்ற எண்ணத்தை பலருக்கும் ஏற்படுத்தும். ஆக மாமன்னர் பாஸ்கர சேதுபதியை நன்றியுடன் நினைவு கூர்வதுடன், இன்றும் அவ்வழியில் வாழும் சான்றோர்களை கௌரவிப்பதுடன், மக்களையும் நல்வழிப்படுத்துவதாக இவ்விழா அமைந்துள்ளது. இத்தகைய சான்றோர்களை கௌரவிக்கும் பொறுப்பினை எனக்கு அளித்ததற்காக விழாக் குழுவினருக்கு நன்றி கூறுகிறேன். இவர்கள் சேவை மக்களுக்கு ஒளியாக அமையும் என்று பாராட்டினார்.

தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறையும் கோவா கடலாய்வு நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரை. நாள் 14, 15—2—92

சங்ககாலத் துறைமுக நகரங்களும் பெயர்களும்

பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)

(முன் இதழ் ௩௦௪ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகார் என்பது 'புகு' என்ற அடிப்படை வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். காவிரி, கடலில் 'புகுமுகம்' புகார் என்று வழங்கப்பட்டதாகும்.

ஆனால், ஆறுகளின் புகுமுகங்கள் எல்லாம் புகார் என்று சங்க காலத்திற்கு வெகு முன்னரே பொதுவாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்த ஆற்றுப் புகுமுகங்களில் அமைந்த பட்டினங்களில் சிறந்தது காவிரிப்பூம்பட்டினம் ஆனதால் சிறப்புப் பெயராக இப்பட்டினத்திற்குப் புகார் என்றும் பெயர் சங்ககாலத்தில் வழங்கியது.

சேரரின் இன்னொரு துறைமுகமான தொண்டியின் பெயரும் ஆராயத்தக்கது. தொண்டி என்ற பெயரும் அலைவாய், புகார் என்ற பெயர்கள் தோன்றிய காரணத்தொடு ஒத்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

புதுவைக் கடற்கரையில், 'ப' என்ற தமிழ் எழுத்தைத் தலைகீழாக வைத்தால் தோன்றும் அமைப்புப்போல் கடற்கரையோரத்தில் ஏற்படும் பள்ளமான பகுதியைத் 'தொண்டி' என்றழைக்கின்றனர்.

'சோமலெ' அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் 'தொண்டு' என்ற வழக்கு நிலத்துள் புகுந்த கடற் பகுதியைக் குறிக்கும் என்று எழுதியுள்ளார்.

இவ்வாறு, பள்ளமான தொண்டி என்ற கடற்பகுதியே துறைமுகப் பகுதியாக மாறிவிட்டதால், தொண்டி என்ற பெயரும் ஒரு துறைமுகத்தின் சிறப்புப் பெயராகச் சங்க காலத்திலேயே மாறியது.

சென்னைத் துறைமுகத்தை ஆழமாக்க இயந்திர மணல் வாரிகளைப் பயன்படுத்திச் செயற்கைத் துறைமுகமாக ஆக்கியுள்ளதைக் காணலாம்.

இயற்கையில் இவ்வாறு தோண்டப்பட்டு அமையப்பட்ட துறைமுகமே தொண்டி என்று சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டது. இந்தச் சேரரின் துறைமுகத்தைக் கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டு மேலைநாட்டுப் பயண நூலாசிரியர்கள் 'துண்டிஸ்' என்று அழைத்தனர்.

முகத்துவாரம் என்ற பெயரில் துவாரம் என்பது வடமொழிச் சொல்லாகும். புகார் என்ற பெயரின் நேர்ப் பொருள் கொண்டது துவாரம் என்ற வடமொழிச் சொல் லாகும்.

குசராத்து மாநிலத்தில் 'துவாரகா' என்ற பண்டைத் துறைமுகத்தைக் கடலகழ்வாராய்ச்சி செய்த கோவா கடலாய்வு இயக்குனர் எஸ். ஆர். ராவ், அந்தத் துவாரகா துறைமுகம் கி. மு. 1400 நூற்றாண்டுக்குரியது என்று கண்டு பிடித்துள்ளார்.

இந்தத் துவாரகாவே புறநானூற்று 201 ஆம் பாடலில் கூறப்பட்ட 'துவரை' என்று ஐராவதம் மகாதேவன் கூறும் செய்தி இங்கு கவனிக்கத் தக்கவையாகும்.

மற்றும் இன்றும் ஆற்றுத்துறைமுகங்களான 'ஹரித் துவார்' போன்ற வடமொழிப் பெயர்களில் 'துவார்' என்ற பெயர் துறைமுகத்திற்கு வடநாட்டில் வழங்குவதைக் காணலாம். இவையெல்லாம் அலைவாய் என்ற தமிழ்ப் பெயருடன் ஒப்புமையுடையனவாய்க் காணலாம்.

சோழருடைய துறைமுகமாகக் கோடிக்கரை சங்க நூல்களில் ஒரேஒரு அக. 70இல் மட்டும் கூறப்பட்டுள்ளது. கோடிக்கரையைப் பற்றித் தாலமி என்ற உரோம பூகோள ஆசிரியர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே கூறியுள்ளார்.

தமிழ் நாட்டுக் கடற்கரையூர்களிலேயே இலங்கைக்கு மிக அருகில் 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இவ்வூர் ஆகும். பிளினி என்ற உரோம வரலாற்று ஆசிரியர் கி. பி. 75ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக் கடற்கரை வணிக ஊர்களைப் பற்றி எழுதிய நூலில், ஒரு மேட்டுக்கரை ஊராகவும் இலங்கைக்கு மிகக் குறுகிய தொலைவில் உள்ள ஊராகவுள்ள கோடிக்கரை 'கொலியகம்' (Coliacum) என்று அழைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இதையே சங்கப் பாடல் ராமருடன் தொடர்புபடுத்தியதால் இலங்கையிலும் 'ராமகோவை' என்று அழைக்கப்பட்டது.

கோடிக்கரை காட்டில் இப்போதுள்ள நவீன கலங்கரை விளக்கில் ஏறி, நான் இலங்கைத் தீவைப் பார்த்திருக்கிறேன். இந்தக் கோடிக்கரை சங்க காலத்திலிருந்து இன்றும் இரண்டாயிரம் ஆண்டுகளாக மேலைநாட்டுப் பறவைகள் ருசியா, பின்லாந்து ஆகிய நாடுகள் மற்றும் பிற இடங் களிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து வல்சை வந்து தங்கும் புகலிடமாக (Bard Sanctuary) இன்றும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இராமன் இலங்கையின் மேல் படை எடுக்கும்போது, 'ஆலமரங்களிலிருந்து பறவைகள் செய்த ஓசையை அடக்கிய இடம்' என்று அகநானூறு 70ஆம் பாடல் கூறுவது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

கோடிக்கரை என்பதற்குப் பிற்காலத்து உரை யாசிரியர்கள் அலைக்கரை என்று கூறினர். ஆனால் அதுவே ஆதிசேது என்றும் சிலர் கூறியுள்ளனர். ஆதலின் சங்க காலத்திலிருந்த பண்டைத் துறைமுகம் இலங்கைத் தீவிற்குச் செல்ல முற்பட்ட துறைமுகம் கோடிக்கரையே என்பதில் ஐயமில்லை.

தொண்டை நாட்டைச் சங்க காலத்தில் ஆண்ட மன்னன் இளந்திரையனாவான். அவனது தலைநகர் காஞ்சி யாகவும் துறைமுகம் இக்காலத்திய மாமல்லபுரமாகவும் இருந்தது.

மாமல்லபுரம் பாறைகள் சூழ்ந்துள்ளதால் துறைமுகமாக இருந்திருக்க முடியாது என்று பேராசிரியர் மகாலிங்கம் அவர்கள் கூறியுள்ளார். ஆனால் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் திருமங்கை ஆழ்வார் குதிரைகளையும் பொன்னையும் மணியையும் கப்பல்கள் கொண்டுவந்த துறைமுகமாக மாமல்லபுரத்தைப் பற்றிக் கூறியிருப்பதால், மாமல்லபுரம் பல்லவர்களின் துறைமுகமாக இருந்தது தெரிகின்றது.

மாமல்லபுரத்தில் உரோமர் காசும் பண்டைச் சீனர்கள் காசும் கிடைத்திருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

மாமல்லபுரத்தின் சங்க காலப் பெயர், 'நீர்ப்பெயற்று' என்ற பெயர் பெரும்பாணாற்றுப் படையில் குறிப்பிடப் பட்டுள்ளது. நீர்ப்பெயற்று என்ற பெயர் நீர்ப்பெயல்+து என்று விரிக்கப்பட்டுச் சேர்க்க வேண்டியதாகும்.

நான் இந்தப் பெயரின் உண்மைப் பொருளை ஒரு தடவை மாமல்லபுரம் சென்றபோது மழை பெய்து கொண்டிருந்தபோது அர்ஜுனன் தவசு என்று இப்பொழுது அழைக்கப்படும் பாறைப் புடைப்புச் சிற்பத்தைப் பார்த்த போது உணர்ந்து கொண்டேன். அதை லாங்கர்ஸ்ட் என்ற தொல்லியல் துறை அறிஞர் மாமல்லபுரச் சிற்பங்களைப் பற்றி எழுதிய கட்டுரையைப் பின்னர் படித்தபோது உறுதி செய்ய என்னால் முடிந்தது.

மழை பெய்தபோது மழைநீர் விழுந்த அந்தச் சிற்பத்தில் உள்ள பிளப்பை நோக்கி நாககன்னிகைகளும் நாகர்களும் நீந்திச் செல்வதைப் பார்ப்பதுபோல ஒரு பிரமை எனக்கு ஏற்பட்டது.

இந்தப் பிளப்பு சங்க காலத்திலேயே இயற்கையில் இருந்திருக்க வேண்டும். இந்தப் பிளப்பின் வழியாக நீர் அருவிபோலப் பாய்ந்ததைக் கண்ட பண்டைத் தமிழர் 'நீர்ப்பெயற்று' என்று அந்த ஊருக்கே பெயரிட்டனர் என்று தெரிகின்றது.

பெயல் என்ற சொல் பிறவினையில் 'பெயற்று' என்று மாறும். நீர் பாய்வது பிறவினையில் 'பாய்த்து' என்று வருவதுபோல் 'பெயற்று' என்று வரும். மாமல்லபுரப் பாறைச் சிற்பப் பிளப்பில் சங்க காலத்தில் மேலிருந்து தேக்கின் நீரைப் பெயல் செய்திருக்கின்றனர் (பெய்திருக் கின்றனர்) அதாவது பாய்ச்சியிருக்கின்றனர்.

செய்மரக்கா, செய்குன்று ஆகியவற்றைச் செயற்கையாக அழகுக்காக அமைப்பது பற்றி தமிழ் நூல்கள் கூறியுள்ளன. அவ்வாறு செயற்கையாக நீர் அருவியை உண்டு பண்ணியிருக் கின்றனர்.

லாங்கர்ஸ்ட் (Longhurst) அவர்கள் 23 அடி சுற்றளவு உள்ள தொட்டி (Cistern) தொட்டி சிற்பத்தின்மேல் செயற்கையாக அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

இந்தத் தொட்டி அடியிலும் பக்கத்திலும் காரை பூசப் பட்டதாக இருந்தது. 'இந்தத் தொட்டியில் நீர் நிரப்பப்பட்டது. வடக்குப் பக்கத்தில் ஆட்கள் தரையி லிருந்து மேலே தொட்டிக்குச் செல்லப பாறையில் படிக்கட்டுகள் உள்ளன. இங்குச் செங்குத்தான பாறையின் மேலேற ஏணியைப் பயன்படுத்தியிருப்பர் என்றும், சில உற்சவ நாட்களில் இந்தத் தொட்டியில் நீர் நிரப்பப்பட்டு நீர் பாறைப் பிளப்பில் விழும்படிச் செய்து, மலையருவி வீழ்வது போலச் செய்து காட்டினர் என்றும் லாங்கர்ஸ்ட் கூறியுள்ளார்.

இயற்கை நீர்ப்பெயல் காட்சியை இப்பாறையில் கண்ட விசித்திர சித்தனான மகேந்திர பல்லவன் அந்தப் பாறையை மாபெரும் செயற்கைச் சிற்பமாக ஆக்கினான் என்று கருத வேண்டும். லாங்கர்ஸ்ட் எழுதிய விளக்கத்தைப் பின்னர் படித்தபோதுதான் 'நீர்ப்பெயற்று' என்ற சங்க நூற் பெயரின் உண்மையைப் புரிந்து கொண்டேன்.

பல்லவர் காலத்தில் ஜலசயனப் பெருமாள் கோயில் மாமல்லபுரத்தில் தோன்றியதை வைத்துக் கொண்டு மு. இராகவய்யங்கார் பெரும்பாணாற்றுப்படையில் பாட மாற்றமாகக் காணப்படும் 'நீர்ப்பாயல்' என்பதே பண்டைப் பெயர் என்று கொண்டார்.

பின்னர் தோன்றிய நீரில் சயனிக்கும் திருமால் கோயிலை வைத்துக் கொண்டு சங்க காலத்தில் உள்ள பெயரை நிலைநிறுத்துவது புராண மனப்பான்மையையே காட்டுகின்றது.

இந்தக் கருத்தை வைத்துக்கொண்டு பேராசிரியர் மகாலிங்கம் அவர்களும் 'நீர்ப்பெயற்று' என்று மாமல்ல புரத்தின் சங்ககாலப் பெயரைப் புரிந்து கொள்ளாமல், ஒரு கட்டுரையில் மாமல்லபுரம் ரோமர் தமிழகத்துடன் வணிகம் செய்த காலத்தில் துறைமுகமாக இருந்திருக்க முடியாது என்று எழுதியுள்ளார்.

மாமல்லபுரத்தில் உள்ள பிற்காலக் கலங்கரை விளக்கம் அவ்வூர் துறைமுகமாக இருந்ததற்குச் சான்று பகருகின்றது. ஆதலால் மாமல்லபுரம் சங்ககாலத்தில் துறைமுகமாக 'நீர்ப் பெயற்று' என்ற பெயரில் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

பெர்சி பிரவுன் (Percy Brown) கூறியுள்ளதுபோல மாமல்லபுரச் சிறபங்களில் நீர் வழிபாடு ஐதிகமும், நாக வழிபாடு ஐதிகமும் (Water Cult and Nagacult) இரண்டறக் கலந்துள்ளன. என்பது தெளிவாகின்றது.

பெரிப்புளூஸ் என்ற கிரேக்க நூலில் 'கோட்டனரிகே' என்ற துறைமுகத்திலிருந்து ஏராளமான மிளகு, முசிறி துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது: இதைக் கோழிக்கோடு அருகிலுள்ள கடத்த நாடாக அறிஞர்கள் சிலர் கூறியுள்ளனர்.

ஆனால், வேறு சிலர், கோலத்து நாடெனக் கொள்வர். கோலத்து நாடு என்பதே சரியானதாகும்:

சங்க காலத்தில் நன்னன் ஆண்ட ஏழில் மலைநாடு கோலத்து நாடு என்று பின்னர் அழைக்கப்பட்டது. 'வட கேரளத்தில் இன்றும் கோலம் என்ற பண்டைத் திராவிடப் பண்பாடு ஆட்டம் விழாக் காலங்களில் நடக்கின்றது: இத்தகைய ஆட்டத்தைக் 'கொங்கணைக் கூத்தரும் கொடுங் கருநாடரும் தகைசாலணியினராக ஆடியதாகச் சிலப்பதிகாரம் கூறியுள்ளது.

கோலம் என்றொரு ஆட்டத்தை அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார். ஆதலின் கோலத்து நாடு என்ற பெயரே சரியானதாகும். நான் ஏழில் மலையை நேரில் சென்று பலமுறை ஆராய்ந்துள்ளேன்.

நன்னன் சங்க காலத்தில் கானமர் செல்வி அருளால் வெண்காற்குதிரைகளைக் காலில், அதாவது காற்று வழியாகக் கப்பலில் பெற்றதாக, அகநானூறு 245ஆம் பாடல் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

பட்டினப்பாலையில் புகார் துறைமுகத்தில் கப்பல் வழியாகப் பெற்ற குதிரைகளையும் திருமங்கையாழ்வார் மாமல்லபுரத்தில் கப்பல் வழியாகப் பெற்ற குதிரைகளையும் இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

வெண்காலையுடைய குதிரைகள் (White Stockinged Horse) சிறந்த சாதிக் குதிரையாக மேலை நாட்டார் கருதினதைக் கவனிக்க வேண்டும்.

இன்று ஏழில் மலைக் கடற்கரையில் இந்தியக் கப்பற் படை பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இடம் சங்க காலத்திலேயே துறைமுகமாக இருந்திருக்க வேண்டும்.

நன்னன் ஆண்ட பூழி நாட்டில். இன்றைய மாவட்டத் தலைநகரான கண்ணனூரில், ஏழு பேர் சாக்குகளில் சுமக்க முடியாதபடி ரோமா காசுகள் கிடைத்ததை—வரலாற்றறிஞர்கள் கூறியுள்ளதை இது சார்பாகக் கவனிக்க வேண்டும்.

இடைக் காலத்து வந்த இபின்பதூத்தா என்ற பயணி கூட ஏழில் மலையைத் துறைமுகமாகவே குறிப்பிட்டுள்ளான்.

கிருபானந்த வாரியார் மறைவுக்கு இரங்கல்

பிறத்தல் வேண்டும்!

பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

தவமிருந்து பெற்றெடுத்த தமிழகத்தைத் தவிக்கவிட்டுத்
தாளாத பெரும்பிரிவால் மறைந்ததேனோ?
தவழ்ந்து வந்த வானூர்தி இருக்கையிலே
தணந்ததே உயிர்மூச்சு என்றார் ஐயா!

அருள்மொழி அரசே: ஆன்மீகப் பெருமுரசே!
அவனியிலே அருளுரைக்கு ஆன்றோர் யாரே?
இருந்தகாலை பேருலகு திருந்துமாறு
இனிய நல்லுரையாலே நெறிகள் சொன்னாய்?

ஆரறிவால் அருட்பெருக்கால் அன்புரையால்
அனைவரையும் பிணிக்கச் செய்த அருளமுதே!
பிரிவாலே பெருந்துயரில் கலங்குகின்றோம்
பித்தரென மெத்தவுமே வருந்துகின்றோம்

அருளூற்றாய்த் தமிழ் மண்ணில் பிறந்துயர்ந்து
அழுங்கவிட்டு அறக்காடு நாடிச் சென்றாய்
இருகையால் வணங்கி உம்மை வேண்டுகின்றோம்
இந்நிலத்தே மீண்டும்நீர் பிறத்தல் வேண்டும்!

"செங்கண்மால் விடையார்"

(அப்பர்)

(விருஷபாந்திக மூர்த்தி)

தமிழகக் கோயிற் கலைச்செல்வர்
திரு இராசமாணிக்கம், பி.ஏ., பி.காம்., விசாரத்.
கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (ஓய்வு)
பொள்ளாச்சி.

இறைவன் அடியார்களுக்கு அருள வெளிப்படும் போதெல்லாம் அருளின் திருவுருவமாகிய அன்னையுடன் மட்டும் தோன்றவில்லை; அவ்வமயம் அவன் உலகோர் உய்ய அறநெறியை வலியுறுத்துவதால், அறக் கடவுளாகிய விடை மீது அமர்ந்து விடுகிறான் என்பதற்குச் சான்றுகளைத் திருத்தொண்டர் புராணத்தில் பரக்கக் காணலாம். மாணக்கஞ்சாறன் நாயனாருக்காகப் "பாங்கின் மலை வல்லி யுடன் பழைய மழவிடையேறி" வந்ததனை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

இடபத்தின் மீது இறைவனும் இறைவியும் அமர்ந்தும் இருக்கலாம்; அல்லது காளைக்கு முன்னால் இருவரும் நின்ற திருக்கோலத்திலும் அமைக்கப்படலாம். இந்த இரண்டு வடிவங்களையுமே ஆகமத்தில் "விருஷபாரூட மூர்த்தி" என்றுதான் கூறப்பட்டுள்ளது. ஆனால் நின்ற திருக் கோலத்தில் உள்ள திருவுருவை "விருஷபாந்திக மூர்த்தி" எனச் சிற்பக் கலை வல்லுநர்கள் அழைக்கிறார்கள்.

காண்போரை வியப்பில் ஆழ்த்தும் கலைத்திண்மை மிக்க வடிவம் ஒன்று தஞ்சை அருங்காட்சியகத்தில் உள்ளது. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்த வடிவம் திருவெண்காடு திருக்கோயிலினின்றும் கிடைக்கப் பெற்றதாம்; அதில் இறைவன் மற்றும் இறைவி மட்டுமே காணப்படுகின்றனர்; காளை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவன் கிராமத்தில் வசிக்கும் ஒரு குடியானவன் போன்று காணப்படுகிறான். அவனது தலையை அழகு செய்யும் சடைகளாலான தலைப்பாகையின் அமைப்பு கலை வண்ணத்துடன் வடிக்கப்பட்டுள்ளது. இறைவனது சடையை

நான்கு வகைகளாக அமைக்கலாம் என ஆகமத்தில் கூறப் பட்டுள்ளது. அவை: சடா மகுடம், சடா மண்டலம், சடா பந்தம், சடா பாரம் என்பனவாம். இங்கு காணப்படும் அமைப்பு மேற்கூறிய நான்கு வகைகளில் எதையும் சார்ந்த தாகத் தெரியவில்லை. தலைபாகைக்குப் பின்னால் சடைமுடி சுருள்சுருளாகத் தொங்குகிறது.

"ஐவாய் அரவினை மதியுடன் வைத்த அழகா"

என்றும்,

"வளராத பிறையும் வரி அரவும் உடன்
துயில வைத்து அருளும் எந்தை"

என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியதற்கேற்ப, முன்புறம் தலைப்பாகைக்கு மேல் படம் எடுத்த நிலையில் பாம்பு ஒன்றும், பிறை சந்திரனும் காணப்படுகின்றன. இரு கைகள் தாம் உடைய இந்த வடிவின் இடக்கை ஊரு முத்திரையில் உள்ளது. இடக்கால் ஊன்றி இருக்க, வலக் காலைக் குறுக்கே வைத்து நின்றுள்ள அழகு காணக்காணக் கண்ணில் அடங்காது. கழுத்தில் மாலையும் விரல்களில் மோதிரங்களும், இடையில் ஆடையும், கால்களில் சலங்கை களும் உருவாக்கப் பெற்றுள்ளன.

அருகில் நின்றுள்ள அன்னை சற்று சாய்ந்தபடி உள்ளது பெண்மையின் அழகுக்கு அழகைக் கூட்டுவிப்பதாக உள்ளது. தலையின் பின்புறம் முடி சுருள் சுருளாக அழகுடன் தொங்குவதும், தலையை அலங்கரிக்கும் வேலைப் பாடமைந்த கரந்த மகுடமும், நுண் இடையும், இடையில் அணிந்துள்ள ஆடையின் அழகும், திருமேனியில் காணப்படும் பல அணிகலன்களும் இதை வடித்த சிற்பியின் கைத்திறனைப் பறை சாற்றுவதாக உள்ளது.

கலை நுட்பத்துடன் வழங்கப்பெற்ற இந்த வடிவங்கள் கலைக்கண்களுக்கு ஒரு மாபெரும் விருந்தை அளிப்பதுடன், தஞ்சை அருங்காட்சியகத்திற்கே ஒரு தனிச் சிறப்பினை அளித்துள்ளது என்றால், அது சற்றும் மிகையாகாது.

இத்தகைய அரிய அமைப்பினைக் கொண்ட வடிவம் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் உள்ள அரும் காட்சியகத்திலும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ப

பலகுடையம் தங்குடையம்

திரு. பா. வீரமணி

(முன்னிதழ் ககஎஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசைத் தோற்றுவித்த மருத நிலம், அவ்வரசு நிலை பெற்று விலங்குவதற்கும் உதவியது. அதற்குக் காரணம், வியல்களும், வயல்களில் உழும் உழவர்களே ஆவர். 'மருத நிலத்தில இருந்த வயல்கள் மட்டுமேயல்லாமல், ஏனைய குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய நிலங்களில் உள்ள வயல்களும் உற்பத்தியைப் பலமடங்கு பெருக்க உதவின. குறிப்பாகவும், சிறப்பாகவும் உழவர்களின் உழுத்தொழிலே நாவிலங்களிலும் செல்வத்தைப் பெருக்கின எனலாம். உணவுப் பொருள் அன்றன்று உண்பதற்குத் தேவையாக இருந்தாலும், அப்பொருள் அன்றன்று செலவாகும் தன்மையைப் பெற்றிருந்தாலும், உழுத்தொழில் இடையறாது தொடர்ந்து இயங்கும் கடப்பாடு உடையதாக இருந்தது. அதனால், செல்வமும் தொடர்ந்து பெருகியது எனலாம். இத்துணைச் சிறப்பைப் பெற்றிருந்ததால்தான் உழுத்தொழிலை, வள்ளுவர் "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்"—எனச் சிறப்பித்தார். உழவுத் தொழிலே அனைத்துத் தொழிலுக்கும் அடிப்படை. உணவுப் பொருள் இல்லையென்றால் மக்கள் வேறு தொழில் செய்து வாழ முடியாது. அந்நாளில் எல்லாத் தொழிலையும் இயங்க வைக்கும் ஆற்றலையுடையதாக உழவுத் தொழில் இருந்தால்தான் வள்ளுவர் "உழவே தலை"-1031 என்றும், "உழுவார் உலகத்தார்க்கு ஆணி"-1032 என்றும், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"-1033 என்றும் சிறப்பித்தார். இங்கு இன்னொன்றையும் நோக்குதல் வேண்டும். "உழுவா ரென்றது உழுவிப்பார் மேலும் செல்லும்" என்று பரிமேலழகர் கூறுகிறார். அதாவது, உழவரை மட்டுமே யன்றி, நிலவுடைமையாளரையும் குறிக்கும் என்கிறார். இக்கூற்று சிறிதும் பொருந்தாது. வள்ளுவர் காலத்தில் நிலவுடைமையாளர் இருந்துள்ளனர். அவர்கள் சிறுப்பான்மையினரே. வள்ளுவர், அவர்களைச் சிறிதும் கருத்தில் கொள்ளாமல், உழைப்பவர்களை நோக்கியே,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின்"—1037 என்றும்

"ஏரினும் நன்றால் எருவிடுதல்"—1038 என்றும்
"செல்லான் கிழவன் இருப்பின்"—1039 என்றும்
"கைசெய்தூண் மாலை யவர்"—1035 என்றும்

கூறுகிறார். நிலத்தை உணக்குபவரும், ஏரால் உழுது எருவிடுபவரும், களைகளைக் களைந்து பயிரைக் காப்பவரும் நேரிடையாக உழைக்கும் உழவரே அன்றி நிலவுடைமையாளர் அல்லர். உழைக்கும் உழவரை மட்டுமே 'உழவு' அதிகாரத்தில் மேற்கண்டவாறு திரும்ப திரும்ப குறிப்பிடும் அவர், எந்தக் குறளிலும் நிலவுடைமையாளரைக் குறிப்பிட வில்லை என்பதை ஊன்றி நோக்குதல் வேண்டும். வள்ளுவர் காலத்தில் பெரும்பான்மையான நிலப்பகுதி உழுதுண் போரிடத்தும், சிறுபான்மை உழுவித்துண் போரிடத்தும் இருந்ததாகத் தெரிகிறது. மன்னர்க்கும் பெரும் நிலம் உரிமையாக இருந்திருக்கலாம். மன்னர்க்கு நிலம் இருந்தது பற்றியோ அவை, எப்படிப் பயிரிடப்பட்டன என்பதைப் பற்றியோ குறட்பாக்களில் எங்கும் சான்று இல்லை. வள்ளுவர் காலத்திற்கு 500 ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட பிற்காலச் சோழர்களின் காலத்திலேயே (கி. பி. 846 முதல் 1281 வரை) ஏழைகளுக்கும், கோயிலில் பணி செய்யும் பணியாட்களுக்கும், தேவரடியார்க்கும் நிலங்கள் சொந்தமாக இருந்த செய்திகளை, புஞ்சை, ஆடுதுறை போன்ற கல்வெட்டுகளின் மூலம் விளக்குகிறார் பேராசிரியர் நா. வானமாமலை, மேலும், தம் நூலில்,

> "சோழர் காலத்தில் நிலவுடைமை முறைகளில் செய்த மாறுதல்களின் தன்மையைக் கல்வெட்டுகளின் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. வெள்ளான் வகையில் சிறுநிலச் சொந்தக்காரர்களின் உடைமையைப் பறித்து கோயில் தேவதானமாகவும் இறையிலி நிலமாகவும் மாற்றினார்கள். உழவர்கள் தங்கள் உடைமைகளை இழந்தார்கள். உழுதுப்போரின் நிலங்களில் பலவற்றைப் பிரமதேயமாக்கினார்கள். இதனால் உழுதுப்போர் நிலை தாழ்ந்தது." என விளக்குகிறார்.
> —(பேராசிரியர் நா. வானமாமலை-தமிழர் வரலாறும் பண்பாடும் - 1966 - பக். 24)

பிற்காலத்திய சோழர்கள் காலத்தில் உழவர்களிடமிருந்து நிலங்கள் பிடுங்கப்பட்டு அவை, கோயில் நிலங்களாக மாற்றிய நிலையை அறிகிறோம். அக்காலத்திலேயே

சமுதாயத்தின் கடைகோடி மக்களுக்கு நிலம் சொந்தமாக இருந்ததை அறிகிறோம். நம் காலத்தில் இன்னுங்கூட ஏழைகளுக்கு ஆங்காங்கே நிலங்கள் சொந்தமாக இருப்பதை அறியலாம். ஆகவே வள்ளுவர் காலத்தில் கடைகோடி மக்களான பலர்க்கு நிலம் உரிமையாக இருந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை. இன்று இந்தியாவில் 7 கோடியே 13 இலட்சத்து 80 ஆயிரம் ஹெக்டர் ஏக்கர் நிலங்கள் பயன்படுத்தப்படாமல் தரிசாக உள்ளன என தம் நடுவண அரசு அறிவித்திருக்கிறது. இந்நிலங்களை உழவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வறுமையையும் பெருமளவுக்கு ஒழிக்கலாம் என்கிறார்கள். நம் காலத்திலேயே இவ்வளவு நிலங்கள் தரிசாக உள்ளன என்றால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த வள்ளுவர் காலத்தில் எத்துணைப் பரந்த நிலங்கள் தரிசாக இருந்திருக்கக் கூடுமென்பதை நன்கு உணர முடிகிறதன்றோ! அதனாலன்றோ,

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"—1040 என்றார்.

ஒருவன் தன்னை வறுமையுடையவனென்றோ, ஒன்றுமில்லாதவன் என்றோ கருதி சோம்பியிராமல், தன்முன்னே இருக்கும் நிலத்தைப் பண்படுத்தி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அதனைப் பயன்படுத்தாமல் வாளா இருப்பானாயின் அவனை "நிலமென்னும் நல்லாள் நகும்" என்கிறார். எந்த நிலவுடைமையாளரிடத்தும் கூலியாக அல்லாமல், நினைத்தால் தாமே சென்று திருத்தி உழக்கூடிய நிலங்கள் அவர் காலத்தில் பெருமளவு இருந்தன என்பதை இக்குறள் மூலம் உணர வேண்டியுள்ளது. மற்றும்,

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"—1039 என்கிறார்.

(பொருள் - நிலத்திற்குரியவன், நாள்தோறும் நிலத்திற்குச் சென்று உழவு வேலைகளை மேற்கொள்ளாமல் இருப்பானாயின், அந்நிலம் அவனுடைய மனைவியைப் போல வெறுத்து அவனோடு பிணங்கிவிடும்) இக் குறளில், கணவன் இல்லாளை அவ்வப்போது பேணிக் காப்பதைப்போல் நிலத்தைப் பேணிக் காக்க வேண்டும் என வலியுறுத்து

வதால் அக்காலத்தின் உழைப்பாளர் பலர்க்கு நிலம் உரிமையாக இருந்ததென அறிய முடிகிறது. மேலும்,

"இரவார் இரப்பார்க்கொன் றீவர்; கரவாது
கைசெய்தூண் மாலை யவர்." —1035 என்றும்

"உழவினார் கைம்மடங்கின் இல்லை; விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை" —1036 என்றும்

கூறுவதால், அக்காலத்தின் நிலத்தை உரிமையாகப் பெற்ற உழவர்கள் போதுமான செல்வம் பெற்று இல்லாதார்க்கும், துறவிகளுக்கும் உதவும் நிலையில் இருந்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது. அதனாற்றான்,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" —212 என்றும்

"தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு"—613 என்றும்

கூறினார். மேலும். "கைசெய்தூண் மாலையவர்" என்பது ஒரு ஞான்றும் அழிவில்லாத செல்வமுடையார் என்னும் ஏதுவை உட்கொண்டு நின்றது" எனப் பல்கலைக் குரிசல் பரிமேலழகர் கூறும் விளக்கத்தான் அக்காலத்திய உழவர்களின் வாழ்நிலையை நன்கு உணரலாம். இதுகாறும் கூறிய சமூகப் பின்னணியோடு "பலகுடை நீழலும்" எனத் தொடங்கும் குறளுக்குப் பொருள் காண்பது பொருத்தமுடைத்து.

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்." —1034

இக்குறளுக்கு, "உழுதல் தொழிலான் நெல்லினை உடையராய தண்ணளியுடையோர் பலவேந்தர் குடை நிழலதாய மண்முழுதினையும் தம் அரசன் குடைக் கீழே காண்பர் என்றவாறு" எனப் பரிமேலழகர் பொருள் கண்டார். மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோரும் மேற்கண்டவாறே உரை கண்டனர். நம் காலத்தில் பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்களும்

"நெற்கதிர்ச் செல்வமுடைய கருணையாளர் பல அரசர் குடைக்கீழுள்ள
நிலமுழுவதையும் தம்மரசர்குடைக் கீழாகச் செய்வர்"

எனப் பரிமேலழகரைப் பின்பற்றியே உரை கண்டார். மற்றும் புலவர் குழந்தை பாவாணர், டாக்டர் வ. சுப. மாணிக்கம், சாமி, சிதம்பரனார், திருக்குறள் முனுசாமி, ''திருக்குறள்—உரை வேற்றுமை'' எனும் நூலினை எழுதிய சாரங்கபாணியும், மற்றுஞ் சிலரும், அவ்வாறே உரைக் கண்டனர். இவர்கள் அனைவரும், ''தங்குடைக்கீழ்க் காண்பர்'' என்பதற்கு, தம் மன்னரின் குடைக்கீழ்க் காண்பர் என்று பொருள் கொண்டுவிட்டனர். நுனித்து நோக்கினால் இப்பொருள் சரியானதன்று என்று இனிது உணரலாம். உழவைக் கொண்டு தம் மன்னர்க்கும், பிற மன்னர்களுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்துவது அல்ல இக்குறள். அனைத்துத் தொழில்களைக் காட்டிலும், உழவு சிறந்த தென்பதையும், எல்லோரையும் விட உழவர் சிறந்தவர் என்பதையும் வலியுறுத்துவதே இங்கு வள்ளுவரின் நோக்கமாகும்.

உழவுத் தொழிலே அனைத்துத் தொழில்களுக்கும் மூலம். இத்தொழில் ஏற்கனவே கூறியது போன்று, கொல்வர், தச்சர், இடையர், எரு விற்போர், விற்பனையாளர், வணிகர், போன்ற வேலைப் பிரிவினரை (Division of Labour) உண்டாக்கி செல்வத்தைப் பெருக்கியது. உழவுத் தொழிலினால், மக்களுக்கு நிறைவான உணவுப் பொருள் கிடைத்ததோடு, மன்னர்க்கு நிலவரியாகப் பெரும் பொருள் சென்றது. உழவு உற்பத்தி பெருகியதால் வணிகம் வளர்ந்தது. வணிகத்திலிருந்தும் பெரும்வரி மன்னனுக்குச் சென்றது. அக்காலத்தில் ஒரு மன்னனின் அல்லது நாட்டின் பெரும் வருமானம் நிலவரியிலிருந்தும் உற்பத்தி வரியிலிருந்தும் வணிக வரியிலிருந்துமே கிடைத்தது எனலாம்.

''நிலத்திலும் வணிகத்திலும் இருந்தே அரசன் தன் சொத்துக்கள் பெரும் பகுதியைப் பெற்றான். வாணிகத்திலிருந்தும் அரசனுக்கு மிகுதியான வருமானம் கிடைத்தது. எவ்வளவு வரி நிலத்திலிருந்து வந்ததோ அவ்வளவு வரி வாணிகத்திலிருந்தும் வந்தெனக் கூறலாம்'' (பேராசிரியர் வித்தியானந்தன் - தமிழர் சால்பு - பக். 75 - 1954)

நில வரியும் உற்பத்தி வரியும் வணிக வரியும் மன்னர்க்குக் கிடைத்ததால், மன்னன் நாட்டை நன்முறையில் இயக்க முடிந்தது எனலாம்.

''உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்'' —756

என்று வள்ளுவர் குறிப்பிடுவதையும் ஆய்ந்துப் பார்த்தல் வேண்டும். இங்கு ''உறுபொருள்'' எனக் குறிப்பிடப்படுவது உழவு உற்பத்தியால் கிடைக்கும் உற்பத்தி வரியும், நில வரியுமே ஆம். உழவு உற்பத்தி இடையறாது தொடர்ந்து நடப்பதாலும் அதன் விளைவாக பெரும் பொருளாக மன்னனுக்கு வரி கிடைப்பதாலும், உறு எனும் உரிச் சொல்லைப் பெய்து உறுபொருள் என்றார் எனலாம்.

''உறுபொருள்—வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின் கண்கிடந்து பின் கண்டெடுத்தாம், தாயத்தார் பெறாததூஉம் ஆம்'' எனப் பரிமேலழகர் கூறுவது சிறிதும் பொருந்தாது, எப்போதோ கிடைக்கும் புதையல், நாட்டை நடத்தும் மன்னர்க்கு ஒரு பெரும்பொருள் எனக் கூறிவிட முடியாது. அதனை, எதிர்பார்த்து, ஒரு மன்னன் ஆட்சி செய்யவும் முடியாது. இக்குறளுக்குக் காளிங்கரின் விளக்கம் நேரிய அரிய விளக்கம் எனலாம்.

''நாடு இறுக்கும் முறைமையின் பெரும்பொருளும் நீரினும் நிலத்தினும் வருவனவற்றுள் தனக்கு உளவாம் சுங்கப்பொருளும் தன் பகைவரைத் திறை வாங்கிக் கொள்ளும் பொருளும் எல்லாம் வேந்தனுக்கு நெறியின்வரும் பொருள் என்றவாறு'' (காளிங்க , திருக்குறள் உரைக்கொத்து - பொருட்பால் - 1960 - பக். 433.

அக்காலத்தில் வரியை இறையெனவும், புரவு எனவும் அழைத்தவர். இறுக்கப்பட்டதால் இறையெனப்பட்டது. அந்த இறையைக் கொண்டு நாட்டை நடாத்துவதால் மன்னனும் இறையெனப்பட்டான் போலும். வரியைக் கொண்டு மன்னன் மக்களைப் புரத்தலால், வரி புரவெனப் பட்டது என்பதையும் நினைவு கூர்தல் வேண்டும். மன்னன் அக்காலத்தில் நாட்டை ஆட்சி புரிய, உற்பத்தி வரியையும் நில வரியையும், வணிக வரியையுமே எதிர்பார்த்திருக்க வேண்டியிருந்தது. இவ்வரிகள் இல்லாமல் மன்னன் நாட்டை இயக்கவே முடியாது. எனவே உழவனின் உற்பத்தி மன்னனுக்குக் குடையாக இருக்கிறதெனலாம். வான்மழை இல்லையெனில், உலகில் தானமும் தவமும் ஏற்படமுடியாது என்பது போலே (குறள்-2) உழவுத் தொழில் இல்லையெனில், உலகில் உணவு கிடைக்காது. மன்னன் நாட்டை ஆட்சிப் புரியவும்

முடியாது. வள்ளுவர் இவ்வாறு உழவரைப் போற்றிய தால்தான் இளங்கோ அடிகளும் சிலப்பதிகாரத்தில்,

> ''இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
> உழவிடை விளைப்போர்''
>
> (நாடுகாண்காதை - 149, சிலப்பதிகாரம்)

(பொருள் - இரப்போர் சுற்றத்தையும் மன்னரின் வெற்றியையும் உழுதொழிலின்கண் தோற்றுவிப்போராகிய உழவர்) என உழவரைச் சிறப்பித்தார். வள்ளுவர் காலத்திற்கு முந்திய சங்க காலத்திலும் கூட மன்னரின் வெற்றிக்கு முழுமுதல் காரணமாக இருப்பவர் உழவர் என்றே அறிய முடிகிறது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆட்சியில், விளைநிலங்களுக்கு மக்கள் கொடுக்கவேண்டிய வரியைக் கொடுக்க முடியாதபோது, நல்லிசைப் புலவர் வெள்ளைக்குடி நாகனார் மன்னரைக் கண்டு, வரியை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வேண்டிய போது,

> ''பொருபடை தருஉங் கொற்றமும் உழுபடை
> ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே''
>
> —புறநானூறு 35

என உழவுத் தொழிலைப் போற்றுவதைக் காணலாம்.

''நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே; நீர்குடிகளின் காட்சிக்கு எளியனாய் இருத்தல் வேண்டும். நின் கொற்றக்குடை வெயில் மறைத்தற்குக் கொண்டதன்று குடிகட்கு அருள் செய்வதற்பொருட்டே, நின்வெற்றியம் உழவர் உழு படையின்று சால்மருங்கின் உண்டாகும் விளை பயனே'' (புறநானூறு-35) என்று புலவர் கூறுவதின்மூலம் மன்னனின் வெற்றிக்கு அடிப்படையாக இருப்பது உழவுத் தொழில் என்பதை தெள்ளிதின் உணரலாம்.

எனவே, குறளில் ''தங்குடை'' என்பது மன்னரின் குடையைக் குறித்து வந்ததன்று. உழவரின் பயன்மிகு தொழிலின் பெருமை குறித்து வந்ததேயாகும் முதலில், அனைத்துத் தொழிலும், உலகமும் உழவுக்குப் பின்தான் (குறள்-1031) என்றார். உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்றார்.

''உலகத்தார்'' என்றது ஈண்டிவரை யொழிந்தாரை'' எனப் பரிமேலழகர் விளக்குகிறார். அதாவது உழவரை, உழவரையொழிந்த மற்ற அனைவர்க்கும் ஆணி என்கிறார். இங்கு, மக்களுக்கு மட்டுமேயல்லாமல், மன்னனுக்கும் ஆணி போன்றவரே எனக் கொள்ள வேண்டும்.

''கலங்காமல் நிறுத்தற்கண் ஆணி யோதலின் ஆணி என்றார்'' என்கிறார் பரிமேலழகர். அதாவது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து பசியால் கலங்க வைக்காமல், மக்களைக் காத்தலின் உழவரை ஆணி என்றார் எனலாம். மற்றும், உழவரை ஆணி என்று வள்ளுவர் கூறியதற்கு, அரிய விளக்கம் தருகிறார் குறள்வேள் ஜி. வரதராஜன் அவர்கள். அவ்விளக்கம் இவ்வாய்வுக்கு ஓர் ஒளியைப் பாய்ச்சுகிறது.

> ''தேரைப் பார்ப்பவர்கள் அச்சாணியைப் பார்ப்பதில்லை: தேரின் அழகையும், அதில் தொங்கும் தேர்ச்சிலையையும் தான் பார்ப்பார்கள். மேலும் தேரை இழுப்பவனும், தேரை நோக்கி நடத்துபவனும் தாங்கள் தாம் தேர் ஓடுவதற்குக் காரணம் என்று எண்ணுகிறார்கள். ஆனால், உண்மையில் தேரைத் தாங்கி நடத்துவது தேரின் அச்சாணியே. அதுபோல், இன்றும் என்றும் மக்கள் சமுதாயத்தைத் தாங்கி நடத்துபவர் உழுதுண்டு வாழ்பவர்களே''.
>
> (ஜி. வரதராஜன் - திருக்குறள் உரை விளக்கம் - 1988 பக். 452.)

(தொடரும்)

''செந்தமிழ்ச் செல்வி''

ஆண்டுக் கையொப்பம்		வாழ்நாள் கையொப்பம்	
உள்நாடு	ரூ. 25.00	உள்நாடு	ரூ. 250-00
வெளிநாடு	ரூ. 125-00	வெளிநாடு	ரூ. 750-00

தமிழ் மொழி இலக்கியமும் இலக்கியத் திறன் ஆய்வும்

திரு. தி. சு. திருமலைவேலு,
ஆங்கில விரிவுரையாளர் (தே. நி.)
அரசு கலைக்கல்லூரி, கரூர் - 5.
(முன்னிதழ், ௧0௧ஆம் பக்கத் தொடர்ச்சி)

16. கி. பி. 7ஆம் நூற்றாண்டில் ஆசிரியப்பா (Blank Verse) விருத்தப்பா (Versification) வகையாக மாறிய தோடல்லாமல் ஒப்பிட்டு ஐந்திரம் என்ற இலக்கியத்திறனும் வெளிப்பட்டது. உரை இலக்கியங்களுக்கு அடித்தளமான திவாகரம், பிங்கலம் நிகண்டுகள் இக்காலத்தே தோன்றின. நிகண்டுகள் இன்றைய கலைக் களஞ்சியங்களுக்கு (Encyclopeadia) முன்னோடிகள் ஆகும். கி. பி. 8, 9 ஆம் நூற்றாண்டு களில் சமயப்பாசுரங்கள் மற்றும் பிரபந்த இலக்கிய வகை களுடன் "கலம்பகம்" என்ற கலப்புக் கவித்துவத் திறனும் (Mixed Poetic Talent) தமிழில் தோன்றியது.

17. கி. பி. 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் "மணிப் பிரவாள" உரை நடையும், சமயத்தத்துவ விளக்க உரை களும் பேருரைகளும் தமிழில் தோன்றின. கி. பி. 12ஆம் நூற்றாண்டில் இளம்பூரணரின் தொல்காப்பிய உரையும், தமிழ் நாடகக் கலையின் பழைமையை உணர்த்தும் அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையும், நச்சினியார்க் கினியரின், "சிந்தாமணி" உரையும் தோன்றின. கி. பி. 13, 14ஆம் நூற்றாண்டுகளில் பேராசிரியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், மயிலைநாதர், பரிதி, காளிங்கன், பரிமேலழகர், நம்பியர், பெரிய வாச்சான் பிள்ளை, அழகிய மண வாளர், வேதாந்த தேசிகர், உமாபதி சிவாச்சாரியார் போன்ற திறமைமிக்க உரை ஆசிரியர்கள் தங்கள் உரைகள் மூலம் இலக்கியத் திறனாய்வு நெறிக்கு வளம் சேர்த்தனர்.

18. உமாபதி சிவாச்சாரியாரின் "சிவப்பிரகாசம்", இலக்கியத் திறன் ஆய்வின் முன்னோடி ஆகும். உரிச்சொல் நிகண்டும் இக்காலத்தே தோன்றியது.

19. கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் ஆந்திரர் முகம்மதியர் மேலாதிக்கத்தால் உருது, தெலுங்கு மொழித்தாக்கங்கள் தமிழில் ஏற்பட்டது. இக்காலத்தே வாழ்ந்த கவிகாள மேகம் தொல்காப்பியர் கூறும் அங்கதம் (Satire) என்ற இலக்கிய வடிவத்தையும், சிலேடை (Pun)ப் பாடல்களையும் பிரபலமாக்கினார். நாடோடிப் பாடல் (Folk Lore) வகையைச் சேர்ந்த 18 சித்தர்கள் பாடல்களும் இக்காலத்தே தோன்றின.

20. கி. பி. 16ஆம் நூற்றாண்டில் உரைவளம் தமிழிலக் கியத்தில் அதிகமாகத் தோன்றவில்லை. 3368 சூத்திரங் களைக் கொண்ட நிகண்டு ஒன்றினை, அகராதி (Lexicon) என்ற பெயரில் ரேவண சித்தர் 1594இல் வெளியிட்டார். அறம் வளர்த்தான் நாட்டிய இலக்கணங்களை எழுதினார்.

21. கி. பி. 17ஆம் நூற்றாண்டில் ஆங்கில இலக்கியம் தமிழ் மண்ணில் பரவத் தொடங்கியது. காரி இரத்தின கவி மாறனலங்காரத்திற்கும், தொல்காப்பியத்திற்கும், உரை எழுதினார். இந்நூற்றாண்டு வரைத் தோன்றிய தமிழிலக் கியங்கள் அனைத்தையும் பட்டியல் (Catalogue) செய்து, அவற்றை ஏடுகளில் எழுதி, பிறகாலத்தில் அச்சிட வழி வகுத்தவர் இக்காலத்தில் வாழ்ந்த அழகிய சிற்றம்பலக் கவிராயர் ஆவார்.

22. கி. பி. 18ஆம் நூற்றாண்டில் படைப்பிலக்கியங் களுக்கு ஏற்ப பிரபந்த இலக்கணங்கள் எழுதப்பட்டன. மாபுராணமும், பூத புராணமும் இலக்கண நூல்கள் என்பதனை அறிந்து, காப்பியத்திற்கும் புராணத்திற்கும் இலக்கணம் வகுக்கப்பட்டது.[10] விருத்தி உரை போன்ற உரைவகையும் (Prose Genre) இக்காலத்தே தோன்றியது. சிவஞான முனிவரின், "திராவிட மாபாடியம்", திறனாய் வுக்கு மறுதிறனாய்வாக அமைந்தது. சங்கர நமச்சிவாயரின் நன்னூல் விருத்தி இலக்கண உரையும், அகம், புறம், மரபுகளை விளக்கும் கச்சியப்ப முனிவரின் "தணிகைப் புராணமும்", வீரமாமுனிவரின் சதுர அகராதியும், ஐந்திலக்கணம் பற்றிய தொல் நூல் விளக்கமும் இந் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க இலக்கியப் படைப்புகள் ஆகும்.

23. கி. பி. 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "செந்தமிழ்ச் செல்வி", "மணிக்கொடி", போன்ற இலக்கிய இதழ்கள் உரை இலக்கியங்கள் பெருக பெரும்பணி ஆற்றத் தொடங்கின. அதற்கு 19ஆம் நூற்றாண்டில் புதுக்கவிதை, மொழியாக்கம், ஒப்பியல் நோக்கு போன்றவை வெளிவரத் தொடங்கியமையே காரணம். ஏடுகள் நூல்களாக அச்சிடப் பட்டு பதிப்பாளர் முன்னுரைகளுடன் வெளிவரத் தொடங்கின. பதிப்பாளர் முன்னுரைகள் சிறந்த இலக்கியத் திறனாய்வுகளாகக் கருதப்பட்டன. "வசன நடை கைவந்த வள்ளலார்" என்று போற்றப்பட்ட ஆறுமுக நாவலர், சமயக்கொள்கைகளைத் திறனாய்வு (Religious Criticism) செய்தார். பிரபந்தவேந்தரென்று போற்றப்பட்ட திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, 20ஆம் நூற்றாண்டில் காப்பிய வளர்ச்சிக்கும் வித்திட்டார். இவருடன் பழைய தமிழ் காப்பிய காலம் மறைந்து 20ஆம் நூற்றாண்டில், இலக்கியம், கருத்தாய்வுக் காப்பியங்களாக (Ideational Criticism) புது நோக்கோடு, சுத்தானந்த பாரதி, சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன் மற்றும் கண்ணதாசன் போன்றோரால் உருப் பெற்றது. கால்டுவெல் ஐயரின், "ஒப்பிலக்கணம்", தமிழில் மொழிஇயல் (Philology) மற்றும் மொழி இயல் கல்வியை (Linguistics) 19ஆம் நூற்றாண்டில் வளர்க்க உதவியது.

24. செல்வக்கேசவராய முதலியாரின், "கம்ப இராமயணத் திறனாய்வும்" (1887), சி. வை. தாமோதரம் பிள்ளை (1882-1901) கலித்தொகை, சேனாவரையம், தணிகைப்புராணம் நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளும், ட்ரைடன் (Dryden) திறனாய்வுத் தழுவலாக வ. வே. சு. ஐயர் எழுதிய "Kambaramayana-A Study" என்ற நூலும், தொல்காப்பியரின் "பிசி" கோட்பாடாக பெர்சிவல் பாதிரியாரால் (Fr. Percivel) எழுதப்பட்ட "பழமொழித் திரட்டு" என்ற நூலும் 19ஆம் நூற்றாண்டின் சிறந்த திறனாய்வு நூல்கள் ஆகும்.

25. கி. பி. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலக்கிய வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கல்வெட்டு ஆய்வு போன்றவை மூலம் தமிழ்த் திறனாய்வுக் கலை உத்வேகம் பெற்றது. உ. வே. சாமிநாத ஐயரின் (1855-1942) பதிப்பாளர் முன்னுரைகள், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியின் (1870-1903) நாடகவியல்; மறைமலை அடிகளின் (1876-1950) முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆய்வுகள், செல்வக் கேசவராய முதலியாரின் (1864-1921) "தமிழ் வியாசங்கள்", டி. கே. சிதம்பரனாரின் முருகு நவிர்ச்சி ஆய்வுகள் போன்றவை தமிழ் இலக்கிய திறனாய்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள், ஆக அமைந்தன.

26. நவீன இலக்கியத் திறனாய்வாளர்களில் தெ. பொ. மீனாட்சி சுந்தரனின் (1910-1980), "கானல்வரி", "குடிமக்கள் காப்பியம்" போன்றவை படைப்பாளனே திறனாய்வாளன் என்பதனை நிறுவுகின்றன. மு. வரதராசனின் "இலக்கிய ஆராய்ச்சி", மற்றும் "இலக்கியத்திறன்", க. கைலாசபதியின், "திறனாய்வுப் பிரச்சினைகள்" சி. சு. செல்லப்பாவின், "அலசல் விமர்சனம்" போன்றவை மேலை இலக்கிய நோக்கிலேயே திறனாய்வை ஆய்வு செய்கின்றன.

27. இன்று, வாழும் திறனாய்வாளர்கள் வரிசையில் ந. சஞ்சீவியின், "இலக்கிய இயல்", ஞானமூர்த்தியின், "இலக்கியத் திறனாய்வு இயல்", ஜான் சாமுவேல், பாலச்சந்திரன் போன்றோரின், "இலக்கியத் திறன் ஆய்வு" வெங்கட் சுவாமிநாதனின் "என் பார்வையில் திறனாய்வு", மா. இராமலிங்கத்தின் "திறனாய்வு நெறி", மற்றும் டி. ரவீந்திரனின், "விமர்சனச் சிதறல்கள்: திறனாய்வு", போன்றவை ஆங்கில இலக்கியத் திறனாய்வுத் தாக்கங்களின் வடிகால்களே ஆகும்.

இத்துடன் இருபதுக்கும் மேற்பட்ட திறனாய்வுச் சார்பு நூல்களும்[11] (Allied Critical Works) தமிழில் எழுதப் பட்டிருப்பினும் இவை நமது இலக்கியப் பாரம்பரியத்தில் இழையோடும் திறனாய்வு நெறிகளைச் சுட்டி ஆய்வு செய்யாமல், பிற திறனாய்வு நெறிகளோடு அவற்றை ஒப்பிட்டே ஆய்வு செய்கின்றன.

28. இதுகாறும் கண்டவற்றுள் தமிழ் மொழி இலக்கியத்தின் இலக்கியத் திறனாய்வு என்பது தொல்காப்பியர் கூறும் இலக்கிய (செய்யுள்) வடிவங்களுள் ஒன்றான, "உரை"யே என்பதும், படைப்பிலக்கியங்களுக்கு 14 விதங்களில் உரை எழுதலாம் என்று நன்னூல் பவணந்தி முனிவர் கூறுவதாலும், தமிழிலக்கிய உரை ஆசிரியர்களின் ஆய்வுத்திறன் மேலை இலக்கியத் திறனாய்வு நெறிகளையும்

விஞ்சி நிற்கிறது என்பதும், படைப்பிலக்கியங்களுக்கென தொல்காப்பியர் கூறும் 32 உத்திகளையும் தவிர்க்கப்பட வேண்டிய 10 குற்றங்களையும் உரை ஆசிரியர்களின் உரை திறன்களுக்கு அளவு கோலாகக் கொண்டே உரை எழுதி இருக்கலாம் என்பதாலும், தொல்காப்பியம் தொடங்கி இன்று வரை, ''உரை விளக்கங்கள்'' ''தொடர்நிலை வளர்ச்சி''யாகப் பெருகி (Continuous Growth and Development) தமிழில் இலக்கியப் படைப்பாற்றலை மேன்மையுறச் செய்துள்ளது என்பது தெளிவாகிறது.

29. தமிழ் இலக்கியத்தில் இலைமறைவு காய் மரபாக வளர்ந்துள்ள இத்தகைய ''உரை வளத்தை'' இலக்கியத் திறனாய்வு என்ற இலக்கிய வடிவமாக தமிழ் அறிஞர்கள் ஏற்றுக்கொண்டு, உரை வளர்ச்சியில் இழையோடும் இலக்கியத் திறன்களை அவர்கள் ஆய்வு செய்வார்களானால், அவ்வாய்வு பாரம்பரியம் மிக்க தமிழ்மொழி மற்றும் இலக்கியத்தில், அதற்கென இலக்கியத் திறனாய்வு நெறிகள் (Critical Theories) இல்லையே என்ற குறை நீங்கி, மேலும் செம்மையுற்ற உயர்தனிச் செம்மொழியாக அது விளங்க ஏதுவாகும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

அடிக்குறிப்புக்கள்

10. அடிக்குறிப்பு 7இல் கண்டபடி ப. 99.

11. தமிழ்ப் பல்கலைக்கழக நூல்பட்டியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, . 993.

நூற்பட்டியல்

1. Ilakkuvanar Prof. S. - Tholkappiyam (in English) with Critical Studies - Kural Neri Publishing House, Madurai-1963.

2. Raghukul Tilak, History ane Principles of Literary Criticism; Rama Brothers, Educatianal Publishers, New Delhi-05.

பக்தி இலக்கியத்தில் தொல்படிவங்கள் : சில அணுகுமுறைகள்

முனைவர் சிவ. மங்கையர்க்கரசி,
தமிழ்த்துறைத் தலைவர், அரசினர் மகளிர் கல்லூரி,
மயிலாடுதுறை.

(முன்னிதழ் கூ௨-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திவ்வியப் பிரபந்தத்தில் திருமாலின் அவதாரச் செயல்கள் பலவற்றை ஆழ்வார்கள் மீண்டும் மீண்டும் புகழ்ந்து கூறக் காணலாம். கண்ணனோடு ஆழ்வார்கள் தங்களை ஐக்கியப் படுத்திக் கொண்டு அவன் பெருமை பேசுவது சிறந்த ஓர் இலக்கிய உத்தியாகும். பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் குலசேகராழ்வார் போன்றோர் தம்மைப் பல உறவு நிலைகளில் பாவித்துக் கொண்டு கண்ணன்பால் உள்ள அன்பை வெளிப்படுத்தி உள்ளனர். இவ்வாறு ஆழ்வார்கள் தொன்மத்தைக் கையாளும் மரபைப் பாரதியாரும் பின்பற்றுகிறார்: பாரதியார் 'கண்ணன் பாட்டி'ல் இறைவனைத் தன் தோழனாகவும், தாயாகவும், தந்தையாகவும், சேவகனாகவும், அரசனாகவும், சீடனாகவும, சற்குருவாகவும், குழந்தையாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும், காதலனாகவும், காதலியாகவும், ஆண்டாளாகவும், குலதெய்வமாகவும் கற்பனை செய்துகொண்டு சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களில் தொன்மங்களின் ஆதிக்கத்தைக் காணலாம். தமிழ்ச் சிறுகதைகளிலும், நாவல்களிலும்கூட தொன்மங்களின் செல்வாக்கைக் காணலாம். இலக்கியங்களில் அல்லாமல் பாமரமக்களின் உரையாடல்களிலும் தொன்மங்கள் இடம்பெறக் காணலாம். இராமாயண, மகாபாரதக் கதாபாத்திரங்கள், நிகழ்ச்சிகள், கருத்துக்கள் பல உள்ளவாறும், வேற்றுருவம் பெற்றும் வரக் காணலாம்: இராமன், பரதன், இலக்குவன், குகன், அனுமன், இராவணன், விடணன், கும்பகருணன், சீதை, தருமன், வீமன், விசயன், கர்ணன், பாஞ்சாலி ஆகியோர் வெவ்வேறு குணநலன்களைப் பிரதிபலிக்கும் மூலப்படிவங்களாகக்

கருதப்படுகின்றனர். விறலுக்கு வீமனையும், அறத்துக்கு தருமனையும், நேர்மைக்கு இராமனையும், கற்புக்குச் சீதையையும், கண்ணகியையும், வள்ளண்மைக்குக் கர்ணனையும் இலக்கியவாதிகள் மூலப்படிவங்களாகக் கொள்கின்றனர். இராமனை நல்லவனாகவும், இராவணனை இரக்கமற்றவனாகவும், கைகேயியை துரோகியாகவும், வீடணனை நல்லவனாகவும் கவிதைகளும், கதைகளும் காட்டுகின்றன. சிலப்பதிகாரத்தின் பாத்திரங்களான கண்ணகி, மாதவி, கோவலன் ஆகியோரின் மாற்றுருவங்களையும் தொன்மங்களாகத் தமிழ் இலக்கியங்களில் காணலாம். ஒரு கவிதையில் உள்ள உருக்காட்சிகள், படிமங்கள் ஆகியவற்றை ஆராய்வது பழம்பெரும் உரையாசிரியர்களுக்குக் கைவந்த கலையாயிருந்தது. தொல்காப்பியரும், உரையாசிரியர்களும் காட்டிய வழியில் தொடர்ந்து பணிபுரியாததால் தமிழ்த் திறனாய்வுத் துறையில் பின்னடைவு ஏற்பட்டது.

வரும்பொருள் உரைத்தல் :

எதிர்காலத்தைப் பற்றித் தெரிவிப்பதில் பஞ்சாங்கம் பார்த்தல், கைரேகை பார்த்தல், சரம் பார்த்தல், கூடல் இழைத்தல், சாமியாடிகள் மற்றும் நிமித்தக்காரர்கள் ஆருடம் சொல்லுதல், வள்ளுவர் என்ற சாதியார் வாக்கு கூறுதல், மற்றும் அகவல் மகளிர் என்று குறிப்பிடப்படும் குறத்திமார் குறி சொல்லுதல்' 'தொட்டியன்' கூறல், சோதிடர்கள் கணித்தல், கண்புருவம் துடித்தல், கொடுகுறி சாத்திரம், கிளி சோதிடம், நாடி சோதிடம் ஆகிய மரபுகள் தமிழ் நாட்டில் பரவியிருக்கின்றன. இப்போது நாளிதழ்களிலும் வார இதழ்களிலும் ராசிபலன் வெளியிடப்படுகிறது. ராசி பலனை ஆராயும் தனியிதழ்களும் வெளிவருகின்றன.

உடற் பகுதிகளில் பல்லி விழுவதை வைத்து வருங் காலத்தை முடிவுசெய்யும் வழக்கமும் தமிழகத்தில் உண்டு. பல்லி பலவிதம் சொல்லுவதாகவும் தமிழர்கள் நினைக்கிறார்கள். பல்லியின் ஒலியை ஆதாரமாகக்கொண்டு எதிர்காலத்தை அறிவிப்பதும் உண்டு. பல்லி சொல்லுக்குப் பலன் காண்பது பழந்தமிழர் வழக்கம். பஞ்சாங்கங்கள் இதை விவரமாகக் குறிப்பிடுகின்றன.

பல்லியின் சொற்குப் பயன் கொள்வதைப் பழந்தமிழ் நூல்களிலே காணலாம்.

''பல்லியும் பாங்கொத் திசைத்தது,
நல்லெழி லுண்கணுமாடு மாலிடனே''

என்பது பாவைக்கவி.

''பல்லியின் சொல்லொரு சொல்லெனக்
கொள்வரிப் பாகரத்தே''

என்பது திருவாய்மொழி.

''கொட்டான் பல்லிக்குட்டி
குடமாடி யுலகளந்த
மட்டார்பூங்குழல் மாதவனைவரக்
கொட்டாய் பல்லிக்குட்டி''

என்பது திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி.

திருவைந்தெழுத்து (பஞ்சாக்கரம்) :

திருஞானசம்பந்தர் ஓர் அருளியற் கவிஞர், அவர் தமது முதற் பதிகத்தைத் ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கினார். பிரணவத்தின் முதல அட்சரமாகிய ஓகாரத்தை காயத்திரி மந்திரத்தின் முதல் அட்சரமாகிய தகரத்தின் மீது வைத்துத் ''தோடுடைய'' என்றார். ஞானசம்பந்தர் பஞ்சாக்கரப் பதிகம் ஒன்றும், நமச்சிவாயப் பதிகம் ஒன்றும் பாடியுள்ளார். பன்னிதில், பஞ்சாக்கரம் ''வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது'' என்பார். மற்றும் ''நண்பால் சிவயா எனா நாவூர் மயானத்தே இன்பாயிருந்தானை ஏத்துவார்க்கு இன்பமே'' என்பார். பஞ்சாக்கரம் செப்புவார் எய்தும் பயன்களைச் சிவபுராண தருமசங்கிதை, வாயுசங்கிதை முதலியவை கூறும்.

திருவைந்தெழுத்து இருவகையாகக் கூறப்படும். 'நமசிவாய' என்று யசுர்வேதம் கூறும்; 'சிவாயநம' என்று தைத்திரீய ஆரணியகம் கூறும். இவை முறையே தூல பஞ்சாக்கரமும் சூக்கும பஞ்சாக்கரமும் ஆகும். இரண்டுமே ஐந்தெழுத்து ஆயினும், வெளிப்படையில் ஒலிப்பது 'நமச்சிவாய' மந்திரம், சிந்தையில் சிந்திக்கத்தக்கது 'சிவாயநம' மந்திரம் ஆகும். நமச்சிவாய என்பது இறைவன் பெயர். சிவாயநம என்பது இறைவன் மந்திரம்.

பாவை நோன்பு என்ற சமுதாயச் சடங்கினைக் கொண்டு ஐந்தெழுத்தின் உட்பொருளை திருவெம்பாவையில் விளக்கினார் மாணிக்கவாசகர். இத்தகைய பாவைப் பாடல்கள் ஓர் இனத்தின் பண்பாட்டுத் தனித் தன்மையை விளக்கும் தொன்மையுருக்கள் (arthetype of a race) என்று உளவியலறிஞர் சி. ஜி. யூங் கூறுகின்றார்.

நார்த்ராப்ஃபிரையின் தொன்மவியல் அணுகுமுறை பற்றிப் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. தொன்மவியல் திறனாய்வு மிகவும் அளவுக்கு மீறிய திட்ட வரையறைக்குள் சிக்கிக் கொள்கிறது. மேலும் அது இலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் இடையேயுள்ள உண்மைகளை அறவே புறக்கணிக்கிறது. இத் தொல்படிவங்களை உண்மையென்று சரிபார்க்கவும் வழியில்லை; ஆதாரமற்றவை எனக் கூறிப் பொய்யெனப் புறக்கணிக்கவும் முடியவில்லை; அதனால் அது அறிவியல் ஆய்வுமுறைக்கு அப்பாற்பட்டு விளங்குகிறது என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும், இருபதாம் நூற்றாண்டின் அறிவார்ந்த, பண்பாட்டுத் திறம் மிகுந்த தாண்டாற்றல் நிறைந்த திறனாய்வுகளுள் இதுவும் ஒன்று என்பது தெளிவு.

மனித வரலாற்றில் மீண்டும் மீண்டும் தோற்றம் தருகின்ற எந்தவொரு பழைய உருக்காட்சியும் 'ஆர்க்கிடைப்' பாகும் என்பர் யுங். 'ஆர்க்கிடைப்' எனப்படும் தொன்மங்கள் வாழ்க்கைக் கூறுகளை விளக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பர் ஃபிரை. மனித அனுபவத்தைச் சித்தரிப்பதோடு, அதற்கு விளக்கமும் தருகின்றது தொன்மம். அது கூறும் உண்மை, சான்றுகளால் நிறுவப்பட முடியாதது; ஆனால் அது வாழ்க்கையனுபவத்தின் அடிப்படையில் எழுந்தது என்க் கூறுவர் ஃபிரை. விஞ்ஞான அளவு கோல்களை வைத்துக்கொண்டு தொன்மங்களை அளவிடுவது தவறாகுமென்று வீல்ரைட் (Philip wheel wright) குறிப் பிடுகிறார். தொன்மமும் விஞ்ஞானமும் ஒன்றோடொன்று சேரமுடியாத வேறுபட்ட அனுபவங்கள். விஞ்ஞானம் இயந்திர மாதிரிகளைப் பற்றிப் பேசுவது; தொன்மம் மனிதர்களின் முழு அனுபவங்களைப் பற்றிப் பேசுவது என்று வேறுபடுத்திக் காட்டினார் ரைட். இலக்கியம் தொன்மத்தி லிருந்தே தோற்றம் கொள்கிறது. ஒரு கவிதையைப் பெற்றெடுத்த பெருமை கவிஞனைவிட தொன்மத்துக்கே அதிகமாகும் என்று கருதுவார் ஃபிரை இதுகாறும் கூறிய

வற்றால் கவிஞனுக்குத் தொன்மம் இன்றியமையாதது என்ற கருத்து விளக்கப்பட்டது.

மந்திரம்:

மந்திரத்தின் தோற்றம், அதன் செயல்முறைகள் ஆகியன குறித்து பல கள ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. அவற்றில் பிரேசர் (J. G. Frazer) மேற்கொண்ட ஆய்வு குறிப்பிடத்தக்கது. மந்திரம் எத்தன்மையானது? அது சமயத்தில் பெற்றுள்ள பங்கு என்ன? போன்ற கேள்விகளுக்கு விளக்கம் காணல் பொருத்தமாகும். தொன்மை மக்கள் இயற்கையின் சீற்றங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றலை செயல்படுத்தும் நிலையில் சில சூத்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினர். அதன் வெளிப்பாடே மந்திர மாகும். இது தொன்மை மக்களின் தொழில் நுட்பப் பற்றாக்குறையைப் போக்கத் தோன்றிய ஒரு கற்பனைத் தொழில் நுட்பமாகக் கூறப்படுகிறது. சமயச் சடங்குகள், வழிபாடுகள் போன்றவற்றில் மந்திரம் (Magic) ஒரு பிரிக்க வியலாத கூறாகும். இருப்பினும் சமயமும் மந்திரமும் வெவ்வேறு நோக்கங்கள் கொண்டவை. மந்திரம் தனி மனிதர் சார்ந்தது; அது நன்மைக்காகவும், தீமைக்காகவும் செயல்படுவது; அது ஒரு உடனடி முடிவைத் தேடிச் செய்வது. ஆனால் சமயம் சமூகத்தினர் அனைவரையும் சார்ந்தது; நன்மைக்காக மட்டுமே வேண்டப்படுவது; இம்மைக்கும் மறுமைக்கும் சேர்த்து ஒரு நீண்டகால முடிவைத் தேடி வேண்டுவது. இருப்பினும் சமயமும் மந்திரமும் மக்களின் வாழ்வில் இணைந்தே செயல்படுகிறது.

மனிதன் அடிப்படையில் சமுதாய — பண்பாட்டு விலங்காவான். சமுதாயம், பண்பாடு ஆகிய இரண்டும் மனிதன் அவனுடைய வாழ்வியல் தேவைகளை ஈட்டு வதற்காக ஏற்படுத்திக்கொண்ட கருவியாகும்; அதனால்தான் இடம், காலம், சூழலுக்கேற்ப மனிதன் அக்கருவியைத் தன் விருப்பம்போல் இயக்கிக் கொள்கிறான். பண்பாடு என்னும் அமைப்பு பல வடிவங்களில் மனித சமுதாயத்தில் செயல் படுகிறது. பண்பாடு மனிதனால் உருவாக்கப்படும் மதத்தில், கலைகளில், ஒழுக்கத்தில் மிளிருகிறது. உயர்ந்த இலட்சியத் திற்குத் துணை நிற்கிறது. மதம் மக்களின் வாழ்வியலில் பிரிக்க முடியாத அங்கமாகிவிட்டது. தொன்மைச் சமயம் தொடங்கி இன்றைய சமயம்வரை அனைத்துப் படிமலர்ச்சி

நிலைகளிலும் மந்திரம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது:

எட்டெழுத்து மந்திரம் :

உச்சியில் எண்ணெயும் சுட்டியும் வளையும் உகந்து
எச்சம் பொலிந்தீர்காள்! என்செய்வான் பிறர்பேரிட்டீர்!
பிச்சைபுக் காகிலும் எம்பிரான் திருநாமமே
நச்சுமின் நாராணன் தம்மன்னை நரகம்புகாள்;
(பெரியாழ்வார் திருமொழி 4: 6: 8)

மண்ணிற் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு அங்கு
எண்ணமொன் றின்றி யிருக்கு மேழை மனிசர்காள்!
கண்ணுக்கினிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் நாராணன் தம்மன்னை நரகம்புகாள்.
(பெரியாழ்வார் திருமொழி 4 : 6 : 7)

என்று பெரியாழ்வாரும்,

கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலே னதனால் பேதையேன் நன்மை
பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித் திரிதர்வேன்; தவிர்ந்தேன்;
செல்கதிக் குய்யுமா றெண்ணி
நற்றுணை யாகப் பற்றினே னடியேன்
நாராயணா வென்னும் நாமம்;
(பெ: தி. 1: 1: 8)

குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்; பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்—
நாராயணா வென்னும் நாமம்;
(பெ. தி. 1: 1: 9)

கான எண்கும் குரங்கும் முசுவும் படையா அடலரக்கர்
மானம் அழித்து நின்ற வென்றி அம்மான் எனக்கென்றும்
தேனும் பாலும் அமுதும்ஆய திருமால் திருநாமம்
நானும் சொன்னேன்; நமரும் உரைமின்
நமோநாராயணமே.
(பெரியதிருமொழி 6: 10 : 6)

பொங்கு புணரிக் கடல்சூழ்
ஆடைநிலமா மகள், மலர்மா
மங்கை, பிரமன், சிவன்,
இந்திரன், வானவர்நா யகராய
எங்கள் அடிகள் இமையோர்
தலைவ ருடைய திருநாமம்
நங்கள் வினைகள் தவிர
உரைமின் நமோநாராயணமே.
(பெரிய திருமொழி 6: 10 : 9)

மற்றுமோர் தெய்வம் உளதென் றிருப்பாரோடு
உற்றிலேன் உற்றதும் உன்னடி யார்க்கடிமை
மற்றெல்லாம் பேசினும் நின்திரு எட்டெழுத்தும்
கற்று நான் - கண்ண புரத்துறை யம்மானே!
(பெ. தி. 8: 10 : 4)

என்றெல்லாம் திருமங்கையாழ்வாரும் எட்டெழுத்து மந்திரத்தைப் பற்றிப் பேசுவர்.

(தொடரும்)

இரங்கல்

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார், மயிலம்.

கிருபா னந்த வாரியார் என்ற
பெருமான் உலகைப் பிரிந்தார் அந்தோ
திருவார் சமயம் செந்தமிழ் மொழியும்
ஒருமா தவரைப் பெறுமோ வுடனே.

மதிப்புரை

தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் வாழ்வும் பணியும்

[ஆசிரியர்: டாக்டர் அ. ம. சத்திய மூர்த்தி, எம்.ஏ., எம்பில், வெளியீடு: மகேந்திரன் பதிப்பகம், சாலியத் தெரு, அம்மா சத்திரம்-612103, தஞ்சை மாவட்டம், பக். 115, விலை: ரூ. 15-00.

ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர் தம் ஆய்வுப் பணிகளின் அகல ஆழங்களையும் இந் நூலில் ஆசிரியர் விளக்க முயன்றிருக்கிறார்.

எளிய பள்ளிப்படிப்பே படித்த இவ் அறிஞர் பல்கலைக் கழகமே போற்றிப் பாராட்டிப் பேணிப் புரந்த சிறப்பினைப் பெற்றவர்; பலராலும் பலகாலும் நம்பப் பெற்றிருந்த வரலாற்றுண்மைகளைத் தகர்த்து தம் ஆய்வை நிறுவிய துணிவு மிக்கவர்: கல்வெட்டுகளின் துணை கொண்டு பல உண்மைகளை நிறுவிய நுண்ணறிவு கொண்டவர் போன்ற இந்நூல் செய்திகள் நமக்குப் பெரு விருந்து.

இவர் தம் நுண்மாண் நுழைபுலம் கண்டு, இவர்தம் ஓய்வுக் காலத்திற்குப் பிறகும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரைப் பணியில் நிறுத்திக் கொண்ட செய்தி நம்மை மலைக்க வைக்கிறது.

கலாச்சாரச் சீரழிவால் நித்தமும் மூழ்கும் நம் இளைய தலைமுறைகளைக் காப்பாற்ற இத்தகு நூல்கள் பல நூறு இன்று நமக்குத் தேவை.

உங்கள் வானொலி

[ஆசிரியர்: கோ. செல்வம், எம்.ஏ., வெளியீடு: புவனம் பதிப்பகம், 18, சின்னப்பா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5, பக். 367, விலை: ரூ. 72-00.

செந்தமிழ்ச் செல்வர் கோ. செல்வம் தமிழுக்குத் தமிழர்க்கும் கிடைத்த மழை மேகம்; தகுதியறிந்து உதவும்

தாராள மனத்தர். அகில இந்திய வானொலியில் முப்பத்து நான்கு ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றியவர்.

தம பணிக்காலப் பட்டறிவுகளையெல்லாம் பட்டியலிட்டு 'உங்கள் வானொலி' என்னும் தலைப்புமிட்டு நமக்கு வழங்கியுள்ளார். இந்த ஒரு நூல் இவரின் அழியாப் புகழுக்கு நிலைத்த கல்வெட்டு!

வானொலி இயல் வளர்ந்த கதை இந்திய வானொலியின் வரலாறு போன்றவற்றை விரிவாக விளக்குகின்றார்; இந்தியாவில் வானொலி அறிமுகம் 1926இல் என்றும் தொலைக்காட்சி அறிமுகம் 1959 இல் என்றும் (பக். 17) அறிவிக்கின்றார். 'ஒலி அலைகள் ஒரு நொடிக்குள் உலக உருண்டையை ஏழு முறை சுற்றி வந்து விடும்' (பக். 33) எனக் கூறி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றார். 'மேடைப் பேச்சாளர்களில் பெரும்பாலோர் வானொலிக்கு வந்து தோல்வியையே கண்டிருக்கின்றனர்' (பக். 35) எனக் கூறுவது அதிர்ச்சி தருகிறது.

வானொலி பேச்சுகள் அமையும் முறை (பக். 44) நேர்முகம் தருபவர் நினைவிற்கு (பக். 58) வானொலிச் செய்தி (பக். 139) குரல் வளம் (பக். 278) என்பன பற்றி ஆழ—அகல ஆயும் ஆசிரியர், 'நாளைய வானொலி' (பக். 340) எவ்வாறு அமைதல் நலம் என்றும் நமக்கு யோசனைகள் வழங்குகின்றார்.

மக்கள் செய்தி—தொடர்பு பற்றிய கல்வி கற்க விழைவோர்க்கு இந் நூலைப் பாட நூலாக ஏற்கப் பல்கலைக் கழகங்கள் ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது.

கவிமாமணி வேலூர் ம. நாராயணன், எம்.ஏ.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10 00
திரு. வி. குமாரசாமி அவர்கள், சியூனியன் தீவு.	10 00
திரு. முருக விசாகநம்பி அவர்கள்	5 00
திரு. A. T. A, ஈஸ்வர அடிகளார்	5 00

தூத்துக்குடி திரு. தி. ந. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்	5 00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5 00
கல்லை. தே. கண்ணன் அவர்கள் [ஆசிரியர் 'வள்ளுவர் வழி']	5 00
பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்	5 00
திரு. K. வேணுகோபால், சென்னை-14	25 00
திரு. பழனி ஆறுமுகம் அவர்கள், சேக்கிழார் பதிப்பகம், கிள்ளான், மலேசியா.	25 00
திரு. த. ஆறுமுகம் அவர்கள், 51, வெங்கடராமய்யர் தெரு, சென்னை-79.	5 00
திரு. கார்த்திகேயன், வெண்ணிலா தமிழ் மன்றம் தம்புராமி நகர், திருவேற்காடு, சென்னை-77.	50 00
திரு. K. M. ஜக்கிரியா, B. Com., 3-89-L-3, ஆசாத் தெரு, இலந்தங்குடி-1.	10 00
திருமதி. M. சுப்புலட்சுமி அவர்கள், Sr. Lecturer, S. P. College, குற்றாலம்.	25 00

மறைமலையடிகள் கலைமன்ற வளர்ச்சிக்கு நன்கொடை

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியாளர்)	10 00
திரு. மு. சுப்பையா அவர்கள், கழக கிளை மேலாளர், கும்பகோணம்	10 00
திரு. இராசு அவர்கள், டெலிபோன் டிபார்ட்மெண்ட் குமரன்குன்றம், சென்னை-44.	20 00
திரு. செல்வமணி அவர்கள், சென்னை-44.	10 00

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்காக 80, பிரகாசம் சாலை, சென்னை-1, அப்பர் அச்சகத்தில் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிட்.

192458

கழகப் புதிய வெளியீடுகள்

திலகவதியார் நாடகம்—டாக்டர் அ. கலியபெருமாள்	25	00
சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம் —டாக்டர் எஸ். பி. சபாரத்தினம்	15	00
பாவேந்தர் பாட்டுக் கதைகள்—டாக்டர் பூவண்ணன்	15	00
பாட்டுத் தோட்டம் ,, ,,	20	00
தமிழனே இது கேளாய்—டாக்டர் முத்துக்குமரன்	30	00
அரசியல் மேதை அம்பேத்கார்—மோ. பாலசுப்பிரமணியம்	16	00
ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு புலவர் கா. கோவிந்தன்	30	00
In the Kingdom of Nataraja —Chantral Boulanger Tom Dawber	100	00
நாளிதழ் ஆசிரியர்—கருப்பையா, பி.ஏ.	85	00

தென்னிந்திய சிற்பங்களும் கோயில்களும்

கோயிற் கலைச்செல்வர் தி. இராசமாணிக்கம் 25 00

சிவனும், முருகனும், தேவியும் மட்டுமன்று; ஐயப்பனும், சித்திரகுப்தரும், சகலகலாவல்லியும், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரும் இவர் கண்களிலிருந்து தப்பவில்லை. போசளர் (கோசலர்), சாளுக்கியர் கட்டிய கோயிற் கலைச் செல்வங்களும், தூங்கானை மாடம், கரக்கோயில்களின் அமைப்புகளும், குடிமல்லம் பரசுராமேசுவரர் கோயில் போன்ற பகுதிகளும் படிக்கத்தகுந்தவை. பின்பகுதி சிறப்பாக எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்கின்றது. தமிழகக் கோயில்கள், பின்னிணைப்பு போன்ற பகுதிகள் கோயிற்கலையை அறிய உதவுகின்றன. கோயிற்கலையையும், தெய்வங்களின் பெருமைகளையும் இதைவிடச் சிறந்த நூல் விளக்கமாக வெளிவரவில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் 40 00

ஆரியம் கலவாத தமிழ்ப் பண்பாடு இருக்கின்றதா? என்று தமிழ் மக்களே வினவத் தொடங்கிய காலத்தில், அத்தகையதொரு சிறந்த பண்பாடு சிறந்தோங்கி வளர்ந்துள்ளது என்பதைச் சான்றுகளுடன் நாகரிகம், சமயம், கலைகள், பொழுதுபோக்கு என்ற தலைப்புகளில் எழுதியுள்ள மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் நூலை வரவேற்றுத் தம பெருமையை பெருமிதத்துடன் படித்துப் பயனடைய் உதவுகின்ற இந்நூலை எல்லோரும் வரவேற்க வேண்டும். சிறந்த தூயதமிழ் நடையையும் பாராட்டிப் பயன்பெறுவார்கள் என்பதும் எங்கள் எண்ணமாகும்.

Asian Educational Services

(C-2-15, SDA, New Delhi-110016.)

Branch: No. 5, Sripuram First Street,
Royapettah, Madras-600014.

Phone No. 8265040

A Comprehensive Tamil and English Dictionary —WINSLOW M.		165	00
English Tamil Dictionary —WINSLOW		165	00
Abithana Chinthamani-Encyclopaedia of Tamil Literature —SINGARAVELU MUDALIAR		165	00
Thirukkural Original Tamil with English Translation —DREW & LAZARUS	GB	50	00
	HB	35	00
	PB	20	00
Tamil Moli Akarathi (Tamil-Tamil Dictionary) Coming Shortly —KATHIRAIVER PILLAI		165	00
A Grammar of the Common Dialect of the Tamil language —JOSEPH BESCHI		145	00
Dictionary of Tamil Proverbs —LAZARUS JOHN		195	00

Books can be had of :

The South India Saiva Siddhantha Works,
Publishing Society, Tinnevely Ltd., Madras-18.
154, T. T. K. Road, Madras-18.

Branches:

79, Prakasam Saalai (Broadway), Madras-108.
Tirunelvelli 6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1 Trichirappalli-2. Salem-1

அப்பர் அச்சகம், சென்னை-108.